
# விஷக்கோப்பை

(சாக்ரடீஸ்)




சி.பி.சிற்றரசு

# விஷக்கோப்பை

## (சாக்ரடீஸ்)

சி.பி. சிற்றரசு

உலகப் பதிப்பகம்

31, தையப்ப முதலி தெரு,
சென்னை-1
தொலைபேசி : 22913

விலை ரூ. 2

முதற் பதிப்பு 1952
இரண்டாம் பதிப்பு 1954
மூன்றும் பதிப்பு 1958
நான்காம் பதிப்பு 1962
ஐந்தாம் பதிப்பு 1969

D/C 10·9 Kg. வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது.

ஜெம் பிரஸ், சென்னை-1.

# என் எண்ணம்

---

மக்கள் அறிவு வளர்ச்சி பெற வேண்டும், அரசியல்வாதிகள் வரலாற்றை உணர வேண்டும், மாணவர்கள் இரண்டையும் அதாவது, அறிவையும், வரலாற்று உண்மைகளையும் பெறவேண்டும், எல்லாவற்றையும் விட அனைத்தையும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதாலே எனக்கு எப்போதும் ஒரு கவலையுண்டு. ஏன்? எனக்கு நானே தெரிந்துக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வம். அதன் காரணமாகத்தான் 1952இல் பல வெளிநாட்டு அறிஞர்களைப்பற்றி எழுதத் தொடர்ந்தேன். ஒரு நூலை எழுதத் தொடங்குமுன் அதை மன்றங்களிலோ பல்கலைக் கழகங்களிலோ நான் பேசி விடுவது வழக்கம். அதே நிலையில்தான் இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்தன. அவைகள் தீர்ந்து விட்டபடியால் உலகப் பதிப்பகத்தார் மீண்டும் அவைகளை வெளியிட முன் வந்திருக்கின்றனர். முதலில் தர்க்கஞானி சாக்ரடீஸ் கொள்கைகள், அவரது வாழ்க்கைக் குறிப்புகளடங்கி 'விஷக்கோப்பை' என்ற தலைப்போடு வெளிவருகின்றது. நண்பர்கள் என்றும் போல் ஆதரிப்பார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. என் எழுத்துப் பணியை ஊக்குவிக்கும் அனைவர்க்கும் நன்றி.

*15—1—1969*

அன்பன்,
சி. பி. சிற்றரசு

# விஷக்கோப்பை

## அறிமுகம்

ஏதென்ஸ் நகரக் கலைக்கோயிலின் தலைவாயிலிலே கம்பீரமாக நிற்கின்றான் ஓர் தத்துவஞானி. தலை சிறந்த தர்க்கவாதி, தன்னைத்தானே அறிந்து, தான் அறிந்ததை அகில உலக மக்களறிய ஆவல்கொண்டு, அறிவுத் தாகத்தால் அலைந்துகொண்டிருந்த இளைஞர்களின் இருதயத்தைத் தொட்டு, அவர்கள் மனவிருளை நீக்கி ஒளி பரப்பிய அறிஞன். அவனுக்கு முன்னும் அப்படி ஒருவன் பிறந்ததில்லை. அவனுக்குப் பின்னும் அப்படி ஒருவன் இதுவரைத் தோன்றவில்லை. இனி எப்போதாவது தோன்றுவானா என்பதும் ஐயமே.

எக்காலத்திலும் இறந்துவிடாததோர் இலட்சியத்திற்காக, இறப்பதை இன்பமாக ஏற்றுக்கொண்ட சிந்தனையாளன். தீராப்பழி தன்மேல் சுமத்தப்பட்ட போதும், நயவஞ்சக சர்க்காரால் நச்சுக்கோப்பையை தனக்களிக்க வேண்டுமென்ற தீர்ப்பைப் பெற்ற போதும், தன் கொள்கையில் மாளாத அன்புகொண்டு கையிலே நஞ்சையும், நெஞ்சிலே வீரத்தையும் ஏந்தி மாண்ட மாவீரன்.

இடியும் மின்னலும் நிலைநடுக்கமும்போல, எதிரிகளும் எத்தர்களும் பொறுமையால் தன்னை வாய்ப்போருக்கழைத்தபோதும், இடம்விட்டுப் பெயராமல் இடம்பர்களின் வாதத்தை விலாமுறிய அடித்த வாதகேசரி.

இயேசு தோன்றாத காலம், நபிகள் பிறக்காத காலம், சமணமத சாயல் படியாத நேரம், புத்தர் பொன்மொழிகளை பூதலமறியாத காலம், சீனத்தில் டாயஸ் மதம் தோன்றாத காலம், மகான் கன்பூஷியஸ் தோன்றாத காலம், குருநானக் என்பவரால் சீக்கிய மதம் தோன்றாத காலம், மகாவிருடபர் என்பவரால் சைனமதம் தோன்றாத காலம், அதாவது இன்றைக்கு 2421 ஆண்டுகட்கு முன்பு, "கிரீசின் கண்" என்று உலக மக்களால் போற்றப்பட்ட ஏதன்ஸை சிற்பக் கலையால் சிறப்பிக்கச் செய்த பிடியாஸ் என்ற சிற்ப ஞானி, தான் அழகுபடச் செய்த சிற்பங்களின் மௌனத்திலேயே மறைந்துவிட்ட காலம்.

"நான் கல்லுக்கும் மண்ணுக்கும் பிறக்கவில்லை. ஒரு பெண்ணுக்குத்தான் பிறந்தேன்" என்று சொன்ன பேரறிஞன்* [redacted] எனும் பெருமகன் தோன்றுவான் என்றே நினைக்காத காலம், சாவென்பதே இன்னதென்றறியாத போது சாவையே நினைத்து நினைத்து அழுதுக்கொண்டிருந்த் காலம். காலம் எனும் புயல் நாதத்தைக் கனவேகமாக ஓட்ட அதை அறியாதவர்கள் காலத்தை ஓட்டுவது எப்படி என்று கவலையிலாழ்ந்திருந்த நேரம், பொய்யறிவை

* அரிஸ்டாடல்

மெய்யறிவென நம்பிய மக்களின் நுண்ணறிவைத் தூண்ட ஒரு மெய்ஞானி தோன்றுவான் என்று எண்ணுாத காலம். தோன்றினன் ஒரு வீரன். அறிஞன், தற்கவாதி, தக்கோரிவரெனவும், தகவிலாரிவரெனவும் தரம் பிரித்துக் காட்டிய தன்னுணர்வாளன் தோன்றியே விட்டான்.

ஏதன்ஸை எல்லா முறைகளிலேயும் மேம்படச் செய்த, பெரிக்லஸ் என்ற பேரரசன் அநியாயமான பழிகள் சுமத்தப்பட்டுச் சிறையில் வாடி, அந்த இருட்டு குகையிலேயே மடிந்துவிட்ட காலம்.

இளமையில் இயற்கை நூல், பௌதிகம், வான நூல், நிலநூல் ஆகியவைகளைப்பற்றி நன்கு படித்துணர்ந்து, முதல் மனைவி இறக்கத், தனது 40-வது வயதில் இரண்டாவது மணம் செய்துகொண்டு, பிலிப்போனேஷிய யுத்தத்தில் காலாட்படையில் போர் வீரனுகச் சேர்ந்து, போட்டிடோ என்ற ரணகளத்தில் தன் படைத் தலைவனுடைய தலையைக் காப்பாற்றி, அதற்குச் சன்மானமாகத் தான் பெறவேண்டிய இராணுவ கௌரவத்தைத் தன் படைத் தலைவன் ஆல்கிபிடியாஸ் என்பவனே அடையும்படிச் செய்த பொதுநலவாதி, கருணை வள்ளல்.

டேலியம், அம்பிபோலீஸ் என்ற இரு பயங்கரமான போர்க்களத்தில், தன் நாட்டுப் போர்வீரர்கள் சலித்துப் பின் வாங்கியபோது, உற்சாகமூட்டி வெற்றி கண்ட சுத்த வீரன்.

நீதியும் அரசியலும் ஒரு வரையறையின்றி நிலை தடுமாறி நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில், நீதியை நிலைநாட்ட அரசியல் கருத்துக்களை ஆராய்ச் சிக் குகந்தவை என்று எடுத்தோதியதோடல்லாமல் "மக்களை உணர்வது மக்களின் கடமை" என்பதை முதன் முதலில் வெளியிட்ட அறிவுக் களஞ்சியம்.

தான் ஓர் அரசாங்க ஊழியனாக இருந்தபோதுஞ் சரி, சுதந்திரமாகத் திரிந்தபோதுஞ்சரி, நீதிமன்றத் தில் அங்கத்தினனாக இருந்தபோதுஞ்சரி, அதே நீதி மன்றத்தில் அவன் குற்றம் சுமத்தப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட போதுஞ்சரி' எப்போதும் நீதிக்கு விரோதமாக, நேர்மைக்கு மாறாக நடக்காத நேர்மை யாளன். "செல்வத்தால் சீலம் வருவதில்லை, சீலத்தால் வேண்டுமானால் செல்வம் வரலாம்", என்ற தத்து வத்தை தந்தவன், சிந்தனையின் உலைக்கூடமாகத் திகழ்ந்தான் சீலமிக்க சாக்ரடீஸ்.

தன் அறிவின் மூலம் மக்களைப் புதியதோர் பாதையில் புகுத்தினார். தமது ஆராய்ச்சிக்காக அவர் எடுத்துக்கொண்ட கருத்து ஆண்டவனைப்பற்றியது மாத்திரமல்ல, அன்றாட வாழ்வில் மக்கள் மையத்திலே விளையாடும் சொற்கள், அவர் காட்டிய வழியும், கையாண்ட முறையையும் மிகமிகப் புதியது.

" தத்துவத்தை விண்ணுலகினின்று மண்ணுலகுக் கும் கொணர்ந்தவர் சாக்ரடீஸ்" என்று பெருமிதம் கொள்கிறான் ரோமாபுரி சிசீரோ. " 30 ஆண்டுகளாக மக்களோடு உரையாடி தம் அறிவைப் பெருக்கினார்

கிரீசில் மட்டுமல்ல, உலகிலேயே வேறு எவரும் இல்லை,'' என்று மெகாரா, திரேஸ் என்ற நகரங்களின் பேரறிஞர்கள் போற்றினர்.

எங்கெங்கே எதிர்மறை முகத்தான் வாதிடுவது எப்படி என்று கேட்கப்படுகிறதோ அங்கே சாக்ரடீஸ் நிற்கிறான். இன்னும் எல்லா பல்கலைக் கழகத்திலும் போதிக்கப்படுகிற (Socratic method) 'சாக்ரடீஸ் வழி' என்னும் பாட நூலின் ஒவ்வோர் இதழியிலும் விஷக் கோப்பையைக் கையிலேந்தி நிற்கிறான் சாக்ரடீஸ்.

மேகத்தோடு மேகம் உராய்வதால் ஒரு ஒளியுண்டாவதைப் போல் சொற்களோடு சொற்களை மோத விட்டு இடையிலே எழும் ஒரு பேரொளியாய் நிற்கிறான் சாக்ரடீஸ். அவன் கல்லறைப் புழுதி மேடாய்விட்ட தென்றாலும் இன்னும் அவன் திருப் பெயர் பழுதில்லாதிருக்கிறது.

தனது தத்துவத்தைக் கேலி செய்யும் முறையில், அரிஸ்டோபேனிஸ், என்ற பிரபல நாடகாசிரியன் மேகங்கள் என்ற நாடகமெழுதி, அதில் தன்னை ஒரு பாஷாண்டி என்றும், பிழைக்க வழியில்லாதவனென்றும், மனபேதப்பட்ட பைத்தியக்காரனென்றும்; கோழிக் கூண்டில் தான் உலவிக்கொண்டு, "இதுதான் உலகம்'' என்று நினைக்கும் அறிவிலி என்றும், கேலி செய்யும் முறையில் முப்பதினாயிரம் பேர்கள் ஒருங்கு கூடி நாடகம் பார்ப்பதற்குண்டான வசதிகளோடு கட்டப்பட்டிருந்த ஒரு நாடகக் கொட்டகையில்,

இந்த நாடகம் நடைபெற்றதைப் பார்த்து, ஆசிரியனுடைய அறியாமைக்கிரங்கி புன்சிரிப்போடு திரும்பிய கலைக்களஞ்சியம் சாக்ரடீஸ்.

ஆணவ வெறியால் பலரைப் பழிவாங்க அதிகார வர்க்கம் சீறியபோதெல்லாம் எச்சரித்து, அது நல்வழி நடக்கத் தன் சுடரொளி காட்டிய கலங்கரை விளக்கம். நீதியை நேர்வழி நடக்க ஒட்டாமல் தடுத்த பல சண்டாளர்களைத் தன் வினவிடையால் திடுக்கிடச் செய்த தன்னுணர்வாளன்.

தனது சிந்தையைப் புலன்களில் புகவிடாது எளிதில் தன்வயப்படுத்திக்கொண்ட விவேகி. வாழ்விழந்த பலருக்கு வாழ்வின் பிறப்பிடத்தைக் காட்டிய பெரியோன், நமது மதிப்புக்குரிய தத்துவஞானி சாக்ரடீஸ்.

ஏதன்ஸ் நகரவாசிகளைப்பற்றி மெகாலே பின்வருமாறு கூறுகிறன். "ஏதன்ஸ் நகர மக்கள் பிற நாட்டு மக்களைக் காட்டிலும் பன்மடங்கு அறிவிற் சிறந்தவர்கள். ஒவ்வொருவனும் நீதியறிந்தவனும், போர் வீரனும், நீதிபதியுமாவான். மிகவும் எளிய நகரவாசிக்கும் பிழைக்க வழியையும், கவலையற்று ஓய்ந்திருப்பதற்கு வசதியையும், நாட்டை நடத்திச் செல்லும் நல்லதோர் அறிவையும், இன்பமாய்ப் பொழுதுபோக்கும் சாதனங்களையும் அந்த நாட்டுக் குடியரசு தந்தது."

அப்பேர்ப்பட்ட நாட்டில் பிறந்த சாக்ரடீஸ் எவ்வளவோ பயங்கரப் போர்களும், அதனல் மாற்றி

கிழிக்கப்பட்ட நாட்டின் எல்லைக் கோடுகளும், புதுப் புது நாடுகளை நமக்குக் காட்டிய கடல் கொந்தளிப்பும், நில நடுக்கமும், எரிமலைக் குமுறலும், எவ்வளவோ விஞ்ஞானக் கருவிகளும், அரசாங்கமும், அதன் ஆட்சி பீடமும் மணிமுடியும் செங்கோலும் அவைகளின் சட்டங்களும் தோன்றித் தோன்றி மறைந்தன. எனினும், சாக்ரடீஸ் அன்று தோன்றியவன் இன்றும் எழுத்துருவில் - கருத்துருவில்; தோன்றுகிறான். இவ்வுலகம் முடியும்வரைத் தோன்றுவான். ஏன்? அவன் உலகுக்களித்தது அழியாத அறிவுச் செல்வம்.

பாரசீக மன்னனாகிய ஜெர்ஜெக்ஸ் என்பவன் கிரேக்க நாட்டைக் கட்டியாள எண்ணி, ஆசியாவும் ஐரோப்பாவும் சந்திக்கும் இடமான பாஸ்பரஸ் நீர் சந்திப்பைப் படகுப் பாலத்தால் ஏழு நாட்கள் இரவு பகலாகக் கடந்து கிரேக்க நாட்டை முற்றுகையிட்ட போது, அப் பாரசீக மன்னனைப் புறங்கண்ட வீர மரபினர் முகாமிலே இருந்து போரிட்ட வீர வேங்கை சாக்ரடீஸ்.

வாலிபத்தில் ஆர் கேலாஸ் என்ற பண்டிதருடன் ஒரு முறை சாமாஸ் நகருக்குச் சென்று, அந்த நாட்டில் புகழோடு வாழ்ந்து வந்த பேரறிஞர் Zeno சீனோ என்பவரிடம் எதிர்மறை முகத்தான் சொற்போர் நடத்தும் திறமையைக் கற்றுக் களிப்பெய்திய கல்விக் கடல் — அறிவின் வற்றாத ஊற்று — ஆற்றலின் களஞ்சியம் சாக்ரடீஸ்.

ஜெகத்தைச் சிந்தனைக்கூடமாக்க எண்ணிய இவன் மேல், “சீரழிக்க வந்தவன், கிரேக்கர்கள்

தொழுது வரும் கடவுள்களை பொய்யென்று தூற்றித் தான் ஒரு புதுக் கடவுளை உண்டாக்குகிறான், இளைஞர்களைக் கெடுத்துவிடுகிறான்.'' என்ற குற்றஞ் சாட்டித் தன் குற்றச் சாட்டை மெலிடஸ் என்பவன் பின்வருமாறு படிக்கிறான் நீதிமன்றத்தில்.

## குற்றச்சாட்டு

"பித்தஸ்பேட்டையில் இருக்கும் மெலிடஸ் என்பவரின் மகன் (மெலீடஸ்) என்பவன், அலோபேக் பேட்டையில் வசிக்கும், காலஞ்சென்ற சோப்ரோ னிஸ்கஸ் மகன் சாக்ரடீஸ் மீது பின்வருமாறு குற்றஞ் சாட்டுகின்றேன்.

ஏதன்ஸ் நாட்டு மக்களும் அரசாங்கமும் எந்தக் கடவுளர்களைத் தொழுகிறார்களோ, அந்தக் கடவுளர் களைத் தொழுகிறதில்லை. அதற்குப் பதிலாக இவன், இதற்கு முன்பில்லாத புதிய கடவுள்களைப் புகுத்து கிறான். வானத்தைப் பற்றியும் நிலத்தைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றான். சந்திரனை மண் என்றும் சூரியனைக் கல்லென்றும் சொல்லுகின்றான். புதிய மதக் கோட்பாடுகளைப் புகுத்துகிறான். சாக்ரடீஸ் மிகவும் தீயவன். கடவுளால் விவரிக்கப் படாத மறை பொருள்களைத் துருவியறிவது இவனுக்கு எப்போதும் பொழுதுபோக்காக உள்ளது. இவன் கெட்டதை நல்லதைப்போல் நாட்ட வல்லவன். நல்லதைக் கெட்டதைப்போல் நாட்ட வல்லவன். மற்றும், இளைஞர்களைத் தன் பேச்சின் வன்மையால்

கெடுத்து விடுகிறான். ஆதலின் மெலிடஸ் என்ற வாதியாகிய நான் இவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
மெ. மெலிடஸ்,
பித்தஸ் பேட்டை, ஏதன்ஸ்.

நீதிமன்றத்தில் இன்று குற்றவாளியாக நிறுத்தப் பட்டிருக்கிறோமே, என்பதற்காக அவன் கவலைப்படவில்லை. காரணம், அவன் குற்றம் செய்யாததால். தன்னை ஒரு காலத்தில் 'நீதிமான்' எனக் கௌரவித்த அதே நீதிமன்றத்தில், இவன் தன் உயிருக்காகப் போராடிக் கண்ணீர் மல்கிக் கால் நடுக்கத்தோடு நிற்கவில்லை. உண்மைக்காகப் போராடித் தன் உயிரையே அர்ப்பணித்தான்.

இவனுக்கு முன் டையகோரஸ் இதையே பேசினான். முக்கியமாகக் கடவுளர்களைப்பற்றிப் பேசினான். சிறப்பாக சில ஆபாசக் கருத்துக்களடங்கிய, அதாவது தாயையே தாரமாக்கிக் கொண்ட ஏராஸ், தங்கையைத் தாரமாக்கிக் கொண்ட ஜூவெஸ் போன்ற கிரேக்கக் கடவுள்களைப் பற்றியும் பிறவற்றைப்பற்றியும் கருத்தில்லா பூசாரிகளும் மதத் தலைவர்களும் கட்டிவிட்ட பொய்க் கதைகளைப் போருக்கழைத்தான் டையகோரஸ். சிரித்தனர் சிலர்; சீறினர் பலர். ஒளியில்லாத காலத்தில் வாழ்ந்த அந்த மக்களால், சிந்தைக்குச் செயல் கொடுக்க

எண்ணுத அந்த கிரேக்கத்தின் பெருங்குடி மக்களால் 'டையகோரஸ் அழிக்கப்பட வேண்டியவன்' என்றனர். அந்த கொக்கரிப்பைக் கண்டு பயந்து மிலோஸ் என்னும் தான் வாழ்ந்திருந்த ஊரை விட்டோடி கோரிந்த் என்னும் நகருக்குள் மறைந்தான் டையகோரஸ்.

டையகோரஸ் உயிரை நேசித்தான். உடலை நேசித்தான். சாக்ரடீஸ் கொள்கையை நேசித்தான், நீதியை நேசித்தான், எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டை நேசித்தான்.

டையகோரஸ் உயிருக்காகப் போராடினுன்.

சாக்ரடீஸ் வெற்றி வீரன்போல் நஞ்சையருந்தி சாவின் சன்னிதானத்திலே நுழைந்தான்.

ஆனுல் சாக்ரடீஸ் தன் உயிரையும் தன் தாயகமாம் ஏதன்ஸ் நகரத்தில் அதுவும் அதன் சிறைச்சாலையில் தன் நண்பர்கள் புடைசூழ, மலர்ந்த முகத்தோடு கை நடுக்கமில்லாமல் கடும் விஷத்தைக் குடித்துக் கண் மூடினுன். டையகோரஸ் ஊரைவிட்டே ஓடினுன். சாக்ரடீஸ் ஓடவும் இல்லை, ஒளியவும் இல்லை. இந்த இருவருக்குமிடையே இருந்த காலம் மிகக் குறுகியதுதான். டையகோரஸைப் பரிகசித்த மக்கள் சாக்ரடீஸின் பேராற்றலைக் கண்டு திடுக்கிட்டனர். அத்தகு அறிவுக் களஞ்சியமான அப் பெரியோன் அன்றும் பேசினுன். இன்றும் நம்மிடையே பல முறைகளில் பேசிக்கொண்டிருக்கின்ருன். "சாகத் துணியமாட்டான் சாக்ரடீஸ் விண்ணப்பம் செய்து

மன்னிப்புக் கேட்டு வாழக் கெஞ்சுவான்.'' என்று நினைத்து ஏளனம் பேசிய ஈரமில்லா நெஞ்சினர் அவன் சமாதிக்கடியிலேயே மௌனம் சாதித்துவிட்டனர்.

“தோல்வி யாருக்கு,'' என்பதை இன்னும்,ஏதன்ஸ நீதிமன்றத்தின் முன் கட்டப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மணியை யாரும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அது அன்றே, தோல்வி, மெலிடஸ், அனிடஸ், லைகோன் என்ற மாபாதகர்களுக்கு. வெற்றி, நமது வீரனும் சாக்ரடீசுக்கு என்று பலமுறை தன் நாவால் பகர்ந்து விட்டது. இனியும் சந்தேகமா? ஏதன்ஸ் நீதிமான் களே! என்று யாரும் இப்போது கேட்கத் துணிய மாட்டார்கள். சாக்ரடீஸ் நஞ்சுண்டு இறந்த நாளன்று நடத்திய சவ அடக்கத்தின்போதே, சாலை களையெல்லாம் சாகரமாக்கி விட்டார்கள் ,மக்கள் தம் கண்ணீரால். சாக்ரடீசாகிலும் தன் கொள்கைக் காக நஞ்சுண்டு மாண்டான் அவனைக் கொல்ல முன் வந்த மூடக்கொள்கைகள் அவ்வளவும் தானாகவே செத்துவிட்டன. தான் செத்துக் காட்டி தன் எதிரி களின் எண்ணத்தைச் சாகடித்தான்.

நீதியைத் தேடிச் சென்றவர்களைத் தைரியமாக அழைத்துச் சென்றவன் சாக்ரடீஸ். அதனாலாய பலனை மட்டும் மக்களுக்குப் பங்கிட்டளித்துத் தண்டனையை மாத்திரம் தான் ஒருவனே ஏற்றுக்கொண்ட தைரிய வான். சேயின் நன்மைக்காக மருந்துண்ணும் தாயின் குணம் படைத்த தலைவன். அநீதிக்குச் சாகா வரமிருந் தாலும், அதன் நிழலில்கூட நிற்க அஞ்சிய அறவோன்.

நீதியை நிலை நாட்டப் பலிபீடம் நோக்கிச் சென்ற நெஞ்சுரம் படைத்தவன். தன் வாதத்தை ஏதன்ஸ் நீதிமன்றத்தின்முன் நிலை நாட்ட நிற்கிறான். அவனுக்காக வழக்கறிஞன் ஒருவன் 500 பக்கங்கள் கொண்ட வாதத்தை ஏந்தி முன்வந்தான். ஆனால், இவன், அவனைப் பேசவிடவில்லை. குற்றவாளிக்காக மற்றொருவன் பேசுவது சரி அல்ல. ஆகவே, வேண்டாமென மறுத்து அவனே பேசுகிறான். அவனைவிட மேலாக அன்றும் இன்றும் யார் பேசினார்கள்? ஆகையால் அவனே பேசுகிறான். அதனால், அவன் இன்று நம்மிடையே உயிரோடிருக்கிறான். உண்மை சாக்ரடீஸ் சாகவில்லை. அவன் தாங்கியிருந்த உடல் இல்லை. அவன் சொன்ன உண்மைகளிருக்கின்றன. ஆனால் அவனைக் கொல்லச் சதி செய்து குற்றவாளியாக்கிக் கூண்டில் நிறுத்திக் கொன்றுவிட்ட கொடியவர்களும் இன்று உயிரோடில்லை சந்திரனில் களங்கமும், சாகரத்தில் புயலும், சோகத்தில் சிரிப்பும் இருப்பதைப்போல, ஏதன்ஸில் இந்தச் சண்டாளர்கள் இருந்தார்கள்.

சாகப்போகின்ற ஒருவன், சாகத் துணிந்த ஒருவனை 'சாகடித்துவிட்டேன்', என்று அற்ப சந்தோஷப்படுகிறான், அதை விளக்கத்தான் அறிவொளி பரப்பிய அண்ணல் சாக்ரடீஸ் பேசுகிறான்.

"இறப்பதும் பிறப்பதும் மாற்றமுடியாத நியதி. ஆனால், என் வாதங்களை உங்கள் தர்க்கத்தால் மாற்ற முடியுமானால் மாற்றுங்கள்" என்று மார்தட்டிக் கேட்ட சாக்ரடீஸ் முன்பு, செத்தவர்கள் போலானார்

கள் அந்த செல்லாக் காசுகள். ஆனால், சாக்ரடீஸ் சாகடிக்கப்பட்டான். அதுதான் விந்தை! கொடுமை கோரத் தாண்டவம் புரிந்துகொண்டிருந்தபோது, நீதி தன் உதட்டின் ஓரத்திலேயே சிரித்துக்கொண்டிருந்தது. அநீதி ஆரவாரம் செய்து கொண்டிருந்த போது நீதி மௌனம் சாதித்துக் கொண்டிருந்தது போலும். அதன் சாயல் அப்படியே இன்றளவும் படிந்துவிட்டது. மடிந்தும் பேசுகிறான் சாக்ரடீஸ். தன் அருமை நண்பன் பிளாட்டோ மூலமும், மகாவீரன் அலெக்சாந்தரின் ஆசிரியனை அரிஸ்டாட்டல் மூலமும் பேசிக் கொண்டிருக்கின்றான். தர்க்கவாதம் புரியும் பல்கலைக்கழக முதல் மக்கள் வசிக்கும் இடமெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றான். தன் மரண தண்டனைக்கு முன்பு மன்றத்தில் பேசினான். காலமெல்லாம் பேசினான். பேசிக்கொண்டே இருக்கின்றான். அவன் பேசிய வாயின் அசைவு நின்றது. நாடித் துடிப்புகள் நின்றன; உடல் குளிர்ந்தது; கடைசி மூச்சு அருகில் நின்றோர் உகுத்த கண்ணீரைத் துடைத்தது. அவன் எதையும் எழுதி வைக்கவில்லை. தனக்கென்று ஒரு மன்றமும் அமைத்துக் கொள்ளவில்லை. பின்பற்றுவோர் இன்னார்தான் என்றும் அவன் யாரையும் நியமிக்கவில்லை. எனினும் பேசுகிறான். இறவாக் காலமே! இன்னும் எத்தனையாண்டுகள் சாக்ரடீஸ் பேசிக்கொண்டிருப்பானோ? கால வெள்ளத்தாலும் அவன் கருத்துக்கள் அடிபட்டுப் போகவில்லை. இடையே ஏற்பட்ட பெரும் பெரும் பூகம்பத்தாலும் அவன் அறிவொளி மங்கி மடிந்துவிடவில்லை. ஆனால், அன்று தன் உயிரை நீதிக்குக் காணிக்கையாக வைத்து

ஏதன்ஸ் நீதி மன்றத்தில் கம்பீரமாக நின்று தலை நிமிர்ந்து தன்னம்பிக்கையோடு பேசுயது, இதுதான் :-

## நீதி மன்றம்

"எழில் கொழிக்கும் ஏதன்ஸ் நகர நீதிமான்களே! இந்த என்னுடைய எழுபத்திரண்டாவது வயதில் முதன்முதலாக இப்போதுதான் நான் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறேன். இதற்குமுன் நான் எப்போதுமே இந்தக் கோலத்தில் நுழைந்ததில்லையாகையால், எந்த விதமான கண்ணியம் வாய்ந்த வார்த்தைகளை இங்கே கையாளவேண்டும் என்பதும் எனக்குப் புதியதாக இருக்கிறது. பழக்கமில்லாத காரணத்தால் நான் ஏதாவது தவருன வார்த்தைகளைப் பயன்படுத்தி விட்டால், நீதி மன்றத்தில் இதுவரை நிற்காத ஓர் ஏழை, அதுவும் பழக்கமில்லாதவன் என்ற காரணத் தால் என்னை உங்கள் காருண்ணிய உள்ளத்தால் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் குழந்தைப் பருவமுதல் இந்த என் வயோதிகப் பருவம்வரை பார்த்தால் நான் வாழ்ந்த இந்த எழுபத்திரண்டு ஆண்டுகள் மிகப் பெரிய காலம் ஆகும். ஆனுல் நித்திய தத்துவத்தோடும், அழிவில் லாத காலத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது காலவேகத்தில் அடித்துக்கொண்டு போகும் அணுவுக்கு அணு என் வாழ்நாள்.

செழித்தோங்கும் கலைக்கோயிலாம் கிரேக்கத்தின் கீர்த்திமான்களே! நான் என் தத்துவத்தை மக்களி

டையே சொல்ல ஆரம்பிக்கும்போது, இங்கே நீதிமான் களாக வீற்றிருக்கும் உங்களில் மிகப்பலர் சிறுபிள்ளை களாக இருந்தீர்கள். என்றாலும், அந்த ஒரு காரணத் திற்காகவே இந்தக் குற்றமற்றவனுக்கு நீதி வழங்கும் பெருமைக்குரிய மக்களாக வீற்றிருக்கும் உங்களை நான் அவமதிக்கமாட்டேன். நான் அப்படிச் செய் வேனானால், என் தாய் நாட்டின் சட்டத்தையும் நீதி யையும் அவமதித்தவனாவேன். என்மேல் சுமத்தப் பட்டிருக்கும் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு எனக்கு மரண தண்டனையே அளிப்பதானாலும், என் குழந்தை களை இந்த நீதிமன்றத்தின் காலடியில் கிடத்தி நான் உயிர்ப் பிச்சை கேட்கப் போவதில்லை. நான் அப்படிச் செய்வேனானால் என் குழந்தைகளின் பரிதாப முகங் களைப் பார்த்து நீதியிலிருந்து நீங்கள் தவறி விடவும் கூடும். நீதியின் வல்லமையை என் குழந்தைகளின் கண்ணீரால் மறைக்க நான் எண்ணவில்லை. ஏனெனில், நான் தவறுடையவனா அல்லவா என்று நிரூபிக்கப் பட்டால், அதனால் வரும் தண்டனை, அல்லது மன்னிப்பு ஆகியவைகளுக்கு நானே நேரடியான பொறுப்பாளி. ஆகவே, என்னால் காப்பாற்றப்படுகிற, அல்லது என் ரத்தபாசத்தில் கலந்த, அல்லது என் நன்மை தீமை களில் கவலை கொண்ட யாருமே கட்டுப்பட்டவர்கள் அல்ல. ஏன், என்மேல் குற்றம் சுமத்தியிருக்கிற எதிரிகளேகூட கட்டுப்பட்டவர்கள் அல்ல. ஏனென் றால், பொய்க்குற்றம் நிரூபிக்கப்பட்டு, நான் அடையப் போகும் தண்டனையைப் பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டுமென்று நாக்கில் நீர் ஊறிக்கொண்டிருக்கும் அவர்களை ஏன் என் துக்கத்தில் துணை சேர்க்க

வேண்டும் என்பதினுல்தான். நீண்ட நாட்களாக என்மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களுக்கெல்லாம், எனக்களிக்கப்பட்டிருக்கும் இந்தக் குறுகிய காலத்தில் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.''

## நிரபராதி நிற்கிறேன்!

''நடுநிலையறிந்த நகரத்தார்களே! நண்பர்கள், சுற்றத்தார், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், உள் நாட்டார், அயல் நாட்டார், அரசாங்க ஊழியர்கள், அஃதல்லாதார் என்ற பாகுபாடில்லாமல் நியாயத்தை வழங்க வாள்முனையில் உறுதி செய்து கொண்ட உத்தமர்களாகிய உங்கள் முன்னிலையில் நிற்கிறேன். கண்டோர் வியக்கும் கலைக்கோயிலாம் ஏதன்ஸை தலைநகராகக்கொண்ட கிரேக்க நாட்டில் பிறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன். மற்ற நாடுகள் எல்லாம் மக்களுக்கு எதையெதையோ கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தபோது, சிற்பக்கலை, விஞ்ஞானம், சட்டம், சமுக அமைப்பு, அரசியல், ஆராய்ச்சி நீதி, நேர்மை, நட்பு, ஆகியவைகளைப்பற்றியே தன் மக்களுக்குப் போதித்து வந்த ஏதன்ஸ் நீதிமன்றத்தின் முன் குற்றவாளி என்ற பேரால் நிற்கிறேன்''.

உலகத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை அடக்கியாண்ட பெர்ஷிய மன்னன் டேரியஸ் என்றவனைப் புறமுதுகிடச் செய்த வீரனும் எர்குலஸ் என்ற ஏந்தலின் முன்னேனை வயோதிகன் நீதிக்காக இரு கையேந்தி நின்று மேலும் பேசுகிருன்.

ஒரு மனிதன் தான் அடைந்திருக்கும் வயோதிகத் துக்காக கவலைப்படக்கூடாது. பிறகு ஏன் எல்லா வயோதிகர்களும் ஏகமனதாகக் கவலைப்படுகின்றூர் கள்? வயோதிக காலத்தில் தான் இறந்துபோவது திண் ணம் என்ற எண்ணம் வந்துவிடுகின்றது. உடனே அச் சம் உண்டாகிறது. அதுவரை நினையாத எண்ணங்களை எல்லாம் அப்போது எண்ணத் தொடங்குகின்றுன். “இந்த உலகத்தில் கெட்ட காரியங்களைச் செய்கிற வர்கள், மறு உலகத்தில் தண்டனை அடைவார்கள்” என்று சொல்லப்பட்ட வரலாறு அவன் ஒரு காலத்தில், அதாவது, இளமையில் கற்பிக்கப்பட்டிருக்கின்றுன். வயோதிகம் வந்த பிறகு அவைகளெல்லாம் உண்மை யாக இருக்குமோ என்று கவலைப்படுகிறுன். வயோதி கத்திஞல் ஏற்பட்ட உடல் மெலிவிஞலோ, அல்லது மறு உலகத்துக்குச் சமீபத்தில் இருக்கிறேமே என்ற பயத்தி ஞலோ, தான் அடையப்போவதாக நினைத்துக்கொண் டிருக்கும் தண்டனைகள் தன் கண்முன் தாண்டவ மாடுகின்றன. “நான் யாருக்காவது ஏதாவது தீமைகள் செய்திருக்கின்றேஞ” என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்கிறுன். தான் செய்த பல அநியாய காரியங்கள் அவன் நினைவுக்கு வருகின்றன. தூங்கிக்கொண்டிருக்கின்ற ஒரு குழந்தை பயத்திஞல் எப்படித் திடீரென விழித்துக் கொள்ளுமோ, அதைப் போலவே அவன் தன் பழைய காரியங்களைப்பற்றி நினைத்துக்கொண்டு, அவைகளுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என பயப்படுகின்றுன். எவன் ஒருவன் தன் மனப்பூர்வமாக யாருக்கும் எந்தவிதமான தீங்கும் செய்யவில்லை என்று உணர்கின்றுஞே, அவன் வயோதிக

காலத்தில் நம்பிக்கையோடு வாழ்கின்றான். இந்த நம்பிக்கைதான் தள்ளாத வயதில் தாதி போல் இருந்து உதவுகிறது.''

" நெறியுடையோனை, தூயவாழ்வினனை, நம்பிக்கை எனும் மாதேவியே நடத்திச் செல்கின்றாள். வயோதிகத்தில் தாதியாய், வழிநடையில் துணைவியாய் இருக்குமவள், அலையுறும் ஆத்மாவுக்கு ஆறுதலளிக்கின்றாள்." என்று கூறிய பிண்டார் என்ற நமது கவிஞன் பொற்கவிதையை இங்கே நினைவு படுத்துகிறேன். ஆகவே நான் எந்தவித அபாயங்களுக்கும் அநியாயங்களுக்கும் சோர்ந்து விடுவதில்லை. ஏனெனில் இதுவரை நான் யாருக்கும் எவ்விதத் தீங்கும் இழைத்ததில்லை; இழைக்க எண்ணியதும் இல்லை. ஆகவே, என் நிழலே என்னைப் பயங்கரப் படுத்தியதில்லை. ஆதலால் பிறர் நிழலைப் பார்த்து நான் பயப்படத் தேவையில்லாமல் போய்விட்டது.

## குற்றச்சாட்டு

என்மேல் என் நண்பர் மெலிடஸ் அவர்கள் சுமத்திய குற்றங்களில் முதன்மையானது, நான் சாமர்த்தியமான பேச்சாளி, என்பது. அதுதான் அவர் சொல்லிய பொய்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய பொய். அப்படியே அவர் குற்றச்சாட்டு உண்மையாயிருக்குமானால் அந்தப் பேச்சின் வண்மையில் நீங்கள் யாரும் மயங்கிக் கட்டுப்பட்டுப் போகக் கூடாதென்பதே என் முதல் வேண்டுகோள். அறிந்தோ அறியாமலோ என் எதிரி ஒரு உண்மையை ஒப்புக்கொண்டதற்காக

மகிழ்ச்சி அடைகிறேன். குற்றம் சுமத்தி உங்கள் முன்பாக நிறுத்தப் பட்டிருக்கும் என்னை ஒரு சாமர்த்தியமான பேச்சாளி என்று அவரே கண்ணியமாக ஒப்புக்கொண்டதற்காகப் பெருமைப்படுகிறேன். இங்கே நான் நல்ல பேச்சாளி என்று குறிப்பிடுவது உண்மை பேசுபவனையே குறிப்பிடுகிறேன். அந்த வகையில் நான் அதை ஒப்புக்கொள்கிறேன். நான் வாய் திறந்தால் பொய் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்துகொள்ளும். அநீதி என் வழியில் குறிக்கிடுவதில்லை. அக்ரமங்களைச் சகிக்க என் மனம் ஒப்புக்கொள்வதில்லை. டம்பக்காரர்களை நான் என்றும் போற்றிப் புகழ்ந்ததில்லை. பணக்காரர்களிடம் நான் எப்போதும் முகமன் பேசி என் காரியங்களை சாதித்துக் கொள்ள எண்ணியதில்லை. நான் பட்டினி கிடந்து சாக நேர்ந்தாலும் உண்மையல்லாத ஒருவனிடம் நெருங்கியதில்லை. இவைகளேயன்றி நான் ஒரு நல்ல பேச்சாளியல்ல என்பதை என்னுல் நிருபிக்க முடியும். ஏன், நான் இப்போது பேசுவதிலிருந்தே நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஆனல் உண்மையைச் சொல்லும் ஒரு சாதாரண மனிதனை நல்ல பேச்சாளிகள் பட்டியலில் சேர்க்க எண்ணினல் நான் ஒரு நல்ல பேச்சாளியாக மாத்திரமல்ல, அதைவிடப் பல படிகள் மேலான ஆவேச பேச்சாளி என்றே ஒப்புக்கொள்கிறேன்.

இரண்டாவதாக என்மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றம்;—நான் ஆகாயத்தைப் பற்றியும், நிலத்தின் அடிவாரத்தைப் பற்றியும் ஆராய்வதால், நான்

கடவுள் நம்பிக்கையற்றவன் என்பது. இது எவ்வளவு மோசமான குற்றச்சாட்டு என்பதை ஏதன்ஸ் நகர நீதிமான்களே! நீங்களே ஆராய்ச்சி செய்து பாருங்கள். தனக்கு விருப்பமான ஒன்றில் உள்ளத்தைச் செலுத்தி உண்மையைக் கண்டு பிடிக்க விரும்புகின்ற ஒருவனை நாத்திகன் எனக் குற்றஞ்சாட்டுவது எவ்வளவு மோசமான பழி என்பதை எண்ண என் மனம் வேதனைப் படுகிறது. கண் இருப்பதால் பார்க்கின்றேன், கால் இருப்பதால் நடக்கின்றேன். கைகள் இருப்பதால் வேலை செய்கின்றேன். காதுகள் இருப்பதால் கேட்கின்றேன். வாய் இருப்பதால் பேசுகின்றேன். அதே போல் உள்ளம் இருப்பதால் சிந்திக்கின்றேன்! இது எப்படித் தவறாகும் என்று எனக்கே தெரியவில்லை. "மோசமான கருத்துக்களை அழகான காரணங்களால் நிலை நாட்டுகின்றேனும்." இவ்வளவு கெட்டஎண்ணத்தோடு இந்த நல்ல வாதங்களை எல்லாம் பொய்முலாம் பூசி வெளியுலகுக்குப் பரப்பிய அவர்களே மிக மிக அபாயமான மனிதர்கள் என அஞ்சுகின்றேன்.

வஞ்ச நெஞ்சத்தோடு என்னை வழக்கு மன்றத்தில் நிறுத்திய என் எதிரிகள் யாரையும், உங்கள்முன் நிறுத்தி நான் குறுக்கு விசாரணை செய்ய விரும்பவில்லை. நான் அப்படிச் செய்ய விரும்பினால், எதிரியோடு போராட முடியாத வீரன், எதிரியின் நிழலோடு போராட விரும்புகின்ற கோழைக்கொப்பானவனாவேன். ஏனெனில், என்னுடைய நியாயமான எதிரிகள் அநீதியும் அறவின்மையுந்தான். இவர்களெல்லாம் அவைகளின் நிழல்கள். மேலும் அவர்கள் யாரும்

என்னுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லமாட்டார்கள். இதுவரை அவர்கள் சொல்லியதுமில்லை. வேண்டுமானுல் நண்பர் மெலிடஸ் அவர்களைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்!

## குறுக்கு விசாரணை

நீதிமான்களே!....உங்கள் கட்டாயத்துக்காகவும், நீதி மன்றத்தின் சம்பிரதாயத்திற்காகவும் சிறிது நேரம் மெலிடஸ் அவர்களைக் குறுக்குவிசாரணை நடத்துகிறேன்.

சாக்ரடீஸ்: இங்கே வாருங்கள் மெலிடஸ்! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். வாலிபர்களை எப்படிச் சீர்திருத்த வேண்டும், யார் சீர்திருத்த வேண்டுமென்றுதானே நீங்கள் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள்!.

மெலிடஸ்: ஆமாம்.

சாக்: அப்படியானுல், அந்த வாலிபர்களை யார் சீர்திருத்துகிருர்கள் என்று நீதிபதிகளிடம் கூறுங்கள்.

மெலி: சட்டங்கள்.

சாக்: நண்பரே! நான் அதைக் கேட்கவில்லை. யார் அவர்களை சீர்திருத்துகிருர்கள். சட்டங்களா? மனிதர்களா?

மெலி: இதே நீதிமான்கள்.

சாக்: இவர்கள்தான் வாலிபர்களுக்குப் போதித்து சீர்திருத்திஞர்களா?

மெலி: ஆமாம். உண்மையாக இவர்கள்தான்.

சாக்: இவர்கள் எல்லோருமா, அல்லது ஒரு சிலரா?

மெலி: எல்லாருந்தான்.

சாக்: தெய்வத்தின்மீது ஆணை. இதோ கூடியிருக்கிறார்களே இந்த மக்கள்?

மெலி: இவர்களுந்தான்.

சாக்: செனெட்சபை உறுப்பினர்கள்?

மெலி: அவர்களுந்தான்.

சாக்: ஆகவே என்னைத்தவிர ஏதென்ஸ் நகர மக்களனைவரும் வாலிபர்களைச் சீர்திருத்துகிறார்களல்லவா?

மெலி: ஆமாம்.

சாக்: ஓர் ஐயம். குதிரைகளை எடுத்துக்கொள்வோம். அவைகளை ஒருவன்மட்டிலும் துன்புறுத்தி உலகிலுள்ள மற்றெல்லோரும் அதற்கு நன்மை செய்கிறார்களா? அப்படிச் சொல்வது உண்மைக்கு நேர்மாறானதல்லவா? ஒருவனுக்குத்தான் அப்படிச் செய்ய முடிகிறது. பலபேருக்கு அப்படிச் செய்ய முடியவில்லை. அதாவது குதிரையைப் பழக்குகிறவன் நன்மை செய்கிறான். பயன்படுத்துகிறவர்கள் தீமை செய்கிறார்கள். இது உண்மைதானே? மெலிடஸ்? இன்னுமொரு கேள்வி கேட்கிறேன். கெட்டவர்களோடு வாழ்வது நல்லதா — நல்லவர்களோடு வாழ்வது நல்லதா? தன்னோடு இருப்பவர்களால் தனக்கு

நன்மை ஏற்படுவதைவிட தீங்குதான் ஏற்பட வேண்டுமென்று யாராவது நினைப்பார்களா? பதில் சொல்லுங்கள்.

மெலி: உண்மையாக விரும்பமாட்டார்கள்.

சாக்: நான் இளைஞர்கள் மனதைக் கெடுத்துவிடுகிறேன் என்று குற்றஞ் சாட்டுகிறீர்களே, தெரிந்து சொல்கிறீர்களா, தெரியாமல் சொல்கிறீர்களா!

மெலி: (மௌனம் சாதிக்கிறான்.) மெலிடஸ் தக்க விடையளிக்கத் தெரியாமல் விழிக்கிறான்.

சாக்: பார்த்தீர்களா நீதிமான்களே! இவரே இப்படி என்றால் மற்ற இருவரை ஏன் விசாரிக்க வேண்டும். ஆனால் நீங்கள் ஒன்று கேட்கலாம் — நீயே அகால மரணத்தைத் தேடிக் கொள்ளப் பார்க்கிறாயே! இது உனக்கு வெட்கமாக இல்லையா? என்று நீங்கள் கேட்கக்கூடும். அதற்கு நான் ஒரு தெளிவான பதிலைக் கூறுகிறேன்! மனிதன் எவனும் சாவைப்பற்றியோ வாழ்வைப்பற்றியோ எண்ணிக் கொண்டிருக்கக் கூடாது. தான் செய்யும் காரியம் சரியா, தவறா என்று மட்டுமே, அவன் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனால், உங்கள் கருத்துப்படி பார்த்தால், டிராய் நகரில் மடிந்த வீரர்கள் எதற்குமே தகுதியற்றவர்கள் என்றாகிவிடுமே. அவர்கள் மானமிழந்து வாழ்வதைவிட ஆபத்தில் சிக்கி வாழ்வது சிறந்தது என்று கருதிய தெடிசின் மகன் அகிப்பஸை நீங்கள் வீரனாக மதிக்கமாட்டீர்கள்

என்றுதான் ஆகிவிடும். அவன் ஹெக்டரைக் கொல்லத் துடித்தபோது அவனுடைய தெய்வத் தாய் தெடிஸ்தேவி, "உன் தோழனுன பட்ராக்ளஸை ஹெக்டர் கொன்ருன் என்பதற்காக இப்படி பழி வாங்கினுல் நீயும் சாக நேரும். ஹெக்டர் மடிந்ததும் விதி உன்னை இதே மாதிரி பழி வாங்கக் காத்திருக்கிறது." என்ற முறையில் எச்சரித்திருக்கிருள். எவ்வளவு எச்சரித்தும் தெடிஸ்தேவியின் மகன் அகிப்பஸ் ஆபத்தையும் சாவையும் பொருட்படுத்தவில்லை. அவற்றுக்கு அஞ்சவுமில்லை. மானம் இழந்து வாழ்கிருேமே, நம் நண்பன் மடிந்ததற்குப் பழி வாங்காமல் இருக்கிருேமே என்றுதான் அஞ்சினுன். "இப்போதே நான் சாகத் தயார்தான். இப்படி இங்கே பகைவர்கள் குத்தீட்டியுடன் நிற்கும் கப்பல்களுக்கு அருகில் போய்ச் செத்தாலும் சாகிறேன்." என்கிருன். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்ன? அவமானம் நேருமே என்று கவலைப்பட வேண்டுமேதவிர, சாவைப் பற்றியோ மற்றதைப்பற்றியோ கவலைப்படக் கூடாது.

மூன்ருவது குற்றச்சாட்டு:—நான் இளைஞர்களைக் கெடுத்துவிட்டேன் என்பது. நான் எந்த வகையில் அவர்களைக் கெடுத்துவிட்டேன் என்பது எனக்கே புரியவில்லை. ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல, முப்பது ஆண்டுகளாக நான் சொல்லிக்கொண்டு வந்திருக்கின்றேன். ஒருவனுக்கு, பிறர் சொல்வதைப் புரிந்து

கொள்ளுகிற வயது 10 என்று வைத்தால் 40 வயதுடைய மனிதனாகும் வரையிலாவது நான் சொல்லியதை அவன் கேட்கும் வயதடைந்திருப்பான். என்னுடைய இந்த முப்பதாண்டுப் பிரசாரத்தை ஏதன்ஸ் நகரம் எப்படிக் கேட்டு சகித்துக்கொண்டு வாளாவிருந்ததோ, தெரியவில்லை. அல்லது முப்பது ஆண்டுகளில் வராத ஆபத்து இப்போது என்ன வந்து விட்டதோ, அதுவும் எனக்குப் புரியவில்லை. இவ்வளவு நாட்கள் சகித்துக்கொண்டிருந்தது, தனி மனிதன் சுதந்திரத்தைத் தட்டிப் பறிக்கக் கூடாதென்ற தயாள சிந்தனையினாலா, என்பதும் எனக்குப் புலப்படவில்லை. அல்லது எனக்களித்த சுதந்திரம் முதலில் இளமையோடிருந்ததால் சரியாக வேலை செய்து, இப்போது அந்த சுதந்திரத்திற்கு நாளாய் விட்டதால் கிழடு தட்டிப் போய்விட்டதோ என்னவோ தெரியவில்லை. ஆனால் வாதி இப்போது காட்டும் காரணங்கள், எந்த ஆண்டவனை மக்கள் நம்புகிறார்களோ, எந்தச் சக்தியின்பேரால் உயிரினங்கள் இயங்குகின்றனவோ, அதற்கப்பாலான ஒன்றைக் கற்பித்து, இளைஞர்களை நம்பும்படிச் செய்தேன் என்பது. இந்த இடத்தில் எதிரி தன்னையுமறியாமல் ஓர் உண்மையை வெளியிட்டு விடுகிறார். அதாவது, எல்லோரும் நம்பும் ஒன்றுக்கப்பாலானதை நான் நம்புவதோடல்லாமல், இளைஞர்களை நம்பும்படி செய்தேன் என்பது. அப்படியானால் எதையோ ஒன்றை நம்புகிற ஒருவன், எப்படி நாத்திகன் ஆக முடியும் என்பதை நீதிமான்களாகிய நீங்களே தீர்மானிக்கவேண்டும். அந்தக் குற்றச்சாட்டை

உறுதியாக்க அவர் எடுத்துக்கொண்ட உதாரணங்கள்; "சூரியனைக் கல் என்றும், சந்திரனை மண்" என்றும் நான் சொன்னேன் என்பது. இந்த உதாரணங்கள் மூலம் மெலிடஸ் என்னை மாத்திரம் குற்றவாளியாக்க விரும்பவில்லை. இதே கருத்துக்களைச் சொன்ன அறிஞர் அனெக்ஸகோரஸ் என்பவரையும் குற்றவாளியாக்கிக் கூண்டில் நிறுத்த எண்ணுகிறார். ஆனால் நல்ல வேளையாக அவர் இன்று உயிரோடில்லை. அதை என் எதிரி உணர்வதற்கு முன்பே படித்துவிட்டு, இங்கே நீதிபதிகளாக வீற்றிருக்கும் உங்கள் மதியை மிகமிகக் குறைத்து மதிப்பிடுவதோடல்லாமல், நீங்கள் அனைவரும் அரசாங்கத்தின் முத்திரையில்லாதவர்கள் என எண்ணியது மட்டிலுமல்ல, நீங்கள் அந்த அறிஞன் அனெக்ஸகோரஸின் கருத்துக்களைப் படிக்காதவர்களென்றும் எண்ணுகிறார். இதே கருத்துக்களைத்தான் நான் இளைஞர்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். இப்போது முடிவு கூறுங்கள், நான் நாத்திகனா, என்று.

குழந்தையைத் தாய் ஈன்றாள், தந்தை படிக்க வைத்தான், ஆசான் கல்வி போதித்தான், அரசாங்கம் மனிதனாக்கியது, நண்பர்கள் நல்லவனாக்கினார்கள், நீதிமான்கள் நீதியையும் நேர்மையையும் போதித்தார்கள். இவ்வளவு பேர்கள் சேர்ந்து கூடி நல்லவனாக்கிய ஒருவனை நான் கெடுத்துவிட்டேன் என்றால், இவ்வளவு பேர்களுடைய சக்தியைக் காட்டிலும், என் சக்தி மேலானது என்பதற்காகப் பெருமைப் படுகின்றேன்.

இதைப்போலவேதான், நான் கவிஞர்கள், அரசியல்வாதிகள், மேதைகள் ஆகியவர்களைப்பற்றி எண்ணங் கொண்டிருந்தேன். அதனால் தான் கவிஞர்கள் சார்பாக மெலிடசும், அரசியல்வாதிகள் சார்பாக அனிடசும், மேதைகள் சார்பாக லைகோனும் வழக்குத் தொடுத்தார்கள். நான் நெருங்கிப் பார்த்த மேற்சொன்ன கவிஞர்களும், மேதைகளும் அரசியல் வாதிகளுமாகியவர்களைப்பற்றி நான் மிக மலிவான கருத்தைக்கொள்ள வேண்டி வந்தது.

குதிரைமேல் ஏருமல் எப்படி குதிரை ஏற்றம் கற்றுக்கொள்ளமுடியாதோ! புல்லாங் குழலைத் தொடாமல் எப்படி அதை இசைக்க கற்றுக்கொள்ள முடியாதோ! நீரில் இறங்காமல் எப்படி நீந்தத் தெரிந்துகொள்ளமுடியாதோ! அதைப் போலவே நான் ஆராய்ச்சியில் இறங்காமல் எப்படி ஒரு உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும்?

அந்த முயற்சியில் நான் இறங்கியபோது இது வரை ஏதன்ஸ் மாநகரம், தவருக நினைத்துக்கொண்டாடிக் கொண்டிருந்த எந்த உண்மையான பிறவி மேதையையும் நான் காணமுடியவில்லை. பிறரின் அறியாமையால், 'மேதை' எனக் கொண்டாடப்பட்ட ஒருவனை, என் உள்ளம் உண்மையான மேதை என ஒப்புக்கொள்ள மறுத்தது. அதனுல் நான் பல கேள்விகள்மூலம் அவர்களைத் திருத்த முற்பட்டேன். அவர்களுடைய வெளி வேடங்களினுல், அவர்கள் சொல்வதெல்லாம் மக்கள் அறிவுக்கே எட்டாத ஓர்

புதிர், ஆகவே, அந்த மகான்களிடத்தில் பக்தி செலுத்த வேண்டும் என்று பக்கத்தில் இருந்த பாமர மக்களைத் தூண்டிய அவர்கள் படாடோபத்தையும் போலி பக்தர்களையும் என் சிந்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. பல நாட்கள், ஒன்றுமறியாத மக்களை ஏமாற்றித் திரிந்த அவர்களுடைய உண்மையான நய வஞ்சக நாடகத்தை மக்களுக்குக் காட்ட, அவர்கள் முன்பு தொங்கவிடப்பட்டிருந்த திரையைக் கிழித் தெறிந்தபின், மக்கள் கைகொட்டிக் கேலி செய்ய ஆரம்பித்தனர். அதன் பயனாக அவர்கள் தவறை உணர்ந்து திருத்திக்கொள்வதற்குப் பதிலாக என் மேல் ஆத்திர நெருப்பை அள்ளி அள்ளி வீசினார்கள். அதன் விளைவுதான் நான் இன்று உங்கள் முன்பாகக் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கின்றேன்.

நான் தெய்வீகத்தை நம்புகின்றேன் என்று என் நண்பர் மெலிடஸ் ஒப்புக் கொள்ளுகின்றபோது நான் எப்படி நாத்திகனாகமுடியும். படையை ஒப்புக் கொள்ளுகிற நான் எப்படி படைத்தலைவனை மறுக்க முடியும். படைப்பும் ஆண்டவனின் சட்டவிரோத மான குழந்தைகளா? அல்லவா? என்பதை இன்னும் உலகம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வராமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. ஆனால், நான் கல்லையும் மண்ணையும் ஆண்டவன் என ஒப்புக்கொள்ள மறுக் கிறேன். நான் மாத்திரமல்ல. சாமாஸ் நகரத்தில் வாழ்ந்த ஜீனோ என்பவர் "நான் கல்லுக்கும் மண் ணுக்கும் பிறக்கவில்லை. ஒரு பெண்ணுக்குத்தான் பிறந் தேன்." என்று சொன்னதையே நான் இங்கே வலியு

றுத்துகின்றேன். ஆண்டவனைப்பற்றியும் அவனுடைய படைப்பைப்பற்றியும் ஆராய்ச்சி செய்வதோ நாத்தீக மென்று சொன்னால், ஆண்டவனை ஒப்புக் கொள்ள எங்கே மறுத்து விடுகிறார்களோ என்று பயப்படுவது அதைவிட நாத்தீகம் என்பேன். ஆண்டவனைத் தொழுவதும், விடுவதும் அவரவர்கள் தனிப்பட்ட கருத்துக்களேயன்றி, ஆண்டவனை எங்கேயோ இருந்து இழுக்கச் சமுதாய வலையை வீசி வீண் பொழுது போக்கலும், வெட்டி விவாதங்கள் நடத்தலும், வேடிக்கையில் தொடங்கி வாள்கொண்டு தாக்கி ஒருவர்க்கொருவர் வெட்டி மடியக்கூடாதென்பதே என் நோக்கமாகும்.

"உலகில் நிலைத்துள்ள பொருள் யாதொன்றுமில்லை. யாதேனுமிருப்பினும் அதை நாம் உணர முடியாது. அவ்வாறென்றிருந்து அதனை நாம் உணர்ந்தாலும், பிறர்க்கு அதைத் தெரிவிப்பது இயலாத காரியம்," என்று அறிஞர் ஜார்ஜியாஸ் என்பவர் வெளியிட்ட கருத்துக்களையும் இதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்கிறேன். மேலும், "தெய்வங்கள் உண்டென்பதும், தெய்வத்தின் குணம், ஆற்றல் முதலியன இவை என்பதும், நாம் ஒரு முடிவாகக் கூறக்கூடியதல்ல. நமது வாழ்நாள் அதற்குப் போதாது. மனிதனின் ஐம்புல உணர்ச்சிக்கும் மனத்திற்கும் எட்டாத பொருள்களே உலகிலில்லை." என்று பித கோரஸ் என்ற ஆதிதத்துவ ஞானி உரைத்ததையும் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகின்றேன்.

எந்த நண்பராவது என்னைப் பார்த்து, “ இப்படி வம்புகளை வளர்த்துக் கொண்டு சாகத்துணிகின்ருயே, இது உனக்கு வெட்கமாக இல்லையா ? என்று கேட்டால், நான் அமைதியாகவும் அன்பாகவும் இப்படித் தான் பதில் சொல்வேன் :— நண்பரே! என்னைப் போல பொது விசாரணையில் ஈடுபடுகிற ஒருவன், தன் வாதம் சரி என்பதற்காகவோ தவறென்பதற்காகவோ சாகப் பயப்படுவதைவிட கேவலமும், அவமானமும் வேருென்றுமில்லை. பொது விவகாரங்களில் ஈடுபடுகிறவன்தான் செத்துவிடுவான் மற்றவர்களெல்லாம் சாகாமலே இருப்பவர்கள் என்று நினைக்கின்றீரே, அந்த எண்ணத்தைத் தயவுசெய்து மாற்றிக் கொள்ளுங்கள் என்பேன். சொல்லைக் காட்டிலும் செயலுக்கு வன்மை அதிகம் என்பதை நான் உணர்வேன். ஆகவேதான் உயிருக்காக நான் அஞ்சுவதில்லை. ஆனல் அநீதிக்கே நான் மிக மிக அஞ்சுகிறேன். மனிதர்களிடம் தர்க்கிக்கிறேன், அவர்கள் நல்வழிப்பட வேண்டுமென்பதற்காக. அவர்கள் வெறும் சிரம் வைத்த பொம்மைகளாக இல்லாமல் சிந்திக்கத் தகுந்தவர்களாக வேண்டும் என்பதற்காக.

ஆனல் நான் மனிதர்களிடம் தர்க்கிப்பதற்கு முன்பாக, என்னை நானே தர்க்கித்துக்கொண்டேன். ஏன் பிறந்தேன். எதற்காக வளர்ந்தேன். என்னுல் பிறர்க்கு என்ன பயன். நாட்டால் எனக்கென்ன பயன். ஒரு நாட்டுக்கு ஒரு மனிதன் எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியும். அதனையும் நாட்டுப் பற்றையும் சேர்த்து வைப்பது எந்த சக்தி. படித்

தவன், படிக்காதவன், வீரன், கோழை, வியாபாரி, தொழிலாளி, சமூகம், சட்டம் ஆகியவைகளால் ஒரு நாட்டுக்கு என்னென்ன நன்மைகள் உண்டாக முடியும். நாட்டாட்சியில் ஒருவனுக்குள்ள நியாயமான பங்கென்ன? என்ற பிரச்சினைகளைப் படிப்படியாக எழுப்பி ஒவ்வொன்றுக்கும் தக்க விடைகளைக் கண்டுபிடித்து என்னை நான் அறிந்த பிறகே பிறரைப்பற்றி அறிந்து கொள்ள முற்பட்டேன். ஒரு ஏதன்ஸ் நாட்டினனுக்கு அரசியல் சுதந்திர சாசனத்தின்மீது சிந்திக்கும் உரிமையுண்டு என்பதை எண்ணுமல், கொலைகாரனைப்போல் என்னைக் கருதும் தோழர்களுக்காக நான் வருந்துகிறேன். இதுவரை கிரேக்க நாடு கண்டறியாத ஒருவன், இன்று ஏதன்ஸ் நகர மூலை முடுக்குகளிளெல்லாம் பல திடுக்கிடக்கூடிய கேள்விகளைப் போட்டு மக்களைத் திணற அடிக்கிறுன் என்பதற்காகவே, என்னை, " ஓர் சிறந்த தர்க்கவாதி " என்பதை மட்டிலும் ஒளிக்காமல் ஒப்புக்கொண்ட எதிரிகளின் பெருந்தன்மையைப் பாராட்டுகின்றேன். என் வாழ்க்கையும் வாதங்களும் முற்றிலும் வெளிப்படையானவை.

ஒரு சிறிதும் இரகசியமானதாகவோ, பின்னுல் விளக்கப்பட வேண்டியதாகவோ, இறந்த பின் நமது நிலை என்ன என்பதைப் பற்றியதான அனுவசிய ஆராய்ச்சிக்குட்பட்டு, ஒருவன் இருக்கும்போது செய்ய வேண்டியதைக் கவனிக்காமல் தடுக்கும் ஆர்ப்பாட்டத் தந்திரம் நிறைந்ததாகவோ, சதி, சூது, பொய், பொருமை நிரம்பியதாகவோ, சுயநலம், சூழ்ச்சி

மலிந்ததாகவோ இருக்கவில்லை. எனக்கென்று என்னால் நியமித்துக்கொள்ளப்பட்ட சீடர்கள் யாரும் எனக்கென்று இல்லை. என் வாதங்களுக்குச் சட்டரீதியான அல்லது சட்டவிரோதமான கட்சியோ கழகமோ இயக்கமோ, அதற்கோர் அமைப்பு முறையோ இருந்ததில்லை. இப்போது இருக்கவுமில்லை. நான் யாருக்காக உழைக்க வேண்டுமென்று கருதினேனோ, நான் யாரைப் பரிதாபக் கண்கொண்டு பார்த்தேனோ, நான் எந்த சமூகத்தைக் கண்டு கண்கலங்கினேனோ, நான் எந்த சமூக கோபுரத்தின் கட்டுக்கோப்புகள் நிலைகுலைந்து வேரற்ற மரம்போல் விழக்கண்டேனோ, அந்த மக்கள் கூடும் இடங்களெல்லாம் என் தர்க்கவாதத்தை ஆரம்பித்திருக்கின்றேன். எந்தவிதப் பணச்செலவும் யாருடைய உடல் உழைப்பும் தேவைப்படாமலே தொடங்கியிருக்கின்றேன். ஜிம்கானு, சந்தை, நாடகக் கொட்டகைகள், கடைத்தெருக்கள், களியாட்டம் நடக்கும் இடங்கள், அறமன்றங்கள், சங்கீத அரங்குகள், நடனச்சாலைகள், விருந்து மண்டபம், வேடிக்கை நடக்கும் இடங்கள், குளக்கரைகள், ஆற்றங்கரைகள், அயலார் தங்கும் சத்திரங்கள் எங்கும் என்னைக் காணலாம், நான் நகரத்தை விட்டு வெளியேறுவது மிகமிக அரிது. நான் கல்வியின் நண்பன். அறிவின் அன்பன். தர்க்கத்தின் தூதுவன். உண்மைக்கு நேசன். நீதியின் பிரதிநிதி. மனித இனமே எனக்குப் பலவற்றைப் போதித்தது. எந்த மனித இனத்திலிருந்து நான் பலவற்றைக் கற்றுக்கொண்டேனோ, அதற்குக் கைமாறாக அந்த மனித இனத்தின் உயர்வுக்காக பாடுபட்டேன். வயல்களும் செடிகளும் எனக்கு எதுவுமே போதிக்க

வில்லை. நான் என் சொந்த வாழ்வைக் கவனிக்காமல் பொது வாழ்வைக் கவனித்ததால், என் வாழ்க்கைப் படகு எவ்வளவு கொந்தளிப்புக்கடலில் தத்தளிக்கிறது என்பதை நான் நன்ருக உணர்ந்தே இருக்கிறேன். என்ருலும் நான் கவலைப்படவில்லை. நான் உலகத்தைப் பற்றியெல்லாம் தெரிந்துவைத்துக் கொண்டிருக்கின்றேன். என் வீட்டைப்பற்றி ஒன்றும் தெரிந்து வைத்துக்கொள்ளவில்லை என்று சொல்வது உண்மை தான். உலகத்தைப்பற்றி சிந்திக்கின்ற ஒருவனுக்கு வீட்டைப்பற்றி சிந்திக்க நேரமேது?

இந்த, என் நல்ல பொது நோக்கமே எனக்குப் பல நல்ல நண்பர்களை உண்டாக்கித் தந்தது. அதற்காக நான் அளவில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு நாட்டின் சட்டரீதியான குடிமகன் தன் நாட்டின் உயர்வுக்காக என்னென்ன செய்ய முடியுமோ, அவ்வளவும் நான் செய்திருக்கின்றேன். போர் வீரனுக நின்று எதிரிகளின் வாளுக்கு நான் கலங்காது போர் செய்திருக்கின்றேன். அந்த ஒரு நல்ல பயிற்சிதான் என்னை இன்றும் என் உறுதியிலிருந்து தளராமல் செய்திருக்கிறது. அதற்காக போர்களத்திற்கு என் நன்றி. எப்படி இரணகளத்தில் என் தலைவன் உத்திரவு வரும்வரையில் என் இடம் விட்டுப் பெயராமல் இருந்தேனே, அதே போலத்தான் என் கேள்விகளுக்குத் தக்கதோர் விடை நானிலத்தில் கிடைக்கும் வரையில் என் முடிவை நான் மாற்றிக் கொள்ள முடியாது. இறப்பு இயற்கையாகவே என்னைத் தேடி வந்தாலும், அல்லது உங்கள் தீர்ப்பே

என்னை மரண மண்டபத்துக்கழைத்துச் சென்றாலும் நான் என் முடிவை மாற்றிக்கொள்ளப் போவதில்லை.

மக்களுக்கு விருப்பமானதைச் சொல்லி நான் பெருமையடையவோ, வெறுப்பானதைச் சொல்லி சிறுமையடையவோ எண்ணவில்லை. நான் அப்படிச் செய்தால் மிருகங்களைப் பழக்குபவனுக் கொப்பாவேன். ஏனெனில், மிருகங்களுக்கு வெறுப்பானதைச் செய்தால் தன்னைக் கொன்றுவிடும் என்று பயந்து, அவைகளுக்கு உவப்பானதையே செய்து உயிர் வாழ எண்ணும் ஒரு காட்டு மனிதனுக்கு ஒப்பாவேன். மேலும் அந்த முறையைக் கையாண்டால் பகுத்தறிவுள்ள மக்களை மிருகங்களாக்குகிறேன் என்று என் மனமே என்னை வாட்டுகின்றது.

அறிஞர்களே! அண்டகோளங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து என் மனசாட்சிக்கு விரோதமான பொய்களால் அலங்கரிக்கப்பட்ட கற்பனை உலகுக்கு மக்களை நான் அழைத்துச் செல்லவில்லை. நான் எடுத்துக்கொண்ட பணி மிகமிகச் சாதாரணமானது. மக்களுக்கு வேண்டியது. அவர்கள் வாழ்க்கையில் அன்றாடம் நடமாடும் சொற்களான பரிதாபம், ஈவு, இரக்கம், நீதி, நேர்மை, அடிப்படை, காரணம், காரியம், உணர்ச்சி, அன்பு, சூழ்ச்சி, சுயநலம், கோழைத்தனம், நாடு, ஆள்பவன், ஆளப்படுவோன், அரசாங்கம், சட்டம், சமூகம், எப்படி ஒரு மனிதன் ஆளத் தகுதியுடையவனாகின்றான், ஒரு நல்லவனைத் தேர்ந்தெடுக்க மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முறைகள் என்ன என்பன போன்றவைகளின் உண்மை

யான பொருளைத் தேடித் திரிந்தேன். உதாரணத்துக்காக ஒன்று சொல்கின்றேன்.

ஒரு நண்பன் என்னிடம், 'நேர்மை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினான். நேர்மை என்றால் என்ன? என்று அவனைக் கேட்டேன். வாங்கியதைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். அதுதான் நேர்மை என்றான். அப்படியானால், ஒருவன் நல்ல சுபாவத்தோடு இருக்கும்போது ஒரு கூரிய வாளை நம்மிடம் கொடுத்து வைத்தான் என்று வைத்துக்கொள்வோம். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவன் பைத்தியம் பிடித்தவனாய் விட்டான். அப்படி பைத்தியமாய்விட்ட அவன், நம்மிடம் வந்து முன்பு அவன் நம்மிடம் கொடுத்த வாளைத் திருப்பித் தரும்படி கேட்டால் கொடுத்து விடலாமா? அதுதான் நேர்மையா? என்று கேட்டேன். நண்பன் ஒன்றும் பேசாமல் திரும்பிவிட்டான். அது மாத்திரமல்ல, அவன் அன்று முதல் என் மோசமான எதிரியாகவும் மாறிவிட்டான். அடுத்து ஒருவன் வந்தான். நீதி, நட்பு, இவைகள் என்னவென்று கேட்டேன். இரண்டும் ஒன்றுதான் என்றான். இல்லை, என்று ஒரு உதாரணத்தின்மூலம் விளக்கினேன். அதாவது, தம்பி கொலைகாரன், அண்ணன் நீதிபதி—நீதிபதியாக இருக்கும் நீதிமன்றத்திலேயே தம்பி கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு குற்றக் கூண்டிலே நிற்கிறான். அந்த நீதிபதி—குற்றவாளி தம்பி என்பதற்காக நட்பைப் பார்ப்பதா. குற்றவாளி தன் சொந்தத் தம்பியாயிருந்தாலும் நீதியை நிலைநாட்டுவதா. ஆகையால் நீதியும் — நட்பும் ஒன்றல்ல என்றேன். இந்த விளக்கம் அவனை என் எதிரியாக்கி விட்டது.

மூன்ருமவன் ஒருவன் வழியிலே சந்தித்தான். அவனிடம் அழகு என்ருல் என்னவென்று கேட்டேன். பார்ப்பதற்கு அழகாக கவர்ச்சியாக இருப்பது அழகு என்ருன். உடலேப்பற்றிச் சொல்கிறீரா — உள்ளத்தைப்பற்றிச் சொல்கிறீரா என்று கேட்டேன். உடலேப் பற்றித்தான் என்ருன். நாம் திருமணம் செய்துக் கொள்ளும்போது மனேவி அழகாயிருந்தாள், சில நாட்களுக்குப் பிறகு ஏதோ ஒரு விபத்தில் சிக்கி முகமெல்லாம் கருகருத்து அங்கஈனமாய் விட்டாள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது கணவன் அவளே கவனிக்காமலிருக்க முடியுமா? உடல் அழகு போனுலும், உள்ளத்தின் அழகு இருக்குமே, அதைக் கொண்டு ஆறுதல் அடையலாமல்லவா. ஆகையால் உடல் அழகைவிட உள்ளத்தின் அழகைக் கண்டோமானுல் இந்த சிக்கலுக்கே இடமில்லே என்றேன். இதை அவன் ஒப்புக்கொள்வதும் ஒப்புக் கொள்ளாததும் அவன் விருப்பந்தான் என்ருலும் அவனும் என் தீராத பகைவனுய் விட்டான். இப்படி எவ்வளவோ இந்த நாற்பதாண்டுகளாக. . மக்கள் திருந்த வேண்டும் என எண்ணினேன். ஆகவே நான் எப்போதும் யாருக்கும் ஆசிரியனுக இருந்து எதையும் போதித்ததில்லே. என்னே யாரும் குருவெனக் கொண்டாடியதுமில்லே. என்னே நானே கேட்டுக் கொண்டேன். அதன் எதிரொலி மக்களின் உள்ளத்தில் ஒலித்தது. அப்படிக் கூடியிருந்த மக்களில் சிலர் என்னேப் பின்பற்றினுர்கள். அவர்களில் ஒருவன்தான் என் எதிரி மெலிடசின் மகன். நான் யாரையும் கெஞ்சிக் கூத்தாடி என்னேக் குருவாக ஏற்றுக்

கொள்ளும்படி வற்புறுத்தவில்லை. குரு சீடன் என்ற முறையில் நான் யாரிடமும் வாதாடவுமில்லை. வினு விடை என்ற முறையிலே வாதாடினேன். என் வாதங்களைச் சரியென ஒப்புக்கொண்டவர்கள் நண்பர்களானுர்கள். ஒப்புக்கொள்ளாதவர்கள் பகைவர்களாய் என்னை இந்தக் குற்றக் கூண்டிலே நிறுத்தியிருக்கிருர்கள்.

## குற்றவாளியா நான்?

அந்த வகையில் நகர மாந்தர்கள் நம்பாத ஒன்றை நான் நம்பினேன் என்பதால் குற்றவாளியா? அவர்கள் நம்புகிற ஒன்றை நான் நம்பாததால் குற்றவாளியா? இருட்டில் நடக்கும் இளைஞர்களுக்கு ஒவ்வோர் வினுடியும் உண்மையான பாதையைக் காட்டியதால் நான் குற்றவாளியா? ஆண்டவன் பேரால் பல அக்ரமங்களைச் செய்துகொண்டு அரசாங்கத்தையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த பல கபட வேடதாரிகளை அதட்டி நிறுத்தி அறிவை நம்பி நல்வழி நடக்கத் தூண்டியதால் நான் குற்றவாளியா? பணக்காரர்களை ஏழையாகிய நான் எதிர்த்ததால் குற்றவாளியா? நான் பல கடவுளர்களை நம்பாததால், ஒரு கடவுளை நம்புவதால் குற்றவாளியா?...ஏனெனில் என் எதிரிகள் சொல்லும் கடவுளர்களை நான் நம்புவதில்லை. அவர்களும் நான் சொல்லும் கடவுளை நம்புவதில்லை. ஆனுல், அவர்கள் சொல்வதை இந்த நீதிமன்றம் உட்பட நகர மக்கள் அனைவரும் நம்பும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தவர்களை நான்

பகைத்துக் கொண்டேன் என்பதால் குற்றவாளியா? இந்த எளியவன் சொல்வதைப் பெருவாரியானவர்கள் நம்பமுடியாததால் நான் குற்றவாளியா? குற்றம் செய்தவர்கள் யாரோ, குருதியைக் கொட்டுபவர்கள் யாரோ, கள்ளர்கள் யாரோ, காவலில் கண்ணீர் சிந்துபவர்கள் யாரோ, துடுக்கர்களும் துன்மார்க்கரும் யாரோ, தூக்கு மரத்தில் துடிக்கவேண்டியவர்கள் யாரோ, காலமே! நீயே பதில் சொல்ல வேண்டும். நீதியே! நின்னையே வேண்டுகிறேன். ஏதன்ஸ் நகர நீதிமான்களே! துலாக்கோல்போல் நீதி வழங்க நாட்டின் பரிபாலனத்தை உங்கள் தடப்புயத்தில் தாங்கி நிற்கும் தயாளர்களே! பிறந்த மண்ணின் பெருமையை நிலை நாட்ட இறந்தவர்களின் சந்ததியாய் வீற்றிருக்கும் விவேகிகளே! என்னை மன்னித்து வெளியே அனுப்பினாலும் என் தர்க்கவாதத்தை மீண்டும் என் உயிர் உள்ளளவும் செய்தே தீருவேன் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நீங்கள் எள்ளளவும் எனக்குத் தீங்கு விளைவிக்கும்படி நான் நடந்துகொண்டேன் என்பதை நான் ஒரு நாளும் ஒப்பமாட்டேன். மரண தண்டனை விதிப்பீர்களாயின், அது ஒருபோதும் எனக்குக் கெடுதலை விளைவிக்காது. அதற்குப் பதிலாக நாட்டைத் துறத்தல் சிறைப்படுதல் முதலிய தண்டனைகளுக்கு உள்ளாவதாக நான் கூறுவது சரியன்று. உண்மையில் மற்ற எல்லாவற்றையும்விட என் உயிரின்மேல் நான் கொள்ளும் ஆசையே பல தீமைகளை விளைவிக்கும். நான் எந்தெந்த கருத்துக்

களில் மற்றவர்களுக்கு அறிவில்லை என்று நிரூபித்து வந்தேனே, அந்த அறிவை நான் பெற்று விட்டதாக எண்ணிவிட்டார்கள். உண்மையில் எனக்கு அறிவில்லை. மற்றவர்களுக்கும் இல்லை. ஆனால் நான் என் அறிவீனத்தை உணர்ந்தேன். மற்றவர்கள் உணரவில்லை. அவ்வளவுதான் வேற்றுமை. ஆக்வே, எனக்கும் உங்களுக்கும் பொதுவாக இருக்கும் ஆண்டவன் பேரால் நீதி கேட்கின்றேன்'', என்று இந்தத் தள்ளாத வயதினன் தன் வாதத்தைச் சொல்லி முடித்தான்.

## பயங்கரத் தீர்ப்பு

மரணம்—மன்னிப்பு என்ற இரண்டு பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நீதிக் குழுவின் உறுப்பினர்கள் 501 பேர் தங்கள் தங்கள் வாக்கு (ஓட்) களைப் பதிவு செய்கின்றனர். எந்தப் பெட்டியின் அருகில் ஆட்கள் அதிகமாகக் கூடுகின்றார்கள் என்று சொல்ல முடியவில்லை. ஏறக்குறையச் சமமாகவே தெரிகின்றது. 'என்ன ஆகுமோ!' என்ற ஆவலோடு நீதிமன்றத்தின் முன்பு ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கின்றனர். அறிஞன் வாழ்வில் பற்றுக் கொண்டவர்கள் வாடிய முகத்தோடும், தாழ்வில் பெருமை கொண்டவர்கள் தன்னடக்கமில்லாமல் ஆரவாரம் செய்துகொண்டும் இருந்தனர். 'ஒழிந்தான் சாக்ரடீஸ்' என்று எக்காளமிடுவோரும், அவர்களை நெரித்த புருவத்தோடு பார்க்கும் நியாய சிந்தையிலிருப்போருமாக பெரிய பரபரப்புக்கிடையே அனைவருடைய

வாக்குகளும் பதிவாய் விட்டன. அவைகள் எண்ணப் பட்டன. (220 பேர்கள் சாக்ரடீஸை மன்னித்துவிட வேண்டுமென்றும், 281 பேர்கள், மரண தண்டனை யளிக்க வேண்டுமென்றும் தங்கள் வாக்குகளை வழங்கி யிருந்தனர்) 61 ஓட்டுகள் அறிஞர் உயிரைக் குடிக்க முன்வந்துவிட்டன. ஒரு பக்கம் எக்காளம். மற்றோர் பக்கம் ஏக்கம். கருத்துள்ளோர் கவலைக் கண்ணீர் சொரிந்தனர், அடக்கமற்ற அநியாயக்காரர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். பெருமூச்சுக் கிடையே பெட்டிகளைத் தூக்கிச் சென்றனர் பணியாட்கள்.

அவன்பால் அன்புள்ளம் கொண்டவர்கள் அனை வருமே, அவன் மன்னிப்புக்காக வாக்களித்தவர்கள், ஆனால் அவர்கள் தோல்வியுற்றனர். அதில் குறிப்பிட வேண்டியவன் பிளாட்டோ. கண்ணீர் கரைபுரண் டோடின. மெய் சிலிர்த்தது. வேர்த்துவிட்டது அவன் உடல். கைகால்கள் நடுக்கங்கண்டுவிட்டன. துக்கம் நெஞ்சைத் தூக்கி தூக்கி எறிந்தது. இருப்புக் கொள்ளவில்லை அவனுக்கு. இரு கண்கள் நீர்த் தேக்கமாய்விட்டன. உலக மேதை, வாதகேசரி, அறி வின் வற்றாத ஊற்று, சொற்செல்வன் சாக்ரடீஸ்மேல் வழக்குத் தொடுத்த மெலிடஸ் என்ற மாபாதகன் அவனுக்கு விரோதியாகத் தோன்றவில்லை. 61 ஓட்டுக் களையே தீராத பகைவர்களாக எண்ணினான். அதி லும் 31 ஓட்டுக்களைத்தான் மூர்க்கத்தனமான எதிரிக ளாகக் கருதினான். ஏனென்றால், 31 ஓட்டுகள், இது வரை சாதகமாகக் கிடைத்த 220 ஓட்டுக்களோடு

சேர்ந்திருந்தால் மொத்தம் 251 ஓட்டுகள் ஆகி இருக்கும்.

சிந்தனையாளன் தப்பியிருப்பான். அநீதிக்கே வன்மையதிகம்போலும்! நல்லவன் அவமதிக்கப் படுவதும், நயவஞ்சகன் நாட்டாண்மை கொள்வதும் நானிலத்தில் என்றுதான் மாறுமோ? ஒருவனுடைய உயிர் 501 பேர்களுடைய நாவில் ஊசலாடிக்கொண் டிருந்ததன் விளைவா இது? நல்லவர்கள் நலிந்து விட்டார்கள். பொல்லாதவர்கள் பெருகிவிட் டார்கள். சூரியனை மேகமும், சுடர் விளக்கை விட்டி லும் அணுகுவதைப்போல அறிஞனை அநீதி தீண்டி விட்டது.

"சாக்ரடீசுக்கு மரண தண்டனை" என்றவுடன், அதுவரை அப்பேரறிஞனுடைய அறிவாற்றலை அறிந்து கொள்ளாமல், சதா அவனோடு சண்டை யிட்டுக்கொண்டிருந்த மனைவி இடியைக் கேட்ட அரவம்போலானாள். சுற்றத்தார் சோகமுற்றனர். மக்கள் மூவரில் இருவர் மனம்வெம்பி வாய்விட்டுக் கோவெனக் கதறினர். மற்றொருவன் கைக்குழந்தை. தாயின் கண்ணீரைத் தன் மலர்க்கரத்தால் தடவியது அக்குழந்தை. புயல்காற்றால் ஆடி ஓய்ந்த மரமாய் விட்டது நீதிமன்றம். அணையாத தத்துவத்தின் ஜோதி அணைந்துவிட்டது. வாதசிங்கத்தின் வாழ்நாள் முடிந்துவிட்டது. முட்டாள் தனமான தீர்ப்பு. தள்ளாத வயதுடைய ஒருவனை உயிரோடு விடுவதால், நாடே அழிந்துபடும் என்றெண்ணுவது கிரேக்க

நாட்டின் வீரத்திற்கோர் மாசு. இது சுதந்திரமல்ல; மெலிடஸ் என்ற மாபாதகன் செய்த தந்திரம் என்று கண்களைக் கனல் கோளங்களாக்கிப் பற்களை நரநர வென்று கடிக்கின்றான் கிரீடோ.

அறம் சான்ற மகன் தன் கருத்துக்களைச் சொன்னதற்கா இத் தண்டனை, பாதகத்தைச் செய்து பழிக்கஞ்சாத நாடாய்விட்டது. எழுத்துரிமை, பேச்சுரிமை, எண்ண உரிமை, தொழ உரிமை என்றெல்லாம் கிரேக்க நாட்டின் சுதந்திர சாசனத்தில் எழுதப் பட்டிருக்கும் வாசகங்கள் அவ்வளவும் பொய். ஸ்பார்ட்டா நகரக் கொள்ளைக்கூட்டத்தினர் முப்பது பேருடைய சர்வாதிகார ஆட்சியே இதைவிட மேலானதென இவ்வையகம் பேச இடம்தந்து விட்டதா, என் அருமைத் தாயகம். இனி அதற்கு உய்வே இல்லையா? நல்லவர்கள் வாழ முடியாதா. யாரோ ஒரு சிலர் நன்மையடைய, பாமர மக்களை ஏமாற்ற முன்னெச்சரிக்கையோடு சில தந்திரக்காரர்கள் எழுதிக்கொண்ட எழுத்துஜாலங்கள். எங்கே சாக்ரடீசுக்குப் பேச்சுரிமை! அவன் மனத்தில் தோன்றிய கருத்தை, எந்தவித ஊதியமும் பெறாமல் சொன்னதற்காக மரண தண்டனை. தீர்ப்பளித்தவர்கள் நல்லவர்களாகவும், நியாய சிந்தை உடையவர்களாகவுமிருந்தால் சாக்ரடீசுக்கு மரண தண்டனையளித்திருக்கக் கூடாது. அவனை அப்படிச் சொல்லச் செய்ததே அவன் மனம், அந்த மனத்தை வேண்டுமானால் பிடித்து மரண தண்டனையளித்திருக்க வேண்டும், முடியுமா? 'ஐரோப்பாவின் நாகரிகப் பலகணி' என்று பெயரெடுத்த

ஏதன்ஸ் நகரமா இந்தத் தகாத தீர்ப்பளித்தது? நம்ப முடியவில்லை. நல்லோர்கள் தீக்கனலை வீசுவார்கள். பகை நாடுகள் பரிகசிக்கும். இதனாலேற்படும் உள் நாட்டுக் கலகத்தைச் சாதகமாக்கிக் கொண்டு உள்ளே நுழையலாமா என்று மாற்றார் எண்ணிக்கொண்டிருப் பார்கள், அணை உடைந்து ஆற்று நீர் கட்டுக்கடங் காமல் ஓடிப் பல பட்டணங்களை அழித்துப் பாழாக்கு வதைப்போல், பெரிய பெரிய மேதைகள் தங்கள் வாழ்நாளெல்லாம் கஷ்டப்பட்டுச் சேமித்து வைத்த நீதி, சுதந்திரம் என்ற வார்த்தைகள் சிறகடித்துப் பறக்கும் சிட்டுப்போல் ஓடிவிட்டது. இதற்கும் சிறிது கீழ்த்தர அரசியல் உரிமைகள்பெற்று வாழும் நாடுகளெல்லாங்கூட எள்ளி நகையாடும். சுதந்திர மாம், குடியரசாம், ஒரு கொடியவன் காலடியில் சிக்கிச் சீரழிந்துவிட்டன. மலரை வைத்து மணம் பார்ப்பதற்குப் பதில் கையால் கசக்கிவிட்டார்கள். ஏதன்ஸை எல்லா வகையாலும் பண்படுத்திய பெரிக் ளஸ் என்ற பெரியோனைப் பெற்றெடுத்த தாயகமா இம் மாபாதகச் செயலைச் செய்தது, நீதி நீர்மேல் கிழித்த கோடாயிற்றா? கொடிது கொடிது கோர சம்பவம். அன்பனை, அறிஞனை, அதிலும் ஒரு ஏழையை, நமக்கு முன் பிறந்தவனை, நாட்டின் நலனுக் காகப் போர்க்களம் சென்றவனை, இரணகள மண்ணைத் தன் ரத்தத்தால் செம்மண் ஆக்கிய சுத்த வீரனை, அஞ்சா நெஞ்சனை, மக்களின் நண்பனை, சிந்தனைச் செல்வனை, கொலைக்களம் அனுப்புவது கொடிது! கொடிது! மகாக் கொடிது. தீராத பழி, மறைக்க முடியாத சரித்திர வரலாறு, மறக்க முடியாத

பயங்கரச் சம்பவம், மக்கள் உயிரைக் காக்க மாளாப் போரில் செந்நீர் சிந்திஞன். ஆஞல் தன் உயிரைக் காக்க அவன் ஒரு துளி கண்ணீரும் சிந்தவில்லே என்று மக்கள் மன்றம் பேசியது. எனினும் ஏதன்ஸ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மாற்ற முடியாதது.

கண்டோர் வியக்க டிலோஸ் என்ற பெண்மணி அரசு செலுத்தித் தன் அதிகாரத்தை அலேகடலுக்கப் பாலும் தெரியச் செய்த இந்த நாடு அளித்த தீர்ப்பு தாஞ, இந்த நாவண்மைக்காரஞ இறக்கவேண்டும். நிலேக்கவே உடல் நடுங்குகிறது. சே! சே!! இந்த நாட்டில் இனி சுதந்திரக் குடிகள் என்று சொல்லிக் கொண்டு வாழ்வதைவிட, கந்தையுடுத்திக் கானகம் செல்லலாம். அங்கே புலிகள் இருக்கும். ஆஞல் மனிதர்கள் என்று வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்ளும் மனச்சாட்சியே இல்லாத மனித மிருகங் களான இந்த மெலிடஸ்கள் இருக்கமாட்டார்கள். இப்படிப் பேசிஞர்கள் மக்கள், எனினும் தீர்ப்பு தீர்ப்பேதான்.

## அறிவிப்பு

'உனக்கு மரண தண்டலேயளிக்க வேண்டு மென்று நீதியின் பிரதிநிதிகள் தங்கள் அதிகப்படி யான வாக்குகளால் அறிவித்துவிட்டனர், சாக்ரடீஸ்! மரணத்திலிருந்து நீ தப்புவதற்கு மார்க்கமில்லே. இறுதியாக நீ ஏதாவது சொல்லிக்கொள்வதாயிருந் தால், அல்லது உன் தண்டலேயில் நீ ஏதாவது

மாற்றம் விரும்பினால், அதை உனக்கு ஏற்கனவே அளித்திருக்கும் பரிபூரண சுய உரிமைப்படி நீ கேட்டுக் கொள்ளலாம், இது நீதிமன்றத்தார் அறிவிப்பு.

## இறுதி எச்சரிக்கை

நீதிமான்களே! நீங்கள் எனக்களித்த விடுதலைக்காக நான் நன்றி செலுத்துகின்றேன். எனக்கு இந்தத் தீர்ப்பையளிக்க நீங்கள் அதிக நேரத்தை வீணாக்கவில்லை. ஆனால் எனக்கு மரண தண்டனையளித்ததின் மூலம் நகரத்தின் நன்மையில் நாட்டங் கொண்டுள்ள பலருடைய பழிச் சொல்லுக்கு ஆளாய்விட்டீர்கள். நான் அறிஞனாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னை அவர்கள் என் இறப்புக்குப்பின் அறிஞன் என்று ஒப்புக்கொள்வது திண்ணம்.

மெலிடஸ் எனக்கு விதிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொண்ட மரண தண்டனையை நீங்களும் மனமார தர உங்கள் தாராள சிந்தையோடு ஒப்புக் கொண்டீர்கள். அதற்குப் பதிலாக நான் உங்களிடம் எதை வேண்டுவது? ஆனால், என் தண்டனையில் சிறிது மாற்றத்தை யுண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள எனக்குச் சட்டப்படி உரிமையுண்டு என்பதை எடுத்துக் காட்டி என் வேண்டுகோளை எதிர்பார்க்கிறீர்கள். இது ஒவ்வொரு குற்ற விசாரணையின் முடிவிலும் நீதிமன்றம் கையாள வேண்டிய சம்பிரதாயந்தான் என்பதும், ஆனால் குற்றவாளியின் வேண்டுகோள் ஒவ்வொன்றையும் செவி

சாய்த்துத் தன் நடவடிக்கையைச் சிறிது மாற்றி யமைத்துக் கொண்டிருக்கிறதா என்பதும் எனக்குத் தெரியாததல்ல.

நான், உங்களிடத்திலே அகப்பட்டுக் கொண் டிருக்கும் என் உயிரைக் கேட்கவில்லை. நீதியையே வேண்டுகிறேன். ஏனெனில், நான் என் உயிரை யாருக்கும் சாசனமாக்க முடியாது. ஆனால் நீதியை இந்த உலகில் கடைசி காற்றின் அசைவுள்ள வரையி லும் நமது சந்ததிகளுக்குச் சாசனமாக்க முடியும். அந்த அழியாத தத்துவத்துக்காக, அணையாக ஜோதிக் காக நான் மன்றாடுகிறேன். எனினும் என்னை மாற்றம் விரும்பச் சொல்லுகின்றீர்கள், அது உங்களுக்கு விருப்பமாயின் கூறுவேன். கோபிக்காமல் கேளுங்கள்.

குடும்பக் கவலையை அறவே ஒழித்து, வறுமையை விரும்பியேற்று, நீங்கள் ஒவ்வொருவரும் மனத் தூய்மையும் குணமேன்மையும் பெறுவது இன்றியமை யாதது என்று போதித்துப் பொது நன்மைக்காகவே பாடுபட்டு வந்தேன். நீங்கள் மேன்மக்களாய் வாழ வேண்டும், அதனால் நமது நாட்டின் கௌரவ மணி முடியின் ஜோதி உலகின் எல்லா பாகங்களிலும் ஜொலிக்கவேண்டும் என்ற பொது நன்மைக்காகவே பாடுபட்டு வந்தேன். இதை சமூகம் உணராமல் என்னைக் கொல்லத் தீர்மானித்து விட்டது. இது நாட்டில் பிறந்த ஒவ்வொருவராலும் எளிதில் செய்யக் கூடிய சுலபமான காரியமல்ல. போர்க்களத்தில் எதிரியை வென்ற போர்வீரன் பரிசு பெறுகின்றான்.

பள்ளி மாணவன், பந்தயத்தில் வென்றவன், பாக்களைக் கட்டியவன், பலரும் பரிசு பெறுகின்றனர். அவ்வண்ணமே நான் பரிசு பெறத் தகுதியுடையவன். அந்த வகையில் நீங்கள் என் தண்டனையில் என் விருப்பப் படி மாற்றங் காண எண்ணினால், இதுவரை பல பெரிய மனிதர்களைக் கண்ணியப்படுத்தியதைப் போல என்னையும் நகரப் பொது மாளிகையில் வைத்துக் கௌரவப்படுத்தி, நகரப் பொதுச் செலவில் என்னைப் பாதுகாத்து வரவேண்டும் என்பதே என் விண்ணப்பம். அதுதான் தகுதியுடையதும் நியாயமானதுமாகும். ஆகவே அப்படிச் செய்யுங்கள்.

இன்றேல், இன்னும் சிறிது நேரத்தில் உங்களில் வயதான ஒருவன் சாவின் சமீபத்தில் நிற்கப் போவதைக் கண்டு ரசிக்க இயற்கை உங்களுக்குத் துணைசெய்யப் போகிறது. நான் உங்களுக்காக மட்டிலும் பேசவில்லை. என் சாவுக்காக வாக்களித் தவர்களுக்காகவும் பேசுகிறேன். என்னை மன்னித்து விடும்படி மன்றாடி மீண்டும் உயிர்வாழ ஆசை கொள்ளாத நான் உங்களிடம் தோற்றுவிட்டதாகக் கருதலாம். ஆனால், உண்மை யதுவல்ல, நான் தோற்றுவிட்டேன் என்பது என் வாதத்தால் அல்ல. நான் என் கருத்திலே கொண்ட அசையாத நம்பிக்கை யில் நான் தோற்றுவிடவில்லை. நீதி வழங்க நீங்கள் வீற்றிருக்கின்றீர்கள். குற்றவாளியாக நான் நிற்கின் றேன். என்னைச் சரியாக அடையாளந்தெரிந்து கொள்ள முடியாத ஒரு சாதாரண சக்தியால் தோற் கடிக்கப்பட்டேன் என்பதுதான் உண்மை. நான் உங்

களுக்காகவோ, என் சொந்த வாழ்க்கைக்காகவோ வாதாடவில்லை. உண்மையில்லாத ஒன்றைத் தொலைக்க வாதாடினேன். என் வாதத்தின் முடிவு என்னை எவ்வளவு பயங்கரமான கடலில் தள்ளுவதானாலும் கவலை இல்லையென்று வாதாடினேன். நீதியைக் கொல்லும் ஆற்றல் அநீதிக்கு உண்டா என்று தெரிந்து கொள்வதற்காகவே வாதாடினேன். உலகில் புதிய செய்கையல்ல, இதற்குமுன் எவ்வளவோ அறிஞர்கள், மக்கள் அறியாமையாலும், ஆத்திரத்தாலும் மாண்டு போனார்கள். ஆனால் அச்சத்தோடு ஆண்டுகள் பல வாழ்வதைவிட ஆண்மையோடு விரைவில் இறப்பதுமேல் என்ற முறையிலே வாதாடினேன். முதலில் கல்லால் அடிப்பவர்கள் பின்னல் மலர் மாலைகள் சூட்டுவார்கள் என்றஉறுதியோ நம்பிக்கையோ கொண்டு நான் வாதாடவில்லை என் மனம் சொன்ன வழி நடந்தேன். சிந்திக்கத் தொடங்குவதற்கு முன்பு சீறித்தான் விழுவார்கள் மக்கள் என்ற முறை தெரிந்தே வாதாடினேன். என்னுடைய வாதங்கள் எப்போதும் பேரேட்டின் லாப நட்டங்களைத் தொட்டுக் கொண்டிருக்கவில்லை. மனித ஜீவாதார உரிமை வேட்கையில் உண்மையானதும், நித்தியமானதும், யாராலும் அழிக்க முடியாததும், எந்தக் காலத்திலும் அழியாததும், எந்தப் படையெடுப்புக்கும் அஞ்சாததும், எந்த பூகம்பத்தாலும் அசையாததுமான முடிவில்லாத தத்துவத்தின் முகத்தை நோக்கி நின்றுகொண்டிருக்கின்றது. அந்த உரிமைகளை வழங்கினல், மக்கள் விழித்துக் கொள்வார்கள். பிறகு நம் கதி அதோகதியாய்விடும் என்று பயப்படும் வஞ்சகர்

கள் வீசிய வலையில் நீதி அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. ஆனாலும் நீதி நித்தியமானது. அந்த அழியாத தத்துவத்திற்காகவே நான் என் உயிரை அர்ப்பணிக்கின்றேன்.

தற்காலத்தில் இறப்பே யாவற்றிலும் மேன்மை தரக்கூடியது. இறப்பென்பதைக் கனவற்ற தூக்கத்திற்குச் சமமாகக்கொண்டால், அது கிடைப்பதால் எனக்கு மகிழ்ச்சியே தவிர துன்பமொன்றுமில்லை. அவ்வாறன்றிப் புராணக் கதைகளில் கூறுகிறபடி, இறப்பு புதியதோர் உலகில் புதியதோர் வாழ்வைத் தருகிறதென்பதே உண்மையாயின், அவ்வுலகிலுள்ள போர் வீரர்களுடனும், பிற மேன்மக்களுடனும் கூடிப் பழகி, நீதியைப்பற்றி ஒருவரையொருவர் உசாவி, தொடை விடைகளால் பல உண்மைகளை ஆராய்ச்சி செய்யலாம்.

## பின்வாங்கப்போவதில்லை

தவறு செய்த ஒருவன், அதை மறக்கக் கண்ணீரும் கதறலுமாக நீதிமன்றத்தில் நிற்கவேண்டிய பழக்கத்துக்கு மாறாக நான் ஒரு புது மாதிரியிலே நின்றேன் என்பதால், நான் உங்களிடம் என் வாதத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது, மனிதத்தன்மையல்லாத ஒன்றுக்காக வாதாட வேண்டுமென்று நினைத்து, அதனால் வரப்போகும் ஆபத்தையும் எண்ணாமல் தைரியமாக நின்றேனோ அதையேதான் இப்போதும் செய்ய நினைக்கின்றேன்.

நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ளவும், நீங்கள் உங்கள் நீதியை நிலைநாட்டவும் எடுத்துக்கொண்ட

முயற்சியில், நீதியை நிலைநாட்டிவிட்டதாக எண்ணி நீங்கள் தற்காலிக வெற்றி பெற்றுவிட்டீர்கள். மனக் கசப்புக்கும் மாளாத சூழ்ச்சிக்கும் இடையே வாழ்வதைவிட மறிப்பதேமேல். ஆகவே நான் சுத்தவீரன் என்ற முறையில் என் உயிரையே உங்கள் வெற்றிக் காகப் பரிசளிக்கின்றேன்.

சட்டத்தின் நெருக்கடியிலிருந்தும், சண்டை முனையிலிருந்தும் எவ்வளவோ பேர்கள் தப்பியோட எண்ணுகிறார்கள். சட்டத்திலிருந்து தப்பிக்க எண்ணும் ஒருவன் பொய் சத்தியம் செய்து பிழைத்து விடுகிறான். சண்டை முனையிலிருந்து தப்பிக்க எண்ணும் ஒரு போர்வீரன் ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டு எதிரியின் காலடியில் விழுந்து சரணு கதியடைந்து உயிர்ப்பிச்சைக் கேட்டு ஓடிப் போகிறான். இன்னும் சிலர் அரசாங்க நடவடிக்கையில் இருந்து தப்பித்துக்கொள்ளத் தலைமறைவாய்த் திரிந்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு அபாயங்களி லிருந்தும் மனிதன் தப்புவதற்காக எவ்வளவோ உபாயங்களைக் கையாளுகிறான்; ஆனால் என் அருமை நண்பர்களே! மரணத்திலிருந்து தப்புவதைவிட அபாயத்திலிருந்து தப்புவது மகா கொடியதாகும். என் எதிரிகள் தீமையிலிருந்து தப்பி விட்டார்கள். ஆனால், நான் உண்மையிலிருந்தும் தப்ப முடியவில்லை. எனக்கு மரண தண்டனை, அவர்களுக்கு விடுதலை.

கர்ப்ப வேதனையில் மகப்பேற்றை எளிதாகச் செய்யவல்ல தாயைப்போல, பிறர் மனதில் உதிக்

கின்ற கொள்கைகளை எளிதாக்கிய எனக்கு மரண தண்டனை.

என் அருமை நண்பர்களே! ஏதென்ஸ் நகரப் பெருமக்களே! என்ருவது ஓர் நாள் இந்த நீதியின் நெடும் பயணத்தை நியாய சிந்தனையுள்ளவர்கள் அளந்து பார்த்துவிடுவார்கள். அதுவரை இந்த சாக்ரடீஸ் உயிரோடிருக்கப் போவதில்லை. அதற்குள் அகில முழுதும் அழிந்துவிடப் போவதில்லை. சாக்ரடீஸ் சாக வேண்டிய நாட்களுக்கு முன்பு சாகடிக்கப் பட்டால், அவன் வாழ்வில் மிகுதியான நாட்கள் வேறு யாருடைய வாழ்விலும் ஒட்டிக்கொள்ளப் போவதில்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் 100 ஆண்டுகள் ஆயுள் என்று நிர்ணயித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனல், ஒருவனுவது சரியாக 100 ஆண்டுகள் வாழ்ந்து இறந்ததாகத் தெரியவில்லை. அஃது உண்மையாயின் இறப்பு தன்னை அடையாளங்கண்டு கொண்டு வருவதற்குமுன், தானே இறப்பைக் கண்டு கொள்ளலாம். அப்படி யாரும் கண்டுகொண்டதாக வும் தெரியவில்லை. வீடு திரும்புவோம் என்ற நம்பிக்கையோடு வெளியே சென்றவர்கள் வீதியி லேயே கொல்லப்படுகிருர்கள். அநியாய வழியில் சேகரித்த பொருளைக் காப்பாற்றும் முயற்சியில் திருடன் கை வாளால் பலர் கொல்லப்பட்டிருக்கின் ருர்கள். கருத்தரித்தபோது மனைவியிடம் சந்தோஷ மாக விடை பெற்றுச் சென்ற வீரர்களில் பலர் வீடு திரும்பியதில்லை. ஆண்டி அரசனுக எடுத்துக்

கொண்ட விபரீதப் போக்கில் பலர் மாண்டிருக்கின்றனர். இவர்களெல்லாம் முன் அறிவிப்பில்லாமல் செத்தவர்கள். அதிலும் நான் மேம்பட்டவன். ஏனெனில் நான் எப்போது சாகவேண்டும் என்பதை முன்கூட்டியே அறிவித்திருக்கின்றீர்கள். இது, மற்ற யாருக்குங் கிடைக்காத பரிசல்லவா? அதற்குள் எனக்கு, ஏதாவது ஆசாபாசங்கள் இருந்தால், நிறைவேற்றிக்கொள்ளலா மல்லவா? ஆகவே, ஒருவனுக்கு ஆயுள் 100 ஆண்டுகள் எனக் கணித்து, ஒருவரும் அந்த எல்லையை அடையவில்லையே என்று கவலைப்படுவதைவிட, பிறந்தது முதல் இறக்கும் வரையுள்ள நாட்கள்தான், அவன் ஆயுள், என்று கணித்தோமேயானல் நன்மை பயக்கும், என்று கருதுகிறேன்.

ஆகவே ஒரு நீதிமன்றத்தின் கடைசி எல்லையாகிய மரண தண்டனையை எனக்களித்த உங்கள் மனச்சாந்தியைப் பரிகாசம் செய்யப்போகும் நாள், நான் இறக்கும் நாள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்தப் பயங்கரச் செய்கை உங்கள் வாழ்நாளைக் கணக்கெடுக்கக் காத்துக்கொண்டிருக்கின்றது. முடிவு முற்றிலும் மாருனதாக இருக்கும். ஆனல், நீங்கள் இன்னும் அழைத்து விசாரிக்க வேண்டியவர்கள் என் தத்துவத்தின் நிழலில் ஒளிந்துகொண்டிருக்கின்ருர்கள். அவர்களை நீங்கள் எளிதில் அடையாளங் கண்டுகொள்ள முடியாது. அவர்கள் என்னைப்போலவே இளகிய மனம் உடையவர்களாயிராமல் கொஞ்சம் கடினமான மனமுடையவர்களாயிருப்பார்கள். அவர்களைக் கண்டால்

நீங்கள் கோபப்படுவீர்கள், அவர்களையும் அழைத்து எனக்களித்ததைப்போல மரண தண்டனை அளித்து விடலாமா, என்று நீங்கள் நினைக்கக்கூடும். அப்படி நீங்கள் செய்ய எண்ணினால், பெரிய தவறுதலைச் செய்தவர்களாவீர்கள். தான் சாக மருந்துண்ட கதைபோல முடியும். அது உங்களுக்குத் தொடக்கத்தில் எளிதாகத் தோன்றினாலும், இறுதியில் நீங்கள் செரிக்க முடியாத வேதனையாகத் தோன்றும், விளைவுகள் வேறாகவும் வினைகள் விபரீதமாகவும் முடியும். அதனால் உங்களை நீங்களே தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். அது நீங்கள் என்றென்றும் பெற முடியாத பரிசாக இருக்கும். உங்கள் வருங்கால சந்ததிகள், உங்கள் கல்லறையைப் பார்த்துக் கேலி செய்யாமல் இருக்கும். ஒருவன் இறந்தபிறகு அவன் ஆவி எங்கும் பேய், பிசாசு, பூதங்களாகத் தொங்கிக் கொண்டிருப்பதில்லை. அவன் உயிரோடிருக்கும் போது செய்த நன்மை தீமைகள்தான் என்றென்றும் உலகத்துக்கு அவனை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும். ஒருவன் தன் அறிவினாலோ, மற்றொருவன் தன் ஆராய்ச்சியினாலோ, வேறொருவன் தன் வீரத்தாலோ, பிறிதொருவன் தான் செய்த பொதுப்பணியாலோ இன்னொருவன் தான் செய்த தருமத்தாலோ தான் உலகுக்கு அறிமுகம் ஆகவேண்டும். இதுவரை உலகத்தில் எண்ணத் தொலையாத கோடிக்கணக்கானவர்கள் இறந்துபோயிருக்கின்றார்கள். அவர்களைப் புதைத்த இடமும் புல் முளைத்து அடையாளந் தெரியாமல் மறைந்திருக்கின்றது. ஆனால், உலக வரலாற்

றில் காணப்படுபவர்கள் ஒருசிலர்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

பல்லக்கு ஏறுபவனை உயர்ந்தவனென்றும், அவனையும் அவன் ஏறியிருக்கும் பல்லக்கையும் சுமந்து செல்பவனைத் தாழ்ந்தவனென்றும் நெடுநாட்களாக உலகம் கொண்டிருக்கின்ற எண்ணத்துக்கு நான் முற்றிலும் மாறுபட்டவன். ஏனென்றால், பல்லக்கு ஏறுபவன் தனக்கு இரண்டு கால்கள் இருந்தும் நடக்க முடியாத சோம்பேறியாகின்றான். தன்னைச் சோம்பேறி என்று உலகம் கேலி செய்யக்கூடாதே என்பதற்காக, ஏதேதோ கருத்துக்கொவ்வாத பொய்களை மக்களுக்குப் புரியாதவகையில் கடினமான சொற்களைக் கொண்டு பின்னிய வலையில் மக்களை மாட்டி விடுகின்றான். அந்த சோம்பேறியையும் தூக்கிக்கொண்டு, தானும் நடந்துகொண்டு கஷ்டப்படுகிற அந்த உழைப்பாளியையே நான், தியாகி, உயர்ந்தவன் என்கிறேன். இதைப்போலவே நீங்கள் அறியாமையால் கொண்டிருக்கின்ற கருத்துக்கள் அனைத்துக்கும் நான், புதுத் தத்துவங்களை சொன்னேன் என்பதற்காகவே நான் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றேன்.

உதாரணமாக, பொய் என்ற வார்த்தையின் உண்மையான தத்துவத்தைத் தெரிந்துகொள்ளாமல், பொதுவாகப் பொய் என்ற வார்த்தை கெட்டது என்று சொல்லிவிடக் கூடாது. ஏனெனில், ஒரே பொய் என்ற வார்த்தை, சில இடங்களில் நன்மையையும் உண்டாக்குகின்றது. ஆதலால், பொய் என்ற

வார்த்தைக்கு நாம், எப்படி ஒரு பொது அர்த்தத்தைக் கற்பிக்க முடியும். எடுத்துக்காட்டாக ஒன்று சொல்கிறேன். பொய் சொல்லும் அவ்வளவுபேரும் கெட்டவர்கள், என்பீர்கள். அப்படியானால், பொய் கூறித் தன் படைக்கு ஊக்கமளிக்கும் தளபதியும், பொய் கூறித் தன் மக்களுக்கு மருந்தூட்டும் தாய் தந்தையர்களும், வெறியேறி தற்கொலைபுரிய எண்ணும் தன் நண்பனிடம் உள்ள கூறிய கத்தியைப் பொய் சொல்லி வாங்க எண்ணும் மனிதனும் கெட்டவர்களா? ஆகவே அந்தந்த சொல்லின் பயன். அது பயன்படுத்தப்படுகிற இடம், அதனால் ஏற்படுகிற விளைவு ஆகியவைகளை அனுசரித்தே ஒரு வார்த்தையின் உண்மை நிலைமை இதுவென நாம் கண்டு கொள்ள முடியும். அந்த ஆராய்ச்சியில் ஈடுபட என் மனம் என்னைத் தூண்டியது.

நான் இதுவரையிலும் என் மனம் எதைச் செய்யச் சொல்லித் தூண்டியதோ, அதையே செய்திருக்கின்றேன். என் மனசாட்சிக்கு விரோதமாக நான் எதையாவது செய்யத் தொடங்கியபோதெல்லாம் என் மனம் தடுத்திருக்கிறது. இயற்கையாகவே சாகப்பிறந்த ஒருவனைப் பார்த்து எந்த அதிகாரத் தொனியாகிலும், "நீ முன்பே இறந்துபோ," என்று இடும் கட்டளையை ஏற்க மறுக்கும் எவனும் கோழைதான். சாவுக்கஞ்சுகிற ஒருவனைச் சாதாரண மனிதன் என்றுகூட நான் ஏற்றுக்கொள்வதில்லை. அப்படி அஞ்சி அஞ்சி வாழ்கிற ஒருவன் பலமுறை இறந்து இறந்து பிழைக்கிறான். சில நேரங்களில் நடைப்பிணமாய்

விடுகிருன். நமது முன்னோர்களான பலாமிடஸ், அஜக்ஸ், டெலிமோன் என்பவர்கள் எல்லாங்கூட அநியாயமான தீர்ப்பால் இறந்துவிட்டவர்கள்தான். சோலன், கைலோ, பிட்டேயியஸ், பியஸ், பெரியாண்டர், எபிமினிட்ஸ், க்ளிடேபாபூலஸ் என்பவர்களெல்லாங் கூட, "உன்னை அறி வினையை நினை, சமயமறி, உலகில் அனேகர் தீயோர்கள், உழைப்பினுல் ஆகாத தொன்று மில்லை, அமிதம் விலக்கு" என்ற பொன்மொழிகளைச் சொல்லிச் சொல்லி மாண்டு போனவர்கள்தான்.

நம் நாட்டு மக்களால் போற்றப்படுகிற அத்தேனு என்ற பெண் தெய்வத்திற்குப் பொன்னுலும் தந்தத்தாலும் சிலை செய்த சிற்பியும், ஜுஸ் என்னும் தெய்வத்திற்கு அழகான சிலை செய்த பிடியாஸ் என்ற சிற்ப ஞானியும் இறுதியில் அநியாயமான பழிகள் சுமத்தப் பட்டுச் சிறையிலடைக்கப்பட்டு அங்கேயே மாண்டு போனுர்கள். தான் ஆண்ட காலத்தைத் "தங்கமான காலம்" என்று கண்டோர் புகழ, ஏதன்ஸை பல வழிகளில் சிறக்கச் செய்த பெரிக்ளஸ் என்ற அரசன் அந்தியத்தில் மானமழிந்து மாண்டுபோனுன். அந்தச் சந்ததியின் வழிவந்தவர்கள் யாரும் இல்லையே என்று அந்த புனிதவான்களின் கல்லறைகள் கண்ணீர் சிந்தாமல் இருக்க நான் அவர்கள் மத்தியிலேயே அமரப் போகின்றேன்.

ஆகையால், நீதிமான்களே! நீங்களும் வீரத்தோடு சாக எண்ணுங்கள். அது உங்கள் தூய்மையான எண்ணத்தின் முடிவாக இருக்கட்டும்.

தீமை, ஒரு நல்லவனுடைய வாழ்விலும் சாவிலும் தொடர்வதில்லே. அவனுடைய நன்மைகளே ஆண்டவனும் நிராகரிப்பதில்லே. எனக்கு வந்திருக்கும் இந்த முடிவு மற்ற யாருக்கும் எதிர்பார்த்தும் வரக்கூடியதல்ல.

எல்லாவித துன்பங்களிலிருந்தும் விடுதலே பெறுவதற்காக எனக்கு இந்த நீதிமன்றத்தார் அளித்த மரண தண்டனேக்கு இணங்கிவிட்டேன். இந்த ஏழைக்கு இதைவிட ஒரு நல்ல சன்மானம் யாராலும் அளிக்க முடியாது.

அன்புள்ள ஏதென்ஸ் நகரத் தோழர்களே! உங்கள் விருப்பம்போல், அபராதத் தண்டனேயை விதிக்கும்படி ஒருவேளே நான் கேட்டுக்கொள்ளலாம். அது அவ்வளவு கெடுதலேத் தராது என்று நீங்கள் கருதுகிறீர்கள். இந்த வேண்டுகோள், என் உயிரை ஏதோ ஒரு குறிப்பிட்ட தொகைக்கு விலே மதிக்கிறேன் என்பதையே காட்டுகிறது. ஒருவேளே நான் இன்னும் உயிரோடிருந்து மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் மிகுதியானவற்றைச் செய்ய இந்த என் வேண்டுகோளும், அந்த வேண்டுகோளுக்கிணங்கும் உங்கள் தாராள சிந்தையும் பயன்படலாம் என்று என் மன்னிப்புக்காக வாக்களித்த உத்தமர்கள் எண்ணுவார்களாயின், அவர்கள் ஆசைதான் ஏன் நிராசையாக வேண்டும். அதையும் கேட்டு விடுகின்றேன். ஆனல், நான் வறியவன். என்னிடம் பொருள் அதிகமாகக் கிடையாது. பொருள் ஈட்டிச் சேமித்து

வைக்கும் பணியில் நான் ஈடுபடவில்லை என்பதும் நீங்கள் நன்ருக உணர்ந்ததே. ஆகையால் தற்சமயம் என்னிடம் உள்ளது ஒரு மைஞ வெள்ளிதான் (ரூ. 75/-). அதை வேண்டுமாஞல் எனக்கு அபராதம் விதிக்கும்படி நான் கேட்கக்கூடும். அதற்குள் பக்கத்திலிருந்த பிளாட்டோ முதலான நண்பர்கள் 30 மைஞ வெள்ளியாக உயர்த்திஞலும் கட்டத்தயாரென்று கூறிஞர்கள். ரூ. 2,250/-க்குச் சமானம். அதோ எனது நண்பர்கள் ரூ. 2,250/- அபராதத் தொகையைத் தாங்களே செலுத்துவதாகவும் சொல்லுகின்ருர்கள். ஆதலின் 30 மைஞ வெள்ளி அபராதத்தை என் மரண தண்டனைக்குப் பிரதியாகக் கூறி உங்களுடைய தீர்மானத்திற்கு விட்டு விடுகின்றேன்.

ஏதென்ஸ் நகர மக்களே! மகாபாதகர்களாகிய இவர்களிடமிருந்து நீங்கள் கெட்ட பெயர் வாங்க அதிக நேரம் பிடிக்காது. ஏன் தெரியுமா? இப்போது உயிரோடிருக்கும் என்னைப் பைத்தியக்காரன் என்பார்கள். நான் இறந்தபிறகு ஞானி என்பார்கள். என்ன காரணம் என்று உங்களுக்குப் புரிகிறதா? எனக்கு மரண தண்டனையளித்த உங்களைப்பழி தீர்க்க வேண்டும். அதற்குள்ள சரியானவழி என்னவென்று கருதுகிறீர்கள். நான் இறந்தபிறகு 'ஐயோ' ஒரு ஞானியைக் கொன்றுவிட்டார்களே என்று கூக்குரலிட்டால்தான் ஆ! அப்படியா! அறிஞு சாக்ரடீஸ். என்று மக்கள் ஆத்திரத்தோடு உங்கள் பக்கம் திரும்புவார்கள் என்ற திட்டந்தான் அவர்களுடையது

உலகம் உங்களைத் தூற்ற வேண்டும் என்பதுதான் அவர்கள் ஆசை.

## காத்திருக்கலாமே

இன்னும் சிறிது காலம் இவர்கள் காத்துக் கொண்டிருக்கக் கூடாதா. வயதான நான் இயல்பாகவே மாண்டு விடுவேன். என் விடுதலைக்காகப் பக்குவமாகப்பேச எனக்கு நாவண்மை இல்லை. அதனாலேயே நான் மரண தண்டனையடைந்தேன் என்பதும் உண்மையல்ல. நீங்கள் நினைப்பதுபோல் அழுது கதறி புலம்பி உங்களை வேண்டிக் கொள்ளும் துணிவு எனக்கில்லை. சாவுக்கு அஞ்சி யாரும் ஓடக் கூடாது. போரில் ஒருவன் ஆயுதங்களை வீசி எறிந்து எதிரியிடம் சரணாகதியடைந்து உயிர் பிழைக்கலாம். நீதிமான்களே! சாவிலிருந்து தப்புவது கடினமல்ல. அநீதியிலிருந்து தப்புவதுதான் கடினம். அநீதிக்கு சாவையும் மிஞ்சிய வேகம் உண்டு. நான் தள்ளாத வயதினன் வேகமாகச் செல்லும் அநீதியைவிட மெதுவாகச் செல்லும் சாவு என்னைப்பற்றிக் கொண்டது. நாட்டில் இன்றிருக்கின்ற விதிப்படி எந்த ஒரு கடுமையான வழக்கையும் ஒரே நாளில் விசாரித்து அன்று மாலையே தீர்ப்பளித்துவிட வேண்டும் என்ற நிலை இல்லாதிருந்தால் ஒரு வேளை நானே என் குற்ற மறுப்புக்கு அதிக நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கலாம். அப்படி இல்லாமலிருப்பதும் ஒரு நன்மைக்கு என்றே தோன்றுகிறது.

நீதிமன்றம்: இல்லை, இல்லை. சாக்ரடீஸ் நீங்கள் வேண்டிய நேரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

சாக்ரடீஸ்: மெத்த மகிழ்ச்சி. ஏதன்ஸ் நகர மாந்தர்களே! நான் ஏன் அரசியலில் ஈடுபடவில்லை என்று பல நாட்களாகப் பலர் கேட்டார்கள். நான் அரசியலிலே ஈடுபட்டிருந்தால் என்றைக்கோ இறந்திருப்பேன். அதனால் நம்மில் யாருக்கும் நன்மை இல்லை. நேர்மைக்காகப் போராடுகிறவன் சிறிது காலமே வாழ்வதாயிருந்தாலும் தனிப்பட்ட ஒரு சிறப்பே போதும். அவையில் அந்த சிறப்பு வேண்டியதில்லை என்று எண்ணியவன் நான். வெகு நாட்களுக்கு முன்பு நீதிமன்றத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகின்றேன். நீதிமான்களே! நான் ஆண்டியோகிஸ் மரபைச் சேர்ந்தவன். நான் வகித்த ஒரே ஒரு பதவி மேல்சபை (செனேட்) உறுப்பினன் பதவிதான். ஆர்க்கினூசே போர் முடிந்ததும் அதில் இறந்தவர்களுடைய சடலங்களை எடுத்து வராததால் படைத் தலைவர்களை விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள். அது சட்டத்துக்கே விரோதமானது என்று நான் ஒருவன்தான் எதிர்த்து வாக்களித்தேன். மற்ற உறுப்பினர்கள் என்னை சிறையிடுவோம் என்று பயமுறுத்தினார்கள். அப்போது, சட்டமும் நீதியும் நம் பக்கம் இருக்க சிறைவாசத்துக்கும் அநீதிக்கும் அஞ்சி அநீதியான செயலில் பங்கு கொள்வதாவது! என்று துணிவோடு இருந்தேன். இது நடந்தது பழைய ஜனநாயக ஆட்சி காலத்தில்.

பிறகு முப்பதுபேர் கொண்ட அலிகார்கி சபையார் அதிகாரத்தில் இருந்த காலத்தில் அவர்கள் என்னையும் மற்ற நான்குபேரையும் ரெடொண்டா (வட்ட வடிவமுள்ள) அரசாங்கக் கட்டிடத்தில் அழைத்து சலாமிஸ் நாட்டைச் சேர்ந்த லியோன் என்பவனை அழைத்துவரச் சொன்னார்கள். அவனுக்கு மரண தண்டனையளிக்க வேண்டுமென்பது அவர்கள் எண்ணம். நான் அநீதிக்குப் பணிவது நேர்மையல்ல என்று வாய்ச் சொல்லால் மட்டிலும் சொல்லாமல் செயலிலே காட்டவேண்டி சலாமிசுக்குச் செல்லாமல் நேராக வீட்டிற்குச் சென்றுவிட்டேன். வலிமைமிக்க அந்த அடக்குமுறையாட்சிக்கு நான் தவறு செய்துவிடவில்லை. அந்த நான்கு பேர்களால் லியோன் என்பவன் அழைத்துவரப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். விரைவிலேயே அந்த முப்பது பேருடைய ஆட்சி முடிவுக்கு வந்தது. இல்லாவிட்டால் நான் உயிரையே இழந்திருப்பேன். அது உண்மைதான் என்பதற்கு இங்கே அனேக சாட்சிகள் இருக்கின்றார்கள். (நீதிமன்றத்தில் ஆரவாரம்.)

**சாக்:** அருள்கூர்ந்து ஆரவாரம் செய்யாதீர்கள். நான் பேசி முடிக்கிறவரையிலும் அமைதியாயிருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். என்னை ஒருவனைக் கொன்றால் அது உங்களுக்குத்தான் பெருந்தீங்காக முடியும். என்னை அது அவ்வளவாக பாதிக்காது. மெலிடஸ், அனிடஸ், லைகோன் இவர்களால் எனக்கு தீங்கு விளைவிக்க முடியாது. ஏனென்றால், தீயவன் தன்னைவிட நேர்மையானவனை கொல்லும்படி யாரும்

அனுமதிக்க மாட்டார்கள். என்னைப்போன்றவனை அனிடஸ் கொல்லாம். நாடு கடத்தலாம். குடியுரிமை இல்லாதபடி செய்துவிடலாம். அவரும் சரி, மற்றவர்களும் சரி. எனக்குப் பெருந்தீங்கு விளைவித்து விட்டதாக எண்ணிக்கொள்ளலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை.

## என் இறப்புக்குப்பின்

எனக்கு மரண தண்டனை வழங்கிய நீதிமான்களே! சாகும் நேரத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு தீர்க்க தரிசனம் ஏற்படுவதுண்டு. அதை வைத்துப் பார்க்கும்போது என் இறப்புக்குப்பின் உங்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கப் போகிறது. இதுவரை நான் தடுத்து வைத்திருந்த வாலிபர்கள் உங்களைக் கடுமையாக தாக்குவார்கள். என்னை நடத்தியதைப்போல் அவர்களையும் நீங்கள் நடத்த முடியாது. ஏனெனில், அவர்கள் வாலிபர்கள். சாதாரண காரியங்களில் நான் தவறுதலாக நடக்க முற்பட்டாலும் ஒரு தெய்வ சக்தி என்னைத் தடுக்கும். இதோ முடிவாக வரும் சாவெனும் பெருந்தீங்கு நேர இருக்கிறது. அந்த மரணத்தைத் தடுக்கும் தெய்வ வாக்கு ஒன்றும் கேட்கவில்லை. சாவு என்றால் ஒன்றுமே இல்லாத ஒரு நிலையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நினைவிழந்த நிலையாக, ஒரு மாறுதலாக, நமது ஆவி இவ்வுலகத்திலிருந்து மறு உலகத்திற்குச் செல்வதாகவும் இருக்கலாம். நினைவே இல்லாத— கனவிலும் கலையாத ஒருவித தூக்கநிலை அது என்றால் அதைவிட நன்மை ஏது என்பதை எண்ணிப்

பாருங்கள். அந்த ஓர் இரவு. ஒரு பேரரசன்கூட அந்த ஓர் இரவுக்கு ஈடில்லை. இறந்தவர்கள் எல்லோரும் அங்கேதான் இருக்கிறார்கள் என்றால் அதைவிட இன்பம் வேறு ஏது? ஆகவே மனிதன் அந்த மறு உலகத்துக்கு போய்ச் சேரும்போது இந்த உலகத்தில் நீதிபதிகள் என்று சொல்லிக்கொள்பவர்களிடமிருந்து மீண்டு விடுகிறான். அங்கே உண்மையிலேயே நீதி வழங்கும் மைனஸ், ராடமாந்தஸ், டிரிப்டோலெமஸ் போன்றவர்களும் மற்றத் தெய்வப்பிறவிகளும் இருக்கிறார்கள். அங்கே போவது நல்லதுதான். மேலும் அங்கே ஆர்க்மிடிஸ், மியு ஆயஸ், ஹெஸியாட், ஹோமர் ஆகியவர்களோடு அளவளாவுவதென்றால் எதையும் கொடுக்கலாமே! அது உண்மையாக இருந்தால் நான் மீண்டும் மீண்டும் சாகத் தயார். அங்கே பாலமீடஸ், டெல்மான் மகன் அஜாக்ஸ் இன்னும் அநீதி காரணமாக மடிந்த பழைய வீரர்கள் எவர்களிருந்தாலும் அவர்களைக் கண்டு பேசுவது எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா?

ஆகவே நீதிபதிகளே! மரணத்தைக் கண்டு அஞ்சாதீர்கள். நான் சாவதே நல்லது. இந்த சட்டங்களிலிருந்து மீறும் நேரம் வந்துவிட்டது. சாவைச் சரி என நான் ஒப்புக்கொள்வதால்தான் என்னைத் தண்டித்தவர்களிடமோ—என்மேல் குற்றம் சுமத்தியவர்களிடமோ நான் வருத்தப்படவில்லை.

[ஆனால் சபையோர்கள், உயிரையும், தங்களையும் நீதி மன்றத்தையும் துச்சமென மதித்தான் என்று தவறாக நினைத்துக்கொண்டு, மரண தண்டனையை

மீண்டுமோர்முறை உறுதிப் படுத்தி விட்டார்கள்.]

சாக்ரடீஸ், கலகலவெனச் சிரித்தான். "இவை யெல்லாம் வீண் சடங்குகள் என முன்னமே சொன்னேன். கோபப்பட்டீர்கள். ஒரு மைஞ வெள்ளிதான் என்னிடம் உள்ளது என்றேன். அப்போதும் கொதித்தெழுந்தீர்கள். என் நண்பர்கள் எனக்காக அபராதம் செலுத்த முன்வந்தார்கள். அவர்களையும் செங்கண் கொண்டு பார்த்தீர்கள். நியாயம் பொதுவாக வழங்குவது ஒன்று. இன்ன விதமான நியாயந்தான் வழங்க வேண்டுமென்று, வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாததற்கு முன்பே தீர்மானித்து வைத்துக் கொள்வது ஒன்று. இன்னாருக்கு இன்ன விதமான தண்டனையைத்தான் வழங்க வேண்டுமென்று நினைத்து, குற்றத்தைப் பின்னால் தள்ளி விடுவது ஒன்று. நியாயத்தை ஒரு தட்டிலும், தன் செல்வாக்கை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்துப் பார்த்து நீதி வழங்குவது ஒன்று. தனிப்பட்ட முறையிலே ஏற்படுகிற மனஸ்தாபங்களை தனக்கு நீதி மன்றத்தில் இடம் கிடைக்கும் நேரம் பார்த்து வஞ்சந் தீர்த்துக் கொள்வது ஒன்று. குற்றவாளி சொல்வதைத் தான் தெரிந்து கொள்ள முடியாத குறைமதியால் தண்டனை தந்துவிடுவது ஒன்று. தண்டனையேற்றவன் மாண்ட பிறகு தன் செய்கைக்கு வருந்திக் கண்ணீர் மல்குவது ஒன்று. ஆக இத்தனை விதங்களில் எனக்களித்த மரண தண்டனை எந்த விதத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும் நான் கவலைப்படவில்லை.

என் குழந்தைகள் பெரியவர்களான பிறகு அவர்களே நல்வழிப்படுத்துவதோ, தீய வழிச் செலுத்துவதோ உங்களுடைய பொறுப்பு.

நேரம் நெருங்கி விட்டது. நான் சாகப் பிறந்திருக்கின்றேன். நீங்கள் வாழப் பிறந்திருக்கின்றீர்கள். இறப்பா, பிறப்பா, எது நல்லது என்பதை ஆண்டவனே சொல்லட்டும் என்று மரணத்தின் கோரப் பற்களுக்கிடையே சிக்கியிருக்கும் நான் சொல்லி என் விண்ணப்பத்தை முடித்துக் கொள்ளுகின்றேன்.''

## தண்டனையில் தாமதம்

மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டிய விதம் விஷங்கொடுத்துக் கொல்ல வேண்டும் என்றும், அதுவும் இப்போது நகரத்தில் விழாவொன்று நடந்து கொண்டிருப்பதால் அதை முன்னிட்டு டிலோசுக்குச் சென்ற கப்பல் திரும்பி வந்ததும், அதாவது இன்றைக்குச் சரியாக 30-ஆவது நாள் விழா முடிந்து கப்பல் வந்து சேர்ந்ததும் அதற்கடுத்த நாள் மாலை 6-மணிக்குச் சாக்ரடீசுக்கு விஷங் கொடுத்துவிட வேண்டுமென்றும் அதுவரையில் குற்றவாளி தப்பித் தோடாமல் தற்காப்புக்காகக் காலில் விலங்கிட்டுச் சிறையில் காவலில் வைக்க வேண்டுமென்றும் நீதி மன்றம் தனது முடிவான தீர்ப்பை அறிவித்து விட்டது. அழுதவர்கள் அனேகர். ஆனந்தப்பட்டவர்களின் தொகையும் அந்த அளவிருக்கும். பொதுவாக மறுமலர்ச்சி காண விரும்பியவர்கள் புலம்பியே தீர்த்தனர்.

## சிறையிலே

காலில் விலங்கிட்டு உள்ளே தள்ளப்பட்டான். கவலை மற்றவர்களுக்கே தவிர, அறிஞன் கொஞ்சமும் கண்கலங்கவில்லை. தண்டனையேற்ற மறுநாளே இறக்கவேண்டியவன் இன்னும் முப்பது நாட்கள் உயிர் வாழ்வான். இதுவும் அபோலோவின் அருட் கடாட்சந்தான் என்று கொஞ்சம் மகிழ்ச்சி யடைந்த வர்கள் அனேகர். சிறையதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டான். சிறை ஊழியர்களும் கொஞ்சம் அன்பாக நடந்துகொண்டனர். சிறைக் கம்பிகள் பொன்னு லாக்கப்பட்டாலும் உள்ளே இருப்பவனுக்குப் பெயர் கைதிதான். தங்கப் பதக்கம் அணிந்திருக்க வேண்டிய தத்துவப் பெரியோன் காலில் இரும்புத் தளைகளை மாட்டியிருக்கின்றனர் கொலைகாரர்கள். கொள்ளைக்காரர்கள் மத்தியிலே தள்ளப்பட்டான் அப்பெரியோன். உள்நாட்டில் குழப்பஞ் செய்து கொண்டிருப்பவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்ல நேர்ந்தால், அங்கே அவர்களையுமறியாமல் ஓர் ஒற்றுமை யுண்டாவதைப் போலச் சாக்ரடீசின் கொள்கை பிடிக்காதிருந்தவர்கள்கூட நட்புக் கொள்ள ஆரம்பித்தனர்—நாள் நெருங்க நெருங்க நண்பர்களின் துக்கமும் நெருங்க ஆரம்பித்தது. நகரப் பொது மாளிகையில் வைத்து நகரப் பொதுச் செலவில் காப்பாற்றப்படவேண்டியவன் இருட் குகையில் கம்பிகளுக்குள்ளே கள்ளர்கள் மத்தியிலே தள்ளப்பட்டான். இது ஏதன்ஸ் நகருக்கே சகிக்க முடியாத அவமானம்.

"எத்தனையோ பேர்கள் அவரது உரையாடலைக் கேட்டு உயர்நிலை அடைந்திருந்தும், அதைச்சற்றும் பாராட்டாமல் இவருக்குக் கொலைத் தண்டனையை விதித்துத் தீராப் பழியைத் தேடிக்கொண்ட சிறியோர்" என செனபோன் என்ற அவரது நண்பன் கண்ணீர் மல்கினன்.

"எந்த நாடும் பெற முடியாத ஏந்தலை நாம் பெற்றோம். எனினும் இழந்து விட்டோம். இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் நாம் வருந்தி உழைத்தாலும் பெறமுடியாத ஓர் அருமையான நண்பனை நம் கண் முன்பாகவே சாகடிக்கிறோம். நாம் சாக்ரடீசைக் கொல்லவில்லை. நீதியையும் நேர்மையையும் நிர்தூளியாக்கி நாட்டின் பொதுச்சொத்தான சாக்ரடீசின் தத்துவத்தைச் சாகடிக்கிறோம். உண்மையை நாடு கடத்துகிறோம். உலகப் பொது விதியை உதாசீனம் செய்கிறோம். தக்கோரே திரும்பிப்பார்க்காமல் ஓடுங்கள். மிக்கோரே! மாண்டு போங்கள், என்று துணிந்து சொல்லிவிட்டோம். நமது கண்ணீர் வெள்ளத்தாலும் கால வெள்ளத்தாலும் துடைக்க முடியாத கறை", என்று அவனது அருமை நண்பன் பிளாட்டோ மனம் கசிந்துருகி வாழ்க்கையையே வெறுத்துவிட்டான்.

ஆனல் பல தோழர்கள் அந்த முப்பது நாட்களில் வந்து பார்த்த வண்ணமிருந்தனர். காணச் சென்றவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக நினைத்துச் சென்றனர். அதாவது இன்று நாம்

சிறையிலே காணப்போகும் சாக்ரடீஸ் கவலை தோய்ந்து, முகம் கறுகறுத்து, கைகால்கள் மெலிந்து, குரல் கம்மி, கம்பீரத் தொனியில்லாமல் விதியை நினைத்து வேதனைப்பட்டு, நம்மிடம் பேசுவதற்கும் மனமில்லாமல் இருப்பார். தூரத்திலிருந்தாகிலும் பார்த்துவிட்டு வரலாம் என்று பலர் சென்றார்கள். ஆனால் சிறையிலே சாக்ரடீசின் தோற்றத்தை முற்றிலும் மாறாகக் கண்டார்கள். வெளியிலே சாக்ரடீஸ் உலவியபோது இருந்ததைவிட, மிகத் தேஜசாக, தெளிவாகக், குழப்பமில்லாமல், கம்பீரத் தொனியோடு, முகமலர்ச்சிகொண்டு நண்பர்களை வரவேற்று அவர் உரையாடிய முறை மிக விசித்திரமாக இருந்தது.

சாக்ரடீஸ் சிறையிலும் ஓய்ந்திருக்கவில்லை. ஈஸாப்ஸ் எழுதிய கற்பனைக் கதைகளைச் செய்யுட் படுத்தினார். இடை இடையே சிம்மியாஸ், கெபெஸ், பீயோடன் முதலானவர்கள் அடிக்கடிச் சந்தித்து இன்னும் தெரிந்துகொள்ள வேண்டுவதைப் பற்றி உரையாடிச் சென்றார்கள்.

## நகரில்

நகரிலே அபோலோ என்ற தெய்வத்திற்குச் சிறப்பாக விழா நடந்துகொண்டிருந்தது. மக்கள் குதூகலக் கடலில் ஆழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் சாக்ரடீஸ் மன்னிக்கப்படவேண்டுமென்று வாக்களித்தவர்கள் வீடுகளில் துக்கங் கொண்டாடிக்கொண்டிருக்கின்றனர். சாக்ரடீஸ் வீட்டில் ஒரே அழுகுரல். திருவிழாவில் எங்கு பார்த்தாலும் உரையாடிக்

கொண்டிருக்கவேண்டிய சாக்ரடீஸ் இல்லை. அது அந்த விழாவுக்குப் பெருங்குறைதான். ஒரு விளுடி ஓராண்டாக இருக்கக்கூடாதா என்று எண்ணுகின்றனர் சாக்ரடீஸ் நண்பர்கள். ஓராண்டு ஒரு விளுடியாக இருக்கக்கூடாதா என்றெண்ணுகின்றனர் மெலிடஸ் நண்பர்கள். எனினும் காலம் கயவர்களுக்காகச் சுருங்கியோ, கண்ணியவான்களுக்காக விரிந்தோ போகவில்லை. அதன் முறைப்படியே கழிந்தது.

விழாத் தொடங்கியவுடன் ஒரு கப்பலை அலங்கரித்துப் பல பெரிய மனிதர்களை அதில் ஏற்றி டிலோஸ் என்ற தீவுக்கு அனுப்பியிருக்கின்றனர். அது திரும்ப ஒரு திங்கள் ஆகும். அதுவரை மரண தண்டனையடைந்திருந்த யாருக்கும் தண்டனையை நிறைவேற்றக் கூடாதென்பது பொதுவிதி. ஆகவே சாக்ரடீசின் தண்டனையில் தாமதம். இப்படி 29 நாட்கள் உருண்டோடின. 30-ஆம் நாள் அதிகாலை, சிறைக்குள்ளே:—

## நல்ல நண்பன்

(இவனை எப்படியாகிலும் தப்பிக்க வைக்க வேண்டும் என்று நினைத்த நண்பன் கிரீடோ 30–ஆவது நாள் விடிவதற்குள்ளே சிறைச்சாலைக்குள் நுழைந்து விட்டான். ஆனல், கொஞ்சமும் துக்க ரேகைகள் முகத்தில் தோன்ருமல் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கின்ருன் சாக்ரடீஸ். அவனே விழிக்கட்டும் என்று எழுப்பாமல் பக்கத்தில் சந்தடியின்றி அமர்ந்துவிட்டான் கிரீடோ.

## எழுந்த சாக்ரடீஸ்

சாக்ரடீஸ்: இவ்வளவு இருட்டில் ஏன் வந்தாய்?

கிரீடோ: (மௌனம்)

சா: இப்போது என்ன நேரமிருக்கும்?

கி: பொழுது புலரும் நேரம்.

சா: இவ்வளவு சீக்கிரமாகச் சிறைக்காப்போன் உன்னை அனுப்பியதற்காக வியப்படைகிறேன்.

கி: அவன் எனக்கு நன்றாகத் தெரிந்தவன். அவனுக்குப் பல உதவிகள் செய்திருக்கின்றேன்.

சா: நெடு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கின்றாயா?

கி: இல்லை, கொஞ்ச நேரமாக.

சா: அப்படியானால் ஏன் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கின்றாய்? ஏன் என்னை எழுப்பக் கூடாது?

கி: உண்மைதான். நான் கொண்ட வருத்தத்தின் காரணமாக எனக்குத் தூக்கம் வரவில்லை. ஆனால் தாங்கள் ஆனந்தமாகத் தூங்குகின்றீர்கள். உங்களுடைய இந்த அருமையான தூக்கத்தைக் கலைக்கக் கூடாது என்று விரும்பினேன். உங்கள் வாழ்நாள் முழுதுமே நீங்கள் சந்தோஷமாக இருக்கின்றீர்கள் என்பதை நான் பல முறை பார்த்திருக்கின்றேன். ஆனால், நீங்கள் இன்று கொண்டிருக்கின்ற மகிழ்ச்சி

யைக் காணும்போது அவையெல்லாம் பின்தங்கிப் போய் விடுகின்றன. இப்போது வந்திருக்கும் பேராபத்தை எவ்வளவு புன்சிரிப்போடு ஏற்றுக் கொள்ளுகின்றீர்கள்.

சாக் :—இல்லை கிரீடோ. இந்த தள்ளாத வயதில் நான் சாகப் பயப்படுவது மிகக்கொடுமை.

கிரீடோ :—உண்மைதான். இதைவிடக் குறைந்த இம்சைகளை அனுபவித்தவர்களெல்லாம் விதியை வெறுத்து ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சாக் :—போகட்டும் எதற்காக இங்கே வந்தாய்?

கிரீடோ :—நாளை மாலை உங்கள் முடிவு...............

சாக் :—ஏன், விழா முடிந்து டிலேசிலிருந்து கப்பல் வந்துவிட்டதா.

கிரீடோ :—இல்லை. இன்னும் வரவில்லை. இன்று நிச்சயம் வந்துவிடும். அது வந்து மறுநாள் தானே உங்கள் கடைசி நாள். நாளை நீங்கள் முடிந்துவிடப் போகின்றீர்கள்.

சாக் :—முடியட்டும் ஆனால் கப்பல் இன்று வராது.

கிரீடோ :—ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்?

சாக் :—கப்பல் வந்துசேர்ந்த அடுத்த நாளே நான் இறக்கவேண்டும் அல்லவா?

கிரீடோ :—ஆம். அதிகாரிகளும் நீதி மன்றத்தார் களும் அப்படித்தான் சொன்னார்கள்.

சாக் :—இல்லை. இன்றைய மூன்றும் நாள் தான் நான் இறப்பேன். இது என் மனம் எனக்களித்த கட்டளை.

கிரீடோ :—அப்படியானல், என் அருமை நண் பனே ! கடைசி முறையாக வேண்டுகிறேன். நீங்கள் எப்படியும் தப்பித்துக்கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரை உங்கள் பிரிவு பெரிய பூகம்பத்தை யுண்டாக்கிவிடும். மீண்டும் பெறமுடியாத ஓர் அருமையான நண்பனை நான் மாத்திரம் இழந்துவிட வில்லை. இந்த ஏதன்ஸ் இழந்துவிட்டது. உலகமே இழந்துவிட்டது. ஏன் ? வருங்கால தலைமுறைகள் அவ்வளவும் இழந்துவிட்டது. பலர் இழந்துவிட்டார் கள் என்றே சொல்லவேண்டும். ஏன்? கிரேக்க நாடே இழந்துவிட்டது. நம்முடைய உண்மையான நட்பைத் தெரிந்துகொள்ளாத சிலர், நான் என்னு டைய பணத்தைச் செலவு செய்தால் உங்களைக் காப்பாற்ற முடியும் என்று எண்ணுகிறார்கள். ஒரு உயர்ந்த நண்பனைவிடப் பணத்தைப் பெரிதெனமதிக்கும் கயமைக் குணத்தைவிட மிக மோசமானது உலகத்தில் வேறொன்றுமில்லை. நான் உங்களைக் காப்பாற்ற முயற்சித்தேன் என்பதை உலகம் ஒரு

நாளும் நம்பப்போவதில்லை. ஆனால் நீங்கள் தப்ப மறுக்கின்றீர்கள்.

சாக் :—நாம் ஏன் உலகத்தின் கருத்துகளுக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டும். நாம் எது சரி என நினைத்தோமோ அதையே செய்திருக்கிறோம். ஆனால், சமூகம் ஒரு நல்ல மனிதனுக்குக் கொடுமை இழைத்து விடவும் கூடும். கொடியவனை நல்லவனாக்கி விடவும் கூடும். உயர்ந்தவனைத் தாழ்த்தித் தாழ்ந்தவனை உயர்த்தி விடவும் செய்யும். சன்மார்க்கனைத் துன்மார்க்கனாகவும், துன்மார்க்கனைச் சன்மார்க்கனாகவும் செய்துவிடும். அரியணையிலிருந்து செங்கோல் பிடித்து நாடாண்டவனை நாடோடியாய்க் கந்தையுடுத்திக் கையில் ஓடேந்தித் திரியும்படி விட்டாலும் விட்டுவிடும். அல்லது கந்தையுடுத்தித் திரிந்தவனைச் சிங்காதனத்தமர்த்தினாலும் அமர்த்திவிடும். குப்பையைக் கோபுரமாக்கி, கோபுரத்தைக் குப்பையாக்கினாலும் ஆக்கும். அல்லது இரண்டையும் செய்யாமல் விட்டாலும் விட்டுவிடும். அதற்காக நான் அஞ்சவில்லை. நாம் மனிதர்களுடைய எல்லாக் கொள்கைகளையும் மதிக்க வேண்டியதில்லை. சிலவற்றையே மதிக்க வேண்டும். அதேபோல் எல்லாருடைய கொள்கைகளையும் மதிக்க வேண்டியதில்லை. சில மேதாவிகளுடைய கொள்கைகளையே மதிக்க வேண்டும். மருத்துவன் நோயாளியின் மனவேதனையை எண்ணினால் வியாதியைக் குணப்படுத்த முடியாது. கேவலம் வாழ்க்கையை மட்டும் நாம் கவனிக்கக் கூடாது. நல்வாழ்க்கையையே நன்கு

மதிக்க வேண்டும். அஃதொன்றைக் கடைபிடித்தால் போதும். அதனால் நீங்கள் துன்பத்தில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது.

கிரிடோ: உங்களை நாங்கள் மறைத்துவிடுவதன் மூலம் எங்களை நாங்களே ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்வதுபோலவும் அல்லது நாங்கள் தங்களை அரசாங்கப் பாதுகாப்பிலிருந்து திருடிவிட்டோம் என்ற குற்றம் சுமத்தப்படுவோம் என்றும், அல்லது எங்களுக்கு இது ஒரு பெரிய நஷ்டத்தையுண்டாக்கி விடும் என்றும், அல்லது பெரிய தண்டனையை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலையில் அகப்பட்டுக்கொள்வோம் என்றும் தாங்கள் கருதினால் தயவு செய்து அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள். நாங்கள் நீர் நினைப்பதைவிட அதிக அபாயத்தில் அகப்பட்டுக் கொள்வதானாலும் கவலைப்படவில்லை. ஆனால் தாங்கள் எப்படியும் உயிர் பிழைக்க வேண்டும்.

சாக்: ஆம். நான் அதை ஆழ்ந்து சிந்திக்கின்றேன்.

கிரிடோ: சிந்திக்க ஒன்றுமே இல்லை. உங்களை வெளியேற்றச் சம்மந்தப்பட்டவர்கள் தயாராக இருக்கின்றனர். என் பொருள் மாத்திரமல்ல, என் உயிரே உங்கள் விடுதலைக்காக. உங்களை வெளியேற்ற வந்திருக்கும் அவர்களுக்காக நான் ஒன்றும் அதிகமாகச் செலவழிக்கத் தேவையில்லை. என் பணச் செலவைப்பற்றித் தாங்கள் அதிகமாகக் கவலைப்பட்டால், நமது நகரத்தின் விவேகிகளும்,

தங்களுக்கும் எனக்கும் நண்பர்களான, சிம்மியாஸ், திபெஸ் என்ற இருவரும் இந்த வேலையைச் செய்து முடிக்கத் தயாராயுள்ளனர். வெளி நாட்டில் என்ன செய்வதென்று அஞ்சவேண்டாம். அங்கே மலர் மாலைகளோடு பலர் தங்களை வரவேற்கக் காத்துக் கொண்டிருக்கின்றனர். தெசேலே என்ற ஊருக்குப் போகத் தாங்கள் எண்ணிஞல் அங்கே தங்களுக்கு எந்தவிதத் தொல்லையுமில்லாமல் காப்பாற்ற ஆட்கள் உண்டு.

மேலும் தாங்கள் ஓர் தவற்றைச் செய்கிறீர்கள். காப்பாற்றப்பட வேண்டிய உயிரை இழக்கச் சித்த மாய்விட்டீர்கள். யார் தங்களைக் கொன்றுவிடத் திட்டமிட்டு நாகரிகச் சதி செய்து வெற்றி பெற்ருர் களோ, அவர்களிடம் இரக்கங்காட்டிவிட்டீர்கள். மற்ருென்று; உங்கள் குழந்தைகளை நிர்க்கதியாக்கு கின்றீர்கள். நீங்கள் நினைத்தால் அவர்களைக் கல்வி யறிவுடையவர்களாக்க முடியும். அனுதைக் குழந்தை களின் நிலைக்கு அக்குழந்தைகளைக் கொண்டு வரா தீர்கள். வாழ்நாள் எல்லாம் நீங்கள் பேசிவந்த அறம் ஒழுக்கம் என்பவைகளைப்பற்றி எண்ணிப் பாருங்கள். நான் என்னைப் பொறுத்த வரையிலும் எதிரிகளைக் கொழுக்கவிட்டுவிட்டுத் தாங்கள் உயிர் விடத் துணிந்ததை மிகமிக அவமானமாகக் கருது கிறேன். இவை எல்லாம் நம்முடைய கோழைத் தனத்திஞல் நடந்ததாகவே நான் கருதுகின்றேன். தப்பித்துக் கொள்ள நல்ல வாய்ப்பிருந்தும், நாங்கள் தங்களைத் தப்பிக்கச் செய்யாதது, அல்லது தாங்களே

தப்பிக்க எண்ணுதது ஆகிய இரண்டையும் அனுசரித்தால் நாம் எந்த நன்மைக்குமே தகுதியற்றவர்களாய் விடுவோம். சிந்தித்துப் பாருங்கள். சிந்திக்கும் நேரமும் கடந்துவிட்டது. இனி ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் சிறையிலிருந்து தப்பிச் செல்வது அதுவும் இன்றிரவே செய்து முடிக்க வேண்டும்.

சாக்: அன்புள்ள கிரீடோ! உங்கள் முடிவைப் பாராட்டுகின்றேன். ஆனால், நாம் எது சரி என்பதற்காக வாழ்நாள் முழுதும் போராடினேமோ, அந்த நிலேயே நம்மை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றது. இந்த யுகத்தில் உள்ள நீதிமான்களுக்கு என்னைக் கொல்லுவது சரி என்று படுவதால், எக்காலத்திலும் இந்த அநீதிக்கு மாற்றம் வராதா? வருங்காலம், நிச்சயம் தான் கடந்துவிட்ட இறந்த காலத்தை எண்ணி வருந்தவே செய்யும். எவ்வளவு கொடிய அபாயமான இறந்த காலத்தைக் கடந்து வந்திருக்கிறோம் என்பதை எண்ணி எண்ணி அது விம்மி விம்மி அழாமலிருக்காது.

பல போர்முனைகளிலே பயப்படாமல் போரிட்டோம். அப்போதெல்லாம் ஆயுதத்தையும் அஞ்சாமையும் நம்பினேம். பிறகு நீதிமன்றத்தில் அறத்துக்காகப் போராடினேம். அப்போது அறிவைத் துணைக்கழைத்தோம். ஆனல், இன்று சிறையிலிருந்து ஓடக் கோழைத்தனத்தைக் கூட்டாகச் சேர்த்துக் கொள்ளச் சொல்லுகின்றீர்கள். அன்று நாம் கண்ட அஞ்சாமையையும் வீரத்தையும் அறத்தையும் நெஞ்

சாழத்தின் சமாதியிலேயே அடக்கம் செய்துவிடுவதா? நீரே சொல்லும் இது நேர்மையா என்று. கொள்கையை மற்ருெருவர் அவமதித்து நடப்பது இயல்பு. தீயது செய்தலும், தீமைக்குத் தீமையையே திருப்பிக் கொடுத்தலும், நமக்குக் கெடுதல் செய்த ஒருவனுக்குப் பதில் கெடுதல் செய்து பழிக்குப்பழி வாங்கிக் கொள்வதும், ஒரு போதும் சரியல்ல என்ற கொள்கையில் நின்று நாம் நமது ஆராய்ச்சியை ஆரம்ப முதல் தொடங்கியிருக்கின்ருேம். அதனுல் ஏதன்ஸ் நீதி மன்றம் நமக்குக் கெடுதல் செய்யும் நோக்கத்தோடு எனக்கு மரண தண்டனை விதித்திருந்தால் அந்த நீதி மன்றத்தைப் பழிவாங்கும் உணர்ச்சியால் நாமும் தப்பித்தோடி அதைத் தலைகுனிய வைக்கலாமா என்பதை யோசித்துப்பார். நம்மால் கண்ணியப் படுத்தப்பட வேண்டிய நீதிமன்றத்தை நாமே சிதைத்துவிடலாமா என்பதை எண்ணிப்பார். தாயே தான் ஈன்ற சேயைக் கொல்வதைப் போன்றதல்லவா இந்தச் செய்கை.

கிரிடோ: அதைப் புரிந்து கொள்ளாத மனிதர்களிடம் நாம் சரணுகதியடைவதா?

சாக்: இதற்குப் பெயர் சரணுகதியா? தோல்வியை ஒப்புக்கொள்ளுகிற ஒருவனைக் கோழை என்கிறது உலகம். இது பரம்பரைப் பைத்தியக்காரத்தனம். தோல்வியை ஒப்புக்கொள்ளப் பெரும்பண்பு வேண்டும். வீரம் வேண்டும். தோல்வி வெற்றியின் முதல்படி. அனேக நல்ல காரியங்கள் கெடுதலி

லேயே தொடங்குகின்றன என்பதை நீ அறியாயா? கெட்ட மனத்தால் தூண்டப்பட்ட ஒருவன் செய்யும் தவற்றை மறைக்க ஏதேதோ தந்திரங்களைக் கையாண்டு மேலும் மேலும் கெட்டவனாய்விடுகிறான். பாய்மரத்தைக் கிழித்துவிடும் புயல்போல, தான் அழிவதற்கு, முன் அறிவிப்பாக அபாயத்தை விலை பேசுகிறான். அதனால் அறியாமையில் விழுந்து விடுகிறான்.

எவன் தைரியமாகத் தன் தவறுகளை ஒப்புக் கொள்ள முன் வருகிறானோ, அவனே நல்லவர்களின் முன்னோன். நீர் நினைப்பதைப்போலச் சிலரின் உதவி கொண்டு நான் வெளியே ஓடிவிட்டால், உயிரைப் பற்றி நான் கொண்டிருக்கும் கருத்துக்கள் நீதிமன்றத்தில் நானிட்ட வாதங்கள் எல்லாம் காட்டில் காய்ந்த நிலவாக முடியும். நான் சொன்னவைகளை மறுக்க முடியுமானால் மறுத்துச் சொல்லுங்கள் ஒப்புக் கொள்ளுகிறேன்.

கிரிடோ: உங்கள் வாதத்தை நான் மறுக்க முடியவில்லை. ஆனால், அறிஞரே! எந்த அநீதி உம்மைக் குற்றவாளியாக்கிக் கூண்டில் நிறுத்தியதோ, எந்த அநீதி உம்மைப் பழிவாங்கச் சில மானிடப் பதர்கள் உருவில் வந்ததோ, எந்த அநீதி உமது அறிவுக் கண்ணாடியில் ஒரு களங்கத்தை யுண்டாக்கியதோ, எந்த அநீதி உமது தத்துவப் பேராற்றலில் ஓர் அவமானக் கோட்டைக்கீற எண்ணியதோ, எந்த அநீதி தனது ஆவேசக்

குரலுக்கு ஆணித்தரமான பதிலளித்த உமது அஞ்சா நெஞ்சத்தோடு ஆவியையும் சேர்த்துக் குடிக்க எண்ணியதோ, எந்த அநீதியெனும் நெடும் பயணத் தில் அது காட்டும் ஆசை வார்த்தைகள் நிரம்பிய வேடிக்கைக் கதைகளை நம்பிச் சென்ற பல்லாயிர இளைஞர்களைப்பார்த்து அவ்வழி அபாயமென எச்சரித்து, அறவொளியாம் நல்வழி காட்டிய நல்லவ ராகிய உம்மை நஞ்சுண்ணப் பணித்ததோ அந்த அநீதியை இருக்கும் இடம் தெரியாமல் ஓட்ட வேண்டும். அதற்கு உம்மைத் தவிர வேறுயாரையுங் காணேம். மற்றவர்களெல்லாம் ஆட்டிடையனை நம்பி மந்தையில் சென்று ஓநாயின் இரைச்சலைக் கேட்டுப் பயந்து திரும்பிவிடும் ஆட்டுக்குட்டிகளைப் போன்றவர்கள். ஆகவே உம் போன்ற வீரர்கள் தேவை. நீர் அழிந்தால் உமது இடம் என்றென்றும் நிரப்பப்படமாட்டாது. வேறு யாருக்கும் இந்தப் பேராற்றலில்லை. நான் தங்கள்மேல் கொண்ட அன்பினுல் மாத்திரமல்ல. நமது தாயகமாம் கிரேக் கத்தின் நீதி தவறிய இந்தச் செய்கை என்றென்றும் உலக வரலாற்றிலே இடம் பெறக்கூடாது. இந்தக் கொடுமை நமது ஏதென்சுக்கு என்றும் மறைக்க முடி யாத அவமானச் சின்னம். வரலாற்றை வரை யறுக்கத் தொடங்கும் சரித்திரத் தந்தைகள் நமது நாட்டில் பிறந்தவர்களாயிருந்தாலும் வேற்று நாட்டவராயிருந்தாலும் இந்தக் கோர நிகழ்ச்சிக்கு விதிவிலக்களிப்பார்களா? அறிவின் சிகரமே! மாற்று ரைப் புறங்காணச் செய்த வீரமரபினர் நீதியைப் புறங்காணச் செய்தனர் என்ற தீராப்பழி என் தாய்

மேல் ஆணையாக என் தாய் நாட்டுக்கு வரக்கூடாது. ஆற்றலின் குன்றே! தத்துவத்தின் தூணே! சிந்தனைச் சுரங்கமே! தர்க்கவாத கேசரியே! கிரேக்கத்தின் கலை ஞானக் களஞ்சியமே! ஏதென்ஸ் அளித்த ஏந்தலே! இதோ என் கண்ணீரால் உமது மனக்கொதிப்பைத் தணியச் செய்யுங்கள். எரிமலைபோல் எரிந்துகொண் டிருக்கும் உமது உள்ளத்தின் செந்தீ என் கண்ணீரால் சாந்தியடையட்டும். இன்றே இச்சிறைச்சாலையை விட்டு வெளியேறுங்கள். யாரும் கண்டு கொள்ளாத வண்ணம் உம்மை அயல் நாட்டில் சேர்க்கின்றேன். இதோ, எனது செல்வ மூட்டை. இவை எல்லாம் உமது விடுதலைக்கே. இந்த அற்பச் செல்வத்தை மீண்டும் பெறலாம். உம்மைப் பெறவியலாது. மானிடவர்க்கம் மறைந்து மறைந்து தோன்றும். ஆனால் அந்த மானிடவர்க்கத்தின் விலைமதிக்க முடியா மாணிக்கமாகிய தங்களைப் பெறும் ஆற்றல் இவ் வையகத்துக்கு இருக்கப்போவதில்லை. உலகத்தில் ஒரே சூரியன். சந்திரனும் ஒன்று. சாக்ரடீசும் ஒருவர்தான் என்று கதறினன் கிரீடோ.

சாக்: (அவன் கண்களைத் துடைத்து) அன்புள்ள கிரீடோ! தாங்கள் என்மேல் கொண்டுள்ள மெய் யன்புக்காக என் மனமார்ந்த நன்றி. நான் உமது சொற்படி வெளியேறினலும் உம்மைப்போல் சுதந்திர மாக வாழ முடியுமா? கொலைகாரனைப்போல் தலை மறைவாய்த் திரியவேண்டும். அப்போது என்ன சொல்லும் மனம், எழுபதுக்கு மேற்பட்ட தள்ளாத வயதில் ஏதென்ஸ் நீதிமன்றத்தில் தன் வழக்கை

எடுத்துரைத்தான். மெலிடசும், அவனது நண்பர்களும் தன்மேல் சுமத்திய குற்றங்களுக்கெல்லாம் ஆணித்தரமாகப் பதிலளித்தான். அந்த நீதிமன்றம் தனக்களித்த, மரண தண்டனையை, மாற்றூரின் வாளை மார்பில் தாங்கும் வீரனைப்போல், தாங்கி வெளியே வந்தான். இன்று உயிருக்கே பயந்து சிறையிலிருந்து தப்பித்தோடி மக்கள் நடமாட்டமில்லாத கானகங்களில் வேடுவர்களுக்குப் பயந்து திரியும் விலங்கு போலத் திரிகின்ருன். சட்டங்களை எதிர்த்துப் போராடினன். அந்த சட்டங்கள் தன்னை அடையாளங் கண்டுகொள்ளாமலிருக்க உருமாறித் திரிகின்ருன் என்று ஏளனஞ் செய்யும்.

அந்த சட்டங்களின் அதிகார வரம்புக்கப்பாற்பட்ட அயல் நாடுகளுக்குச் சென்றுவிடுகிறேன் என்று வைத்துக்கொள். அங்கும் வல்லூருக்குப் பயந்து திரியும் ஒரு புருவின் நிம்மதியைக்கூட நான் அடைய முடியாதே. அங்கும் பகைவர்கள் படையெடுப்பார்கள். அரசாங்க ஒற்றர்கள் திரிவார்கள். அந்த நாட்டில் நான் இருவகைக் குற்றவாளி. ஒன்று:—சிறைச்சாலையிலிருந்து தப்பித்தோடிய குற்றவாளி. மற்ருென்று:—தன் தாய் நாட்டால் தண்டிக்கப்பட்டுத் தண்டனையை ஏற்க பயந்து அயல் நாட்டில் தலைமறைவாய்த் திரியும் குற்றவாளி. ஒரு சமயம் நான் அங்கே பகிரங்கமாகத் திரிகிறேன் என்று வைத்துக்கொள். என்னைத் தன் நாட்டுக்கு அனுப்பும்படி இந்த அரசாங்கம் கேட்கும். அந்த நாட்டுக்கு என்மேல் இருக்கும் அன்பினலோ, போகட்டும் ஒரு

ஏழை என்ற பரிதாபத்தாலோ, எப்படியோ பயந்து இங்கே வந்து ஒளிந்துகொண்டவனை நாம் ஏன் காட்டிக்கொடுக்க வேண்டுமென்ற அனுதாபத்தாலோ, அல்லது இரு நாடுகளுக்கும் ஏதாவது சிறிய பகையிலிருந்து, இதன் மூலம் பகை முடித்துக் கொள்ளலாம் என்ற சூழ்நிலையாலோ, நான் சரணடைந்த நாடு என்னை அனுப்ப மறுத்தால், இரு நாடுகளுக்கும் போர் மூளும். அந்தப் போரில் எவ்வளவு வீரர்கள் மடிவார்கள். வீரர்களைப் பிரிந்த தாய்மார்கள், மனைவிகள், மக்கள் சிந்தும் கண்ணீருக்கு நான் காரணமாக வேண்டுமா? என்பதை எண்ணிப்பாருங்கள். தெருவில் விழுந்து கிடக்கும் பிணங்களின் சதையைத் தின்னும் காக்கைகளுக்கும், கழுகுகளுக்கும், ஊளையிடும் நரிகளுக்கும் என் அறியாமையளித்த விருந்தாயிருக்கலாம். ஆனல், அந்த நகரமே பாழ்பட்டு, அந்தகாரத்தில் மூழ்கி மக்கள் கோவெனக் கதறும் கூக்குரலுக்கு என்னுடைய ஒரே உயிர் இசைபாடுமானல், அதைவிடக் கேவலம் என்ன இருக்க முடியும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

யாருமே என்னைக் கண்டுகொள்ளவில்லை என்று வைத்துக்கொள்வோம். ஒரு சமயம் சட்டங்களே என்னை அடையாளங் கண்டுகொண்டு வழிமறித்து, "சாக்ரடீஸ்! நில். எங்கே கோழை போல் ஓடுகிருய். நீ பிறப்பதற்கு முன்னல் உன் தாய் தந்தையர்கள் எங்கள் முன்னல்தான் அவர்கள் மணவினையைச் செய்துகொண்டார்கள். பிறகு நீ பிறந்தாய். உன்னை

வளர்த்ததும், படிக்க வைத்ததும் நாங்கள்தான். நீ இந்த மண்ணில் பிறந்தாய் என்று பறைசாற்றியதும், உனக்குத் தாயக உரிமை வழங்கியதும் நாங்கள்தான். உன் தாய் தந்தையர்கள் எங்கள் முன்னல் அடங்கி ஒடுங்கி இருந்தது ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்களாகிலும் எங்களைப்பற்றி நினைக்க வேண்டிய தேவையே இல்லாமல் போய்விட்டது. உன் நிலை அப்படி அல்ல. நீ உன்னுடைய பெற்றோர்களைவிட நீ பிறந்த நாட்டைவிட சட்டங்களாகிய எங்களையே அதிகமாக நேசித்தாய். அதனல்தான் நீ அடிக்கடி வெளியூர்களுக்குப் போனதுமில்லை. நீ போக விரும்பிய நாடுகளிலுள்ள சட்டங்களைவிட நீ பிறந்த நாட்டின் சட்டங்களாகிய நாங்களே மிகச்சிறந்தவர்கள் என்று நீ எண்ணம் கொண்டு வாளாயிருந்துவிடவில்லை. ஊர் அறியச் செய்தாய், உலகமறியச் செய்தாய். நம் தாயகத்தின் இளஞ்சிறார் முதல் வயோதிகர்வரை அனைவர்க்கும் புகட்டினய். ஏன்? சாக்ரடீஸ்! மற்றென்றை உனக்கு நினைவுபடுத்துகிறேம். உன்னைக் குற்றக்கூண்டிலே் நிறுத்தி, உன் குற்றம் நிரூபிக்கப்பட்டபிறகு நீ விரும்பினல் தாயக உரிமையை இழந்து வேற்றூர் செல்லலாம் என்று நீதி மன்றம் உன்னைக் கேட்டபோது. 'என் உயிருக்கு மேலாக, நான் பிறந்த தாயக மண்ணுக்கு மேலாக என்னை வளர்த்து ஆளாக்கிய சட்டங்களை மதிக்கிறேன், போற்றுகிறேன்' என்று மார்தட்டிக் கூறிய நீயா இன்று கோழைபோல் ஓடுகிருய், சட்டங்களாகிய நாங்கள் பிழை செய்திருந்தால் எங்கே பிழைபட்டோம் என்று ஊரறிய சொல்ல உனக்கு எல்லா

உரிமையும் வழங்கி இருந்தோம். நீ அதைத் தாராள மாகச் செய்திருக்கலாம். அப்போது உன்னை இந்த நாட்டின் எந்த சக்தியும் தடுத்திருக்காது. நீ எங்கள் குறைகளைச் சொல்ல உரிமையுண்டே தவிர, எங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க முடியாது என்று சொல்ல உனக்கு எந்த உரிமையும் இல்லை. எப்படி பெற்றோர்கள் பிள்ளைகளைத் தண்டித்தால், பிள்ளை களுக்கு பெற்றோர்களைத் திருப்பித் தண்டிக்க உரிமை இல்லையோ; எப்படி ஒரு எசமானன் அடிமையை அடித்தால், அடிமைத் திருப்பி எசமானனை அடிக்க எப்படி உரிமை இல்லையோ; அதேபோல் நாங்கள் (சட்டங்கள்) உனக்குத் தீமையே செய்திருந்தாலும், நீ திருப்பி எங்களுக்குத் தீமை செய்ய உரிமை இல்லை என்பதை எல்லோரையும்விட நீ விளக்கமாகத் தெரிந் தவன். அந்த வகையிலேதான் இவ்வளவு மக்களைக் கொண்ட ஏதென்ஸ் நகரத்தில் நீ தனியாகத் திகழ்ந் தாய். எங்கே சாக்ரடீஸ் என்று உன் நண்பர்களும் தேடி அலைந்தார்கள். 'எங்கே சாக்ரடீஸ்' என்று உன் பகைவர்களும் தேடினார்கள். நாங்களறிந்த மட்டில் நாட்டை உயிரென நேசித்தவன் உன்னைவிட வேறெவனும் இல்லை என்று நாங்கள் அறுதியிட்டுச் சொல்ல முடியும் என்று கேட்டால் என்ன செய்வது கிரிடோ?

கிரிடோ: எப்படி இருந்தாலும் இதை சகிக்க முடியாத அவமானம் என்று கருதுகின்றேன்.

**சாக்:** எது அவமானம். பிறந்த நாட்டின் பெருமையை நாளெல்லாம் பேசித் தனக்கு மரண

தண்டனை என்றவுடன் யாருக்கும் தெரியாமல் சந்து களிலே விழுந்துஓடுகிறுன் என்று கேட்குமே அதுதான் அவமானம் அதற்கென்னபதில்? சொல்லும் நண்பரே!

கிரிடோ : இங்கே நீங்கள் அந்தக் கெதிக்கு ஆளானுலும் வெளியூர்களிலே உங்களுக்கு அந்த நிலை இருக்காது.

சாக் : எப்படிச் சொல்ல முடியும். கொஞ்ச நாள் என் வருகை அவர்களுக்குக் களிப்பூட்டலாம். எதனுலே, மரண தண்டனையடையும் அளவுக்கு என்ன தீங்கு இந்த முதியவன் செய்தான். அழகாகவும் ஆணித்தரமாகவும் வாதிட்டானுமே நீதிமன்றத்தில் அப்படி இருந்தும் மரண தண்டனையளித்துவிட்டார் களே கொடியவர்கள் என்று மனிதருக்குள்ள சராசரி இறக்க சிந்தையால் பேசுவார்கள்.

கிரிடோ : அப்படி பேசுவது நல்லதுதானே. பேசட்டுமே.

சாக் : கொஞ்ச நாள் வரையில் அப்படி பேசு வார்கள். பிறகு என்ன நடக்கும் தெரியுமா?

கிரிடோ : என்ன நடக்கும்.

சாக் : முதலில் என் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிப்பார்கள். பிறகு என் தண்டனைக்கு என்ன காரணம் என்று கேட்பார்களல்லவா? கேட்டால் சொல்ல வேண்டியதுதானே.

கிரிடோ: ஆமாம். தாராளமாகச் சொல்லலாம்.

சாக்: எதை! அறத்தைப்பற்றியா?

கிரிடோ: ஆமாம்.

சாக்: (சிரித்துக்கொண்டே) நமது நாட்டின் அறம் சரி இல்லை என்று சொல்ல வேண்டுமல்லவா?

கிரிடோ: ஆமாம். அப்படித்தான் செய்ய வேண்டும்.

சாக்: அறம் வழுவிய ஒரு நாட்டின் பிறந்த குடிமகன் ஒருவனுக்குள்ள கடமை என்ன? நாட்டை விட்டே ஓடிவிடுவதா அல்லது வழுவிய அறத்தை நேர்படுத்துவதா. அறம் சரி இல்லை என்பதற்காக நானும் நீயும் மற்றெல்லோரும் பிறந்த நாட்டை விட்டு ஓடி விடுகிறோம் என்று வைத்துக்கொள். அதன் பிறகு இந்த மண்ணுக்கு நாடென்று பெயரா? காடென்று பெயரா?

கிரிடோ: (மௌனம்)

சாக்: வேறு எந்த நாட்டுக்குப் போனாலும் நாம் அந்த நாட்டின் குடிகளா அல்லது அயல் நாட்டாரா? சரி, உன் விருப்பப்படி போய்விடுகிறேன் என்று வைத்துக் கொள்வோம். அங்கே என்ன பேச முடியும். அறத்தைப் பற்றியா, நீதியைப் பற்றியா, நேர்மையைப் பற்றியா எதைப்பற்றிப்

பேசினாலும் அந்த நாட்டுக் குடிமக்கள் அவைகளை ஏற்றுக் கொள்வார்களா? கொள்ளமாட்டார்கள். ஏன் தெரியுமா? இவைகளெல்லாம் செய்ய இவனுக்கு இவன் பிறந்த நாடு எல்லா உரிமைகள் வழங்கி யிருந்தும் இப்படி உயிருக்குப் பயந்து ஓடி வந்து விட்டானே இவனா அறிஞன். இல்லை, இல்லை இவன் ஒரு சாதாரண மனிதனுக்கும் சமமானவனல்ல என்று தானே அவர்கள் பேசுவார்கள்.

கிரிடோ : ஒன்றும் பேசாமலிருந்து விடலாமே?

சாக் : அது எப்படி முடியும். அதை நாம் இங்கேயே செய்திருக்கலாமே. நாட்டில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு கடமை உண் டல்லவா? நான் இவ்வளவு நாளாகச் செய்த பணி என் தலையாய கடமை என எண்ணித் துணிந்தேன். மேலும், கிரிடோ! ஒரு நாட்டிலேயே பிறந்த அந்த நாட்டிலேயே வாழ்கின்றவனுக்கும், பிறந்த நாட்டை விட்டு பிற நாடு சென்று குடியேறுபவனுக்கும் உள்ள வேற்றுமை என்ன தெரியுமா?

கிரிடோ : தெரியாது.

சாக் : தன் நாட்டிலேயே பிறந்து தன் நாட்டி லேயே வாழ்கிறவன் குடி உரிமை பெற்றவன். கடமையைச் செய்து உரிமையைப் பெறுபவன். தான் பிறந்த நாட்டில் வாழ முடியாமலோ, வாழ விரும் பாமலோ, வாழத் தகுதியற்றோ வெளிநாட்டில் குடி யேறுபவன் குடி உரிமையில்லாதவன். கடமையை

மட்டிலுமே செய்துக்கொண்டு உரிமையைப் பெற முடியாதவன். இப்போது நீ சொல்லும் முடிவை ஏற்றுக்கொண்டால் நான் தெசாலெ என்ற நாட்டில் கடமையை மட்டிலுமே செய்துக்கொண்டு உரிமை பெறமுடியாதவன். ஆகவே, நான் எங்கே சென்றாலும் எனக்கு இரண்டாவது இடந்தான் கிடைக்கும். அப்படியே நான் இந்தத் தள்ளாத வயதில் என்ன கடமையை அந்த நாட்டிலே செய்துவிட முடியும். நீயே யோசித்துப்பார்.

கிரிடோ! இன்னமும் சொல்கிறேன். நான் பிறப்பதற்கு முன்னும் பின்னும் பிறந்தவர்கள். நான் பிறந்த வெகு நாட்களுக்குப்பிறகு பிறந்த இளைஞர் கள். என்னோடு நேற்றுவரை இருந்தவர்கள். என்னை எங்கும் கண்டவர்கள். நாட்டின் முன்னேற்றப் பாதையிலே என்னோடு கைக்கோர்த்து வந்தவர்கள் ஆகிய இவ்வளவு பேர்களுக்குமே நான் சொன்னவை களைக் கேட்டு சகித்துக் கொண்டிருக்க முடிய வில்லையே. என்னைப் பற்றி ஏதோ சிறிது தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் பிற நாட்டார் எப்படி சகித்துக் கொண்டிருப்பார்கள் சொல் கிரிடோ.

அங்கே இளைஞர்களைக் கெடுத்து விட்டாய் என்று தானே மரண தண்டனை விதித்தார்கள். நல்லதை தீயதென்றும், தீயதை நல்லதென்றும் உன் சொல் வண்மையினால் நாட்டினாய் என்றுதானே மரண தண்டனை யளித்தார்கள். ஏதென்ஸ் நகர மக்கள் தொழும் கடவுள்களைத் தொழாமல் நீ ஒரு புதுக்

கடவுளைத் தொழுதாய் என்றுதானே மரண தண்டனை யளித்தார்கள். விண்ணைப் பற்றியும், மண்ணைப் பற்றியும் ஆராய்ந்தாய் என்றுதானே உனக்கு மரண தண்டனை யளித்தார்கள். நீ தூய்மையான வீரனு யிருந்தால் என்ன செய்ய வேண்டும். அதைக் கண்ணியமாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இங்கே ஓடி வந்துவிட்டாயே. நீ எங்கள் நாட்டை எட்டிப் பிடிப்பதற்கு முன்பே உன் நாட்டு எல்லையிலேயே அகப்பட்டுக் கொண்டாய் என்று வைத்துக்கொள் என்ன நடக்கும். ஓகோ மரண தண்டனை தானே! அதுதான் முன்னமேயே கிடைத்து விட்டதே அதற்குமேல் என்ன தண்டனை கிடைக்கப் போகிறது என்ற தைரியமா? என்று கேட்டால் என்ன பதில் சொல்லலாம். சொல் கிரிடோ, சொல்.

கிரிடோ: தள்ளாத வயதென்கிறீர்கள். செழுமை நிறைந்த தத்துவத்தை தந்தீர்கள். உங்களுக்குக் குடும்பம் உண்டென்பதையும் ஒப்புக் கொண்டீர்கள். இன்னும் வாழ வேண்டிய சிறிது காலமாகிலும் வாழலாமே என்பதுதான் என் ஆசை. உங்களிடமிருந்து இன்னும் எவ்வளவோ தத்துவத்தை எதிர்பார்க்கிறது அதையும் சொல்லிவிட்டுப் போகக் கூடாதா.

சாக்: இல்லை. நான் எவ்வளவு சொல்ல வேண்டுமோ அந்த அளவுதான் தெய்வம் என்னை அனுமதித்தது. இனி என்னிடம் இந்த நாடோ,

நீங்களோ எதையும் எதிர்பார்க்கக்கூடாது என்பதன் முடிவுதான் இது என்று கருதுகின்றேன். ஆகவே, இனி நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்! என் பிரிவுக்காற்ருது வருந்துகிறீர்கள். அந்தத் துக்கத்தில் உங்களை நீங்களே மறந்து விடுகின்றீர்கள். இது சாதாரணமாக நண்பர்கள் ஒருவருக்கொருவர் கொள்ள வேண்டிய நட்புதான், எனினும் ஆவேச மிகுதியினுலே நாம் கடமையை மறந்துவிடக்கூடாது. நெருக்கடியான நேரத்தில் மௌனமாயிருப்பவன் நயவஞ்சகன் என்று சொல்வதைப்போல் நமது நாட்டில் அறிவுக்கே ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அந்த நேரத்தில் நாம் மௌனமாயிருக்கவில்லை. நமக்கு எது தெரிந்ததோ, அதை, எது சரி என்று பட்டதோ அதை, எது தேவை என்று உணர்ந் தோமோ அதை, எந்த நெருக்கடியிலும் சொல்லியே தீர்வது என்று கருதினேமோ அதை ஒளிவு மறை வில்லாமல், எந்த ஊதியத்தையும் எதிர்பாராமல் சொல்லியிருக்கின்ருேம். அதன் காரணமாக எனக்குக் கிடைத்த பரிசு மரண தண்டனை. நெடு நாட்களாக இந்த நாடு கொண்டிருந்த தவருன எண்ணத்தை மாற்றியமைக்க வேண்டுமெனக் கருதினேன் என்பதே குற்றமாகக் கருதி விட்டது. அந்த குற்றத்தின் பசி தீர நான் குருதி சிந்த வேண்டியதே முறை கிரிடோ! நீ ஏன் இதை உன் உரிய நண்பனுக்குக் கிடைத்த பரிசாய் எண்ணுமல் மரணம் என்று கருதினுய். நான் தான் ஏன் அப்படி நினைக்க வேண்டும். மற்றவர்கள் தான் ஏன் அப்படி நினைக்க வேண்டும். இவைகள் எல்லாம் எண்ணத்தின் சாயல்களே தவிர வேறல்ல.

நீ இப்படி தான்தோன்றியாக வந்து, எங்களை (சட்டம்) யும் அரசாங்கத்தையும் அழித்துவிடப் பார்க்கிறுயே. தனி மனிதர்கள் இப்படி சட்டத்தைப் புறக்கணித்து மிதித்து அவமதித்தால் சட்டப்படி செய்த முடிவுகளுக்குச் சக்தியில்லாமல் போனுல் அந்த மாதிரி ஒரு அரசாங்கம் அப்படியே அழியாமல் இருக்குமென்று கருதுகிறுயா? ஆகவே வாக்குவண்மை கொண்ட எவரும் சட்டத்தின் சார்பாக எவ்வளவோ பேச முடியும்.

உன்னை நாங்கள் அழிப்பது சரிதான் என்று நாங்கள் எண்ணினுல் நீயும் பதிலுக்கு எங்களையும் உன்னுடைய நாட்டையும் அழிக்கும் உரிமை உனக்குண்டு என்று சொல்லி விடுவதா? மகா உத்தமன் என்று சொல்லிக் கொள்கிறுயே, எல்லோரையும்விட தத்துவ ஞானி என்று சொல்லிக் கொள்கிறுயே, தாய் தந்தையர் மூதாதையர் எல்லோரையும்விட எனக்கு நாடுதான் பெரிது, அதைவிடப் பெரியது சட்டம். ஒவ்வொரு குடிமகனும் நேசிக்க வேண்டிய அருமையான ஒன்று உண்டென்ருல் அது சட்டந்தான் என்று அடிக்கடி சொல்வாயே, அப்படியெல்லாம் கூறையேறி கூறிய நீ யாருக்கும் தெரியாமல் ஓடப்பார்க்கின்ருயே என்ன நியாயம் என்று கேட்காதா கிரிடோ. தாய் தந்தையர்க்குத் தீங்கு செய்யாமலிருப்பதைப்போல நீ எங்களுக்கும் தீங்கு செய்யக் கூடாது.

முதலாவது:—எங்களையும் மீறிச் சட்டத்தை மீறுவதால்தான் பெற்ருேரையும் மீறுகிருய் என்ருகிறது.

இரண்டாவதாக:—உன் கல்விக்குக் காரணமாயிருந்தது நாங்கள். மூன்ருவதாக:—நீ எங்கள் கட்டளையை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டிருந்தும் எங்களுக்கு அடங்காமலும் நாங்கள் இடும் கட்டளைகள் தவருனவை என தெளிவுபடும்படி விளக்காமல் இருக்கிருய்.

இந்தக் கட்டளைகளையெல்லாம் நாங்கள் உன்மீது முரட்டுத்தனமாகச் சுமத்தவில்லை. இவற்றுக்கு அடங்கி நட, இல்லாவிட்டால் எங்கே தவறிவிட்டோம் என்பதை விளக்கமாக எடுத்துக்கூறு என்ருேம். ஆனுல் நீ இவற்றில் ஒன்றையும் செய்யாமல் ஓடப் பார்க்கின்ருய்.

நீ உன் விருப்பப்படி நடந்தால் இந்தக் குற்றச் சாட்டுகளுக்கெல்லாம் ஆளாக வேண்டி வரும். ஏன் தெரியுமா? மற்ற ஏதென்ஸானைவிட நீதான் இங்கே நிலையாக இருந்திருக்கிருய். இராணுவ சேவையின் போது ஒரே ஒரு தடவை இந்துமஸ் நாட்டுக்கோ வேறு எங்கேயோ போயிருக்கிருயே தவிர, விளையாட்டு வேடிக்கைப் பார்க்கக்கூட இந்த ஊரை விட்டு நீ வெளியே போனதில்லை. மற்ற நாடுகளையோ அவைகளின் சட்டங்களைப்பற்றியோ தெரிந்துக் கொள்ள வேண்டுமெனவும் நீ எண்ணியதில்லை.

இதுவரை நாங்கள் உனக்குப் பிடித்திருந்தோம். நீயும் எங்கள் ஆட்சிக்குட்பட்டு நடந்தாய். இது நீ மகிழ்ச்சியோடு வாழ்ந்ததற்கு அடையாளந்தானே. விசாரணையின்போது நீ விரும்பி இருந்தால், நாடு

கடத்திவிடுங்கள் என்று சொல்லியிருக்கலாம். இப்போது உன்னைப் போகவிடாதபடி தடுக்கும் அரசாங்கம் அப்போது உன்னைப் போகவிட்டிருக்குமே. ஆனல், நீயோ நாடு கடத்தப்பட்டு வாழ்வதைவிட சாவதே மேல் 'சாகத்தயார்' என்று பாசாங்கு செய்தாய். இந்த அருமையான பண்புகளை எல்லாம் இப்போது நீ மறந்துவிட்டாய். இப்போது எங்களை அழிக்கப் பார்க்கிருய். இந்நகரின் குடிமகனுக இருந்து அப்படியெல்லாம் ஆணை இட்ட நீ இப்போது கேவலமான ஒரு அடிமை நிலைக்குப் போகிருய். இதற்கு எப்படி பதில் சொல்வது கிரிடோ? உண்மை என்றுதானே ஒப்புக்கொள்ள வேண்டும்?

கிரிடோ: வேறு வழியில்லை. ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

சாக்: அப்போது சட்டம் 'சாக்ரடீஸ் நீ நிம்மதியாக இருந்தபோது எந்தவிதமான அவசரமோ அபாயமோ இல்லாமல் வாழ்ந்தபோது ஏமாற்றுவதற்கோ, ஏமாறுவதற்கோ இடம் இல்லாத போது இந்த விதிகளின்படியும், ஒப்பந்தங்களின்படியும் நடப்பதாக ஆணையிட்டாயே, இப்போது அவற்றை மீறுகிருயே! எழுபது ஆண்டுகள் இதைப்பற்றியெல்லாம் சிந்திக்க நேரம் இருந்தும் சட்டத்தை மீறத் துணிகிருயே! உனக்குப் பிடிக்கவில்லையென்ருல் நேர்மையற்றவை என்று உனக்குத் தோன்றினல் தாராளமாக இந்த நகரத்தைவிட்டு நீ போயிருக்கலாமே. இப்படி செய்யாதே சாக்ரடீஸ், ஊரைவிட்டோடிப் பல பேருடைய கேலிக்கு ஆளாகாதே.

இப்படி நீ முறை தவறி நடந்தால் உனக்கும் உன் நண்பர்களுக்கும் என்ன நன்மை கிடைக்கப் போகிறது. சட்டத்தைக் குலைக்கும் இவன் இங்கே ஏன் வந்தான். என்றுதான் வெளிநாட்டார் உன்னை வெறுப்போடு நோக்குவார்கள். அங்கே உள்ள நீதிபதிகள் உள்ளத்திலும் நாங்கள் உன்னைத் தண்டித்தது நியாயமே என்று படும்படிச் செய்து விடுவாய். சீரான அரசாங்கம் நடக்கும் ஊர்களை விட்டும், நல்லவர்களிடமிருந்தும் இப்படி நீ தப்பி ஓடிக்கொண்டே இருப்பாயா?

இந்த மாதிரி ஊர்விட்டு ஊர், நாடு விட்டு நாடு நாணமின்றி ஓடிக்கொண்டிருப்பாயா? சரி, நீ அங்கு என்ன பேசுவாய். இங்கு சொன்னதைப்போல் நேர்மை, நீதி, சம்பிரதாயங்கள், சட்டங்கள் ஆகிய எல்லாவற்றையும் மக்கள் மேலாகக் கருத வேண்டும் என்று சொல்வாயா?

அந்த அயலார் நீ புறப்பட்டு வந்த விபரங்களை யெல்லாம் கேட்டு எல்லாரும் நகைக்கும்படி செய் வாய். ஏனய்யா இந்தத் தள்ளாத வயதில் இங்கே ஓடி வந்தாய்? இன்னும் கொஞ்ச காலமே உயிர் வாழப் போகிறாய். அப்படி இருந்தும் வீணாசை கொண்டு சட்டங்களையே மீறிவிட்டாயே உனக்கு வெட்கமில்லையா? என்று கேட்பவர் யாரும் இருக்க மாட்டார்களா? அவர்கள் மகிழ்ச்சியோடிருக்கும் போது ஒரு வேளை அப்படி கேட்காதிருக்கலாம். அவர்களுக்குச் சினம் வந்துவிட்டால் உன்னை இழி

வாகப் பேசமாட்டார்களா? சாக்ரடீஸ்! நீ உயிரோடு தான் வாழ்வாய். ஆனால் எப்படிப்பட்ட வாழ்வு தெரியுமா? எல்லோரையும் பாராட்டிக் கொண்டு முகமன் பேசிக்கொண்டு வேலைக்காரனாய் வாழ்வாய். துன்மார்க்கனைத் தூயவனே என்று வாழ்த்துவாய். மதி கேட்டவனை மேதாவியே என்று போற்றுவாய். அறிவில்லாதவனை அறிஞனே என்று துதிப்பாய். வேறு எப்படி நீ வாழ முடியும். திக்கற்றவனாக, அனாதையைப்போல் வாழ்வாய். அங்கே வேறு என்ன செய்வாய். வெளி நாடான தெசாலிக்குச் சென்று நீ எதையோ உண்டு வாழ்வாய். நீதி, நேர்மை, இவற்றைக் குறித்து நீ பேசியதெல்லாம் என்ன ஆவதோ தெரியவில்லை. 'குழந்தைகளுக்காக உயிர் வாழ்கிறேன். அவர்களை வளர்த்துக் கல்வி அறிவு புகட்ட வேண்டும்' என்று சொன்னாலும் அவர்களைத் தெசாலிக்கு அழைத்துச் செல்வாயா? ஏதென்ஸ் நகரக் குடியுரிமையை அவர்கள் இழக்கும்படிச் செய்யப் போகிறாயா? இதுதான் நீ அவர்களுக்குச் செய்யும் நன்மையா? அல்லது அவர்களை விட்டுப் போனாலும் உயிரோடுதானே இருக்கிறேன். இங்கேயே அவர்கள் இருந்தால் உன் நண்பர்கள் அவர்களை நன்றாகக் கவனித்துக்கொள்வார்கள் என்பது உம்முடைய எண்ணமா? நீ தெசாலியில் வாழ்ந்தால்தான் உன்னுடைய நண்பர்கள் உன் குழந்தையைக் கவனித்துக்கொள்வார்களா? நீ மறு உலகத்தில் இருந்தால் நண்பர்கள் உங்கள் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள மாட்டார்களா? உன் நண்பர்கள் என்று நீங்கள் சொல்லிக்கொள்பவர்கள் நல்லவர்க

ளாக இருந்தால், நீ எங்கிருந்தாலும் அவர்கள் உம் குழந்தைகளை நிச்சயமாகக் காப்பாற்றுவார்கள்.

சாக்ரடீஸ்! வாழ்வையும் உன் மக்களையும் பற்றி முதலில் எண்ணுதே. நீதிதான் சிறந்தது. மறு உலகத்திலுள்ள நீதி வழுவா மன்னர்கள் உனக்கு நியாயம் வழங்குவார்கள். கிரிடோ சொல்வதைப் போல் செய்தால், நீயோ உனக்கு வேண்டியவர்களோ இம்மையிலும் சரி மறுமையிலும் சரி, சிறந்தவர்களாகவோ, நேர்மையுள்ளவர்களாகவோ, நியாயம் உள்ளவர்களாகவோ இருக்க முடியாது. இப்படியே நிரபராதியாக இறந்துவிடு. துன்பம் அனுபவிப்பவனுகவே இறந்துவிடு. நீதியை நேசித்தவனுக இறந்துவிடு. நேர்மையாளன் என்ற நற் பெயரோடு இறந்துவிடு. அஞ்சா நெஞ்சன் என்ற கௌரவத்தோடு இறந்துவிடு. கெட்டவனுக இறக்காதே! சட்டம் உன்னைப் பலி கொள்ளவில்லை. மனிதர்களே உன்னைப் பலி கொள்கிருர்கள். எங்கள்மேல் சீற்றம் கொள்ளாதே. நாங்கள் தவறுடையவர்கள் அல்ல. எங்கள் கண்களுக்கு எல்லாரும் சமம். எங்களுக்கு எந்த பேதமும் இல்லை என்று சட்டங்கள் சொன்னுல் என்ன செய்வது கிரிடோ.

கிரிடோ : (கண் கலக்கம்) மௌனம்.

## சிறையில் நடந்த
## சாக்ரடீஸ் முடிவைப்பற்றி கிரிடோ சொல்கிருன்

சாதாரணமாய் நானும் சில நண்பர்களும் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் சிறைச்சாலைக்குப்

பக்கத்தில் ஒரு திறந்த வெளியில் கூடுவோம். சிறைச் சாலைக் கதவுகள் திறந்தவுடன் உள்ளே செல்வோம். முதல் நாள் கிரேக்கத்திலிருந்து கப்பல் திரும்பி விட்டதென்ற செய்தியை அறிந்தோமாகையால் அன்று அதிகாலையிலேயே போனோம். நாங்கள் சிறைச்சாலையருகில் போனதும் காவலாளி வந்து, கொஞ்சம் பொறுங்கள். அதிகாரிகள் வந்து சாக்ர டீசுடைய கால் விலங்குகளைக் கழட்டிவிட்டு அவருக்கு இன்று விஷம் கொடுக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்துக் கொண்டிருக்கின்றனர்கள். அவர்கள் போனதும் நீங்கள் வரலாம் என்று சொல்லிவிட்டுப் போனான். கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பி வந்து எங்களை உள்ளே விட்டான். அப்போதுதான் விலங்கும் சங்கிலியும் கழற்றப்பட்டிருந்தன. சாக்ரடீஸ் மனைவி சாந்திபே குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். எங்களைக் கண்டதும், சகோதரர்களே! இன்றுதான் கடைசி முறையாக உமது நண்பரிடம் பேசப் போகிறீர்கள் என்று கண்ணீர் விட்டுக் கதறி அழத் தொடங்கினாள். கிரீடோ! இவளை வீட்டுக்கு யார் அழைத்துச் செல்லப் போகிறீர்கள் என்று சாக்ரடீஸ் சொன்னதும், கிரீடோவின் ஆட்கள் சிலர் சாந்திபேவை வீட்டுக்கழைத்துப் போனார்கள். அவளும் விம்மி விம்மி மார்பில் அடித்தபடி வீட்டுக்குச் சென்றாள்.

சாக்ரடீஸ் தம் படுக்கையில் உட்கார்ந்தபடி கால் களை மெதுவாகத் தடவி விட்டுக்கொண்டே நண்பர்

களே! இந்த வேடிக்கையைப் பாருங்கள். இன்பமும் துன்பமும் ஒன்ருய்ச் சேர்ந்திருக்க முடியாதாயினும், அவைகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தப்பாமல் செய்திருக்கின்ருன் ஆண்டவன். இவ்வளவு நாள் இந்தக் கால்விலங்கு நோயைத் தந்து வந்தது. இப் போது அது எடுக்கப்பட்டு விட்டதால் எவ்வளவு சுகமாயிருக்கிறது தெரியுமா என்று கால்களை வருடிக் கொண்டேயிருந்தார்.

நண்பர்கள்: ஐயோ உயிர்விடத் தயாராய் விட்டீர்களே!

சாக்ர: ஞானமடைந்தவன் ஒவ்வொருவனும் இந்த உடலை விட்டுப் போகவே விரும்புவான். ஆனல், அவனே வலிய சாவைத் தேடிக்கொள்ள மாட்டான். அது தவறு.

நண்பர்கள்: ஏன் அது மாத்திரம் தவருகும்.

சாக்ர: உடலானது கடவுள் நமக்குத்தந்த ஒரு சிறைச்சாலை. அதிலிருந்து நாமாகத் தப்பிப் போகக் கூடாது. அவரே விடுதலை செய்ய வேண்டும் என்று சில மேதைகள் சொல்லுவார்கள். இதன் பொருள் விளங்குவது கடினமாயிருக்கலாம். ஏனென்ருல், நாமனைவரும் ஆண்டவனுடைய பாதுகாப்பிலிருக் கிருேம். நாமனைவரும் அவருடைய சொத்து. நம்மை நாமே வதை செய்து கொள்ள நமக்கு உரிமை கிடையாது. ஆண்டவன் நமக்கு விடுதலை கொடுக்கும்வரை காத்திருக்க வேண்டும்.

ஞானமடைந்த ஒவ்வொருவனும் மரணத்தை ஆவலுடன் விரும்புவான் என்று நீர் சொன்னது இதற்கு நேர்மாருக இல்லையா? நாம் ஆண்டவனுடைய சொத்தாயிருந்து, அவர் பாதுகாப்பிலிருந்து காக்கப் பெறுவது உண்மையாயின் எப்படி அந்த ஞானியானவன் அந்தக் காப்பிலிருந்து விடுபடுவான், ஏன் உயிர்விட ஆவல் கொள்ள வேண்டும் என்று ஒருவர் கேட்டார்.

சாக்ர : ஓகோ ! என்மேல் குற்றம் மறுபடியும் சுமத்துகிறீர்கள். ஏன் உயிரைவிடப் போகிறீர் ? உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஏன் நீர் முயலவில்லை என்று என்னைக் கேட்பதற்குப்பதில் இந்தக் கேள்வியைக் கேட்கின்றீர்களல்லவா ?

நண்பர்கள் : ஆம் என்றனர்.

சாக்ர : கடவுள் காப்பில் நான் இருந்து வந்தேன். அவர் கட்டளையிட்டவுடன் மகிழ்ச்சியாக உயிரை விடுகிறேன். ஆகையால், மரணத்தைக் கண்டு துயரப்படக்கூடாது.

இந்த நேரத்தில் கிரீடோ எதையோ சொல்ல வாயெடுத்தான்.

சாக்ர : என்ன கிரீடோ. எதையோ சொல்ல வாயெடுத்தீரே, என்ன அது ?

கிரிடோ : ஒன்றுமில்லை சாக்ரடீஸ். உமக்கு விஷம் கொடுக்க வேண்டிய அதிகாரி சொல்கிருன்,

நீங்கள் அதிகமாய் பேசக்கூடாதாம். பேசினல் உடலில் வெப்பம்மேலிட்டு அந்த நஞ்சின் வேகத்தைத் தடுக்குமாம். வேகம் தடுக்கப்பட்டால் இறப்பு விரைவில் உண்டாகாமல் இரண்டு மூன்று முறை விஷம் கொடுக்க வேண்டி வருமாம் என்ருர்.

சாக்ர : அவன் கிடக்கட்டும். எத்தனை தரம் கொடுக்க வேண்டுமோ அத்தனை தரம் கொடுக்கச் சொல்லுங்கள் குடிப்பது என்று தீர்மானித்த பிறகு எவ்வளவுதான் குடித்தால் என்ன. நான் எப்போதும் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டே நடக்க வேண்டியவன். நான் இப்படி யோசித்துச் சிறந்தது எது என்று எனக்குத் தோன்றுகிறதோ, அதன்படியே நடப்பவன் நான். இப்போது அதைச் சோதிக்க இந்த வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. இது வரை எந்த லட்சியங்களை மதித்து வந்தேனே அவற்றை எப்படி மறுப்பது. அவற்றைவிடச் சிறந்த லட்சியங்களை நாம் கண்டுபிடிக்க முடியாதிருக்கும்வரை அவற்றை எப்படி மறுக்க முடியும்? அது நடக்க முடியாத காரியம். பலர் கூடி சிறைவாசம் அளிப்பது, குழந்தைகளைப் பயமுறுத்துவதுபோல் மருட்டுவது, இப்படி எல்லாம் செய்தாலும் கூட அது சாத்தியமில்லை. நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்ருல், அதற்குச் சரியான வழி என்ன? நீங்கள் பலருடைய கருத்துக்களையும் கவனிக்க வேண்டுமென்கிறீர்களே, சிலர் சொல்வதை மதித்து நடக்க வேண்டும். மற்றவர் சொல்வதைக் கவனிக்க வேண்டாம் என்று பேசிக் கொண்டிருந்தோமே அந்தப் பழைய வாதத்

தையே எடுத்துக் கொள்வோம். என்னைத் தண்டிப் பதற்குமுன் நாம் இந்தக் கருத்துக் கொண்டிருந்தது சரிதானா? அப்போது சரி என்று பட்ட வாதம் இப்போது வெறும் பொய் வாதம் ஆகிவிட்டதா? குழந்தையின் பிதற்றலாகி விட்டதா என்ன, இதைத் தான் உன்னோடு சேர்ந்து கவனிக்க எண்ணுகிறேன் கிரீடோ.

கிரிடோ: சரி நான் உங்களை மறுத்துப் பேச வில்லை. ஆனால், ஒன்று கேட்கிறேன் சாக்ரடீஸ். எங்களுக்கும் மற்ற நண்பர்களுக்கும் ஏதாவது நேருமே என்று தானே யோசிக்கிறீர்கள். நீங்கள் சிறையிலிருந்து தப்பி ஓடி விட்டால் வேவுக்காரர்கள் நாங்கள் உங்களைத் திருட்டுத்தனமாக மீட்டு விட்ட தற்காக எங்களைச் சிக்கலில் மாட்டிவிடுவார்கள். எங்கள் சொத்து முழுவதையுமோ, பெரும்பகுதி யையோ இதனால் நாங்கள் இழக்க நேருமோ, இன்னும் ஏதாவது பேராபத்து நேருமோ என்று தானே பயப்படுகிறீர்கள். எங்களைப் பற்றி அப்படி எந்தவிதமான ஐயமும் கொள்ளவேண்டாம். உங்களைக் காப்பாற்ற வேண்டி நாங்கள் துணிந்து நிற்க வேண்டியதுதான். இன்னும் பேராபத்து இருந்தாலும் சரி நாங்கள் துணிந்து விட்டோம். ஆகவே, நாங்கள் சொல்லுகிறபடி செய்யுங்கள் என்று கடைசி முறையாகக் கெஞ்சிப் பார்த்தான். எனினும் பயனில்லை.

சாக்ர: கிரீடோ! நீங்கள் நாளை இறந்துவிடப் போவதில்லை. அந்த மாதிரி நடக்கும் என்று யாரும்

நினைக்கும் நிலையில் நீங்கள் இல்லை. ஆகவே, எதிலும் ஈடுபாடில்லாமல் இருக்கிறீர்கள். சந்தர்ப்ப வசத்தால் ஏமாந்து போகும் நிலையில் நீங்கள் இல்லை. என்மேல் அளவற்ற அன்பு தவிர வேறொன்றுமில்லை. சரிதானே.

கிரிடோ : சரிதான்.

சாக்ர : அதாவது நல்லதைப் போற்றவேண்டும் தீயதைப் போற்றக் கூடாது. அப்படித்தானே.

கிரிடோ : ஆமாம்.

சாக்ர : நான் நல்லவன் என்று எப்படித் தீர்மானிக்கிறாய், என் தோற்றத்தாலா, கருத்தாலா.

கிரிடோ : கருத்தால்

சாக்ர : நம் கருத்தென்ன? அறிவாளி ஒரே மனிதனாக இருந்தால் கூட பின்பற்ற வேண்டும் இல்லையா.

கிரிடோ : ஆமாம்.

சாக்ர சான்றோர்களுடைய கருத்துக்கள் நல்லவை. அறிவிலிகளின் கருத்துக்கள் தீயவை. அப்படித்தானே.

கிரிடோ : ஆமாம்.

சாக்ர : இன்னொன்று : உடற்பயிற்சியில் ஈடுபடுகிற மாணவன் ஒவ்வொருவனும் தன்னைப்

பாராட்டுவதையும், குறைகூறுவதையும் கவனித்துக் கொண்டிருப்பதா அல்லது தன் ஆசிரியரோ உடற் பயிற்சி அளிப்பவரோ கொடுக்கும் பயிற்சியைக் கவனிப்பதா.

கிரிடோ : அந்த ஒரு ஆசிரியர் கொடுக்கும் கருத்தைத்தான் கவனிக்க வேண்டும்.

சாக் : அந்த ஒரு மனிதன் கண்டிப்பான் என்று அஞ்சியோ அவன் பாராட்டுவதை விரும்பியோ தான் இருக்க வேண்டும். எல்லோரும் சொல்வதைக் கவனிக்கக் கூடாது அப்படித்தானே.

கிரிடோ : ஆம். அதுவே தான்.

சாக்ர : மற்ற எல்லோருடைய கருத்தின்படி நடப்பதைவிட தன் ஆசிரியருக்கு எது நல்லது என்று படுகிறதோ அதன்படி செய்து, பயிற்சி பெற்று, ஆசிரியரைப்போல, தக்கதை உண்டும், பருகியும் வாழ வேண்டும். ஏனென்றால், அந்த ஆசிரியர் தானே மாணவனுக்கு எது தேவை என்று உணர்ந்தவர் இல்லையா ?

கிரிடோ : ஆமாம்.

சாக்ர : ஆ! உண்மைக்கு வெகு சமீபத்தில் வந்து விட்டீர்கள். நானும் சாவின் சமீபத்துக்கு வந்து விட்டேன். நான் யார் சொல்லி இந்த முடிவுக்கு வந்தேன் என்று உங்களால் சொல்ல முடியுமா ?

கிரிடோ: யார் சொல்லி என்று சரியாகத் தெரிய வில்லை. ஆனால், அந்த மூவர் சுமத்திய பழிகள் சொல்லி என்று நினைக்கிறேன்.

சாக்ர: அங்கேதான் தவறி விட்டீர்கள். மூவர் குற்றம் சுமத்தினார்கள். உண்மைதான். அவர்கள் சுமத்திய குற்றத்தை உடனே நம்பி எனக்கு நீதி மன்றம் மரண தண்டனை அளித்ததா? இல்லை, என்னை யும் அழைத்து விசாரித்தது. அந்த உரிமை எனக் கிருந்தது என்பதால், நானும் என்னாலான குற்ற மறுப்பு வாதத்தைப் புரிந்தேன். ஏன், நான் இந்த நாட்டில் பிறந்த குடிமகன் என்ற உரிமையால், சரி என் குற்ற மறுப்பு முடிந்த உடனே மரண தண்டனை யளித்துவிட்டதா? இல்லை. ஏன்? நீதி மன்றத்தில் வீற்றிருக்கும் ஒவ்வொருவருடைய கருத்தைக் கேட்க வேண்டுமே. அதனால் என்ன செய்தார்கள். என் உயி ரைத் தாக்கல் செய்து வாக்குப் பதிவு நடத்தினார்கள் அதில் கிடைத்த தீர்ப்பென்ன? நான் சாக வேண்டு மென்பது. இவ்வளவு சடங்குகளையும் இயக்கியது எது? சட்டங்கள். அந்த சட்டங்களுக்கு இவ்வளவும் செய்ய அதிகாரம் இருந்தது. சரி, அந்தச் சட்டங்களை யார் செய்தார்கள்? நமது முன்னோர்கள். அவர்கள் வழிவந்த நாம் அவர்கள் செய்த சட்டங்களுக்கும் அடங்கி நடக்க வேண்டியதுதானே. இந்த விதி ஏதென்சில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் பொருந்தியாக வேண்டுமல்லவா? அப்படி இருக்கும் போது எனக்கு மட்டிலும் பொருந்தாது என்று வாதாடுவது எப்படி நியாயமாகும். ஆகவே, என்

சாவில் எந்தக் குழப்பமுமில்லை என்ற முடிவுக்கு நான் வந்ததும், இதோ இன்னும் சிறிது நேரத்தில் தண்டனையுருவில் வரப்போகும் விஷத்தை நான் குடிக்க மறுப்பேனுனால், என்னைப்போல் ஒரு கோழை, என்னைப்போல் ஒரு கயவன், என்னைப்போல் ஒரு பாசாங்குக்காரன், வேறு எவனும் இருக்க முடியாது.

நமது முன்னேனுன பெரிக்ளஸ் என்ற பேரறிஞன், ஏதன்ஸ் வீரர்கள் போரில் மடிந்தபோது என்ன பேசினுன் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

## பெரிக்ளஸ் கல்லறைச் சொற்பொழிவு

" இம்மனிதர்களும், இவர்களைப் போன்றுரும் ஏதென்சை மாட்சிமை யுடையதாக்கினர். கிரேக்கர்களிடையே சிலரைப் போன்று அவர்கள் ஆற்றியிருக்கும் செயல்களைச் சொற்களால் மிகைப்படுத்திக் கூற முடியாது.

இங்கே நாம் காணும் முடிவு நமக்கு உண்மையிலேயே காட்டுவது நல்ல உயிர் என்பது. அதன் சக்தியின் முதல் அடையாளத்திலிருந்து முடிவில் அதன் முதிர்ச்சி வரையில் எத்தகையது என்பதனையாகும். ஏனென்றுல் வாழ்வின் முந்திய குறிப்பேடுகள் தவறுகளையும், தோல்விகளையும் காட்டியிருந்தாலும்கூட, அவை எல்லாவற்றிற்கும் சமமாக, வீரார்ந்த கடைசி நாழிகைக் கடமையின் உறுதியை மதிப்பிடுவது நீதியாகும். அவர்கள் தீமையை

நன்மையின் மூலம் துடைத்தனர். நகரத்திற்கு அவர்கள் சொந்த வாழ்க்கையில் செய்திருந்த தவறுகளைவிடப் படைவீரர்களாக மிகுந்த பணியாற்றியுள்ளனர். அங்கே எந்நெஞ்சங்களும் மங்கலடையவில்லை. ஏனெனில், அவர்கள் தற்புகழ்ச்சியைவிட செல்வத்தை மிகுதியாக விரும்பினர். எங்கும் ஏழையின் செல்வக்கனவில் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. இவை எல்லாவற்றையும் நகரத்தின் பொருட்டு போர் புரிவதற்காக, புறத்தே ஒதுக்கி வைத்தனர். நகரன்னையின் புகழுக்காகப் பழி வாங்கத் திரியும் செயலை ஓர் உயர்ந்த புகழ் வாய்ந்தச் செயலாக எண்ணிக் கொண்டனர். நம்பி உறுதி காண முடியாத நம்பிக்கை தெய்வமும் அவர்களை விருப்பம்போல் அனுப்பியதும், அவர்கள் தங்கள் எதிரிகள் நெருங்கிய உடன் தங்கள் ஆண்மை வலிமையுடன் எதிர்த்தனர். பின்னர் போரின் அதிர்ச்சி வந்தபோது மிகக் கூடுதலாகத் துயர்படுவதையே, பலவீனத்தின் மூலம் உயிர் பிழைப்பதைவிட விரும்பித் தேர்ந்தெடுத்தனர். ஆனால், அவர்களைப் பற்றிய நினைவு மனிதர் உதடுகளில் தோன்றும் இழி உரைகளைத் தப்பிவிட்டது. ஆனால் அவர்கள் அதற்குப் பதிலாகத் தங்கள் உடல்களில், மனிதக் கரங்கள் அளித்த அடையாளப் பொறிகளைத் தாங்கியதுடன், ஒரு கணநேரத்தில் தங்கள் வாழ்வின் மேலுச்சக் கட்டத்திலே, அவர்களுடைய இறக்கும் கண்கள் அச்சத்தாலன்றி புகழினால் நிறைக்கப்பட்டிருந்தமையால் இவ்வுலகை விட்டு எடுத்தேகப் பட்டனர்.

அத்தகைய மனிதர்கள் இங்கே வீழ்ந்துள்ளனர்; அவர்களது நகரமும் அவர்களுக்கு அத்தகைய உள்ளுயிர்ப்பூட்டியது அவர்களுடைய கடுமையான நேரத்திலிருந்து நாம் விட்டு வைக்கப் படுவோமாக என்பதே: ஆனால் நாம் வெற்றியின் குறைந்த ஊக்கத்துடன் நமது பகைவரை எதிர்ப் படுதலை உறுதியாக அணுக வேண்டும். நாம் பலம் பெறுவோம். இரு முறை கூறிய வாதங்களிலிருந்து மட்டுமேயன்றி போரிலே வீரத்தைக் காட்டுவது எவ்வளவு நேர்த்தியானதாகவும், உயர்ந்ததாகவும் இருக்கிறது. ஆனால் நாள்தோறும் நமக்கு முன்னால் இருக்கும் நமது பெரிய நகரத்தின் வாழ்க்கைக் காட்சி களையும், அவற்றைப் பார்க்கும்போது நகரிடத்து மேன்மேலும் காதலுற்றும், இன்னும் நகரத்தாயின் இப்பெருமையனைத்தும், அவளுடைய குழந்தைகளின் வீரத் துணிவுக்கும், தம் கடமையை அறிந்த அறிஞர்க் கும், நல்ல மனிதனின் தற்காப்பு கட்டுப்பாட்டுப் பணிக்கும், அவள் சார்பாக உயர்ந்த காணிக்கையாகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த மனிதர்களுக்கும், கடமைப்பட்டதென்பதை நினைவிலிருத்திக் கொண்டு, நகரத்தின் சுறுசுறுப்பான காட்சியிலிருந்து உறம் பெறுவோமாக. அவ்வாறு அவர்கள் தங்கள் உடல் களைப் பொது நன்மைக்குத் தந்துவிட்டு, ஒவ்வொரு வரும் தமது சொந்த நில உரிமையாக, என்றும் இறவாப் புகழையும் அதனோடு அனைத்திலும் நனி யுணர்வாகக் கல்லறைகளில் அவர்களுடைய எலும்பு களை வைத்திருப்பதன்று. ஆனால், மனிதர்கள் உள்ளங்களில் வீடமைத்துப் பசுமையாகவே இருந்து

அங்கு அவர்களுடைய புகழை உள்ளங்கிளர் பேச்சாக வெளிப்படுத்தவும், அல்லது அம்மனிதர்களும் வாய்ப் பிற்குத் தக்கவாறு செயல் புரிந்திடும்படியான உயர்வைப் பெறுகிருர்கள். ஏனென்ருல் உலக முழுவதுமே புகழ் பெற்ற மனிதர்களின் கல்லறையே எவ்வாறெனில் அவர்களுடைய வரலாறு அவர்கள் பிறந்த மண்ணில் புதைக்குழிக் கல்லின் மேல் மட்டுமே செதுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனல் தொலை வில் உள்ள உயிர்களின் கண்ணுல் காணக்கூடிய அடையாளத்துடனன்று. ஆனல் மற்ற மனிதர் களின் உயிர்ப் பொருள்களுடன் இணைக்கப்பட்டிருக் கின்றது.

இப்போது நீங்கள் அவர்கள் ஆற்றியுள்ள வற்றில் அவர்களை மிஞ்சுவதற்குப் போட்டியிட வேண்டும். எனவே நான் நம்முடன் நிற்கும், இறந்துபட்டோரின் பெற்ருேருடன் புலம்பவில்லை. அவர்களுக்கு ஆறுதல் கூறுவேன்.

ஏனென்ருல், அவர்களுக்குத் தெரிந்தவை அவர்கள் பலவகைப்பட்ட வாய்ப்புகள் கொண்ட உலகத்தில் பிறந்திருப்பதும், எவனுக்கு நல் வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகிறதோ, அவனே மகிழ்ச்சியாக இருப்பவனுகக் கணக்கிடப்படலாகும் என்பதும், உச்சமான சோகம் உங்களுக்கு இன்றிருப் பது போன்றது, அல்லது உயர்ந்த வீழ்ச்சி. வாழ்வும் மகிழ்ச்சியும் அதே அளவாக வகுக்கப்பட்டிருக்கும் இவர்களுக்கு நேர்ந்தது என்பதாகும்.

எனக்குத் தெரியும். உங்களுக்கு ஆறுதல் கூறுவது எளிதன்று என்பது. மற்றவர்கள் மகிழ்ச்சியுறும்போது, அடிக்கடி உங்களுக்கும் அது முன்பு அவ்வாறு சொந்தமாயிருந்ததைப்பற்றிய நினைவுகள் தோன்றுமென்பதுடன், மேலும் மனிதர்கள் தாங்கள் என்றுமே சுவைத்தறியாத ஒன்றை இழப்பதற்கு வருந்துவதில்லை. ஆனால் தங்களுக்கு விருப்பாகிப் போயிருந்த ஒன்று தங்களிடமிருந்து பறிக்கப்படும் போது துயரடைகிறார்கள் என்பதையும் நானறிவேன். இப்போது நீங்கள் மற்ற மக்களின் நம்பிக்கையுடனும், துணிவான நெஞ்சத்துடனும் இருக்க வேண்டும். இப்போது வயது வந்தவர்கள் அதைச் சாதிப்பார்கள். உங்கள் வட்டாரத்திலுள்ள இடைவெளியை நீங்கள் மறப்பதற்கு உதவுவதுடன், நகரத்திற்கும், அதன் தொழிலாளர்கள் வீரர் அணிகளிலும் உதவுவார்கள். எம் மனிதனும் மற்றவர்களைப் போலவே நகரத்தின் பேரிடரான வேளையில், தன் குடும்பமும் இடரான தருணத்தில் இருந்தாலொழிய, ஒரு நியாயமான அறிவுரையை வழங்கிவிட முடியாது. வீரியத்தின் வயதைக் கடந்துள்ளோர்க்கு நான் கூறுவது:— "நீண்ட ஆண்டுகளிலிருந்த மகிழ்ச்சியை அவ்வளவு ஆதாயமாக, இன்னும் இருக்கக்கூடிய குறுகிய கால வழிக்கு முன்பாக நிறுத்திக்கொண்டு, உங்கள் பளுவை இறந்தவனின் புகழால் குறைத்துக் கொள்ளுங்கள் ஏனென்றால் புகழால் ஏற்படும் காதல் மட்டுமே காலத்தால் பழமை பட்டுப் போவதில்லை. இப்புகழே சிலர் கூறுவதுபோல் பொன் அன்று. தடுக்க முடியாத வாழ்விறுதியின்போது போற்றிப்

பாராட்டப்படுகிறது" என்று கல்லறைகளைச் சுற்றி நின்ற, இறந்துபட்டோரின், அதிலும் சிறப்பாகப் போரில் வீரமரணம் எய்தியோரின் பெற்றோர்களுக்கும் சுற்றத்தாருக்கும் நகரத்தாருக்கும் ஆறுதல் கூறினான். (எல்லோரும் அமைதியாகச் சென்றனர் என்று வரலாறு கூறுகிறது.) ஆகவே என் அருமை நண்பர்களே, ஏற்கெனவே உங்கள் துணை கொண்டு என் மனைவி மக்களை வீட்டுக்கனுப்பிவிட்டேன். அவளாவது உறுதியோடு சென்றாள். நீங்கள் இன்னும் அழுது புலம்பிக்கொண்டிருக்கின்றீர்கள். பெண் குலத்துக்கிருந்த நெஞ்சுரம்கூட ஆண்களாகிய உங்களுக்கு இல்லாமல் போய்விட்டதா? என்று சாக்ரடீஸ் சொன்னவுடன் ஒருவாறு அனைவரும் அழுகையை நிறுத்தினர்.

(பிறகு எல்லோரும் ஒருமுகமாகச் சேர்ந்து சாக்ரடீஸ்! நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர்.)

சாக்ரடீஸ்: என் அருமை நண்பர்களே! நான் உங்களுக்கு இவ்வளவு நாள் சொல்லி வந்ததைச் செய்தால் போதும். உங்களுடைய உள்ளங்களை தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். அதனைத் தவருமல் செய்தால் மற்றவைகள் தாமே வரும். இப்போது நீங்கள் எனக்கு எவ்வித உறுதியும் செய்யாமலிருந்தாலும், உங்கள் வாழ்வை நான் இவ்வளவு நாள் சொன்னபடி நீங்கள் உங்கள் மனத் தூய்மையைப் பாதுகாத்து வந்தால் என் குடும்பத்தைப்

பற்றியும் உங்கள் குடும்பங்களைப்பற்றியும் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்று நான் சொல்லாமலே நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

இன்று நாம் பேசிய கருத்துக்களையும் இதுவரை நாம் பேசிய கருத்துக்களையும் மறந்து நான் குறிப்பிட்ட வழியில் நடக்கத் தவறுவீர்களானால், நீங்கள் என் குடும்பத்தைப்பற்றி எனக்கு எவ்வளவு வாக்குறுதி கொடுத்தாலும் பயனில்லை.

கிரீடோ: நாங்கள் அனைவரும் எங்களால் இயன்ற அளவு செய்கிறோம். தங்களை எந்த முறையில் அடக்கம் செய்ய வேண்டுமென்று பணிக்கிறீர்கள்.

சாக்ரடீஸ்: உங்கள் எண்ணப்படி செய்யலாம். ஆனால் நான் உங்களுக்கு அகப்படமாட்டேன் (என்று சொல்லிச் சிரித்தார் சாக்ரடீஸ்.) நண்பர்களே! கிரிடோ என்ன சொல்லியும் நம்பமாட்டார். நீங்களும் தொடைவிடைகளால் விவாதித்தும், ஒப்புதலும், மறுப்பும் ஒழுங்காக எடுத்துச் சொல்லியும், இன்னும் சிறிது நேரத்தில் உடலைவிட்டு விடுதலையடைந்து வெளியே போய்விடும் சாக்ரடீஸ் என்பவனாகிய நான்தான் என்று ஒப்புக்கொள்ளமாட்டார். கொஞ்ச நேரத்தில் கீழே கிடக்கப்போகும் உடலை நான் என்றும், என்னை எப்படி அடக்கம் செய்ய வேண்டும் என்றும் கேட்கிறார். என் உடல்தான் இருக்கும். என் ஆவி எங்கே போய்விடும் என்று எவ்வளவு சொல்லியும் அவருக்கு விளங்கவில்லை. அருள்கூர்ந்து அவருக்குச் சொல்லுங்கள்.

நீதிமன்றத்தில் எனக்கு அவர் பொறுப்புத் (ஜாமீன்) தொகை கட்டுவதாகக்கூறி நான் எங்கும் ஓடிவிடமாட்டேன் என்று உறுதி கூறினார். இப்போது நீங்கள் அவருக்குப்பொறுப்பு கொடுங்கள், நான் இருக்கமாட்டேன், போய்விடுவேன் என்று உறுதி கூறுங்கள். (என்று சொல்லி நகைத்தார்)

"இப்படி நீங்கள் அவருக்கு உறுதி தந்தால்தான் என் பிரேதத்தைத் தீயில் போட்டுக் கொளுத்து வதைப் பார்த்தோ—மண்ணில் போட்டுப் புதைப்ப தைப் பார்த்தோ அழாமல் இருப்பார். சாக்ரடீஸை மயானத்துக்கெடுத்துச் செல்கிறோம். சிதையின்மேல் வைக்கிறோம், அல்லது மண்ணில் புதைக்கிறோம் என்று அவர் சொல்லாமலிருப்பார். என் அருமை நண்பனே! கிரிடோ இவ்விதம் பேசுவதெல்லாம் தவறு, தவறான பேச்சுக்களைப் பயன்படுத்தினால் பேச்சு மாத்திரம் கெட்டுப்போவதில்லை. நமது அறிவும் கெட்டுப்போகும். அதனால் துன்பம் உண் டாகும். தைரியமாக இருங்கள். அழாதீர். நீர் என் உடலைப் புதைக்கிறேன் என்று சொல்லாதீர். உம் எண்ணப்படி நீர் எவ்விதம் என் உடலைத் தகனம் செய்ய எண்ணுகிறீரோ அவ்விதமே என் உடலை அடக்கம் செய்யுங்கள். (என்று சொல்லி விட்டு கிரீட்டோவுடன் குளிக்கப் போனார்.)

அந்த நேரம், நம்மைப் பெற்ற தந்தையை இழந்து, நாமெல்லாம் திக்கற்றக் குழந்தைகளாகப் போவதுபோல் தோன்றிற்று. குளித்து வெளி வந்த

வுடன் குழந்தைகளை அழைத்துவரச் சொன்னார். கூடவே சாந்திபேவும் மற்றும்பல பெண்களும் மீண்டும் வந்தார்கள். அவர்களுக்குச் சொல்ல வேண்டிய புத்திமதிகளையெல்லாம் சொல்லியனுப்பி விட்டு மீண்டும் நண்பர்கள் இடையில் வந்து உட்கார்ந்தார். அப்போது மாலை நேரம் நெருங்கி விட்டதால் மனக் குமுறலோடு ஒருவரோடொருவர் பேசாமல் துக்க ரேகைகள் படர மௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள்.

ஓர் அதிகாரி அவர் முன்னால் வந்து நின்று வணக்கம் செலுத்தி—பெரியோய்! மற்றவர்கள் போல் நீர் செய்யமாட்டீர் என்பது எனக்குத் தெரியும். நான் விஷத்தைக் கொடுத்து அவர்களைக் குடிக்கச் சொன்னால் அவர்கள் என்மேல் சினங்கொண்டு திட்டுவதும் தாக்க வருவதும் வழக்கம். அதிகாரி களுடைய கட்டளையை நான் நிறைவேற்றி வைக்க வேண்டியவனல்லவா? நான் என்ன செய்யக்கூடும். நீர் அவ்விதம் செய்யமாட்டீர்கள். இதுவரையில் இவ்விடம் வந்தவர்கள் எல்லோரையும்விட நீர் அன்பும், பெருந்தன்மையும் நிறைந்தவராயிருக்கின் றீர்கள். என்மேல் நீர் கோபங் கொள்ள மாட்டீர் என எனக்கு நிச்சயமாகத் தெரியும். எனக்குக் கட்டளையிட்டவர்களே இந்தப் பெருங் குற்றத்திற்குப் பதில் சொல்ல வேண்டும். என்னை வாழ்த்தி நான் வந்த வேலையை முடித்துத் தாருங்கள். என்று கண்ணீர் விட்டழுதுகொண்டே நின்றான்.

சாக்ர: சகோதரா! எனக்கு உன் மீதோ அல்லது விஷங் கொடுக்கப் பணிக்கப் போகும் அதிகாரியின்மீதோ வருத்தமில்லை. என்னை எப்படியும் கொன்றுவிட வேண்டும் என்ற தீர்மானத்தால் என்மீது வழக்குத் தொடுத்த நண்பர்கள்மீதுகூட எனக்கு வருத்தமில்லை. இயற்கையும், நாட்டு நடப்புகளும் நம்மை எங்கு அழைத்துச் செல்லுகிறதோ, அதன் வழி கைக்கட்டி வாய் புதைத்து நடக்க வேண்டியவர்களே தவிர நாம் வேறொன்றும் செய்யக் கூடாது. அத்தகு உரிமையும் நமக்கில்லை. ஆகையால் என் அன்புள்ள சகோதரா! நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். உன் கடமையை நீ செய்துகொண்டு உத்தமனாய், கடமை தவறாதவனாய் இருக்க வேண்டுமென என் மனம் மொழி மெய்களால் வாழ்த்துகின்றேன். சென்று விஷம் தயாராயிருந்தால் கொண்டுவா. இல்லையென்றால் தயார் செய்து கொண்டுவா. விண்ணகத்தின் கட்டளைப் பிறக்கும் நேரம்.

[மரண தண்டனையடைந்த குற்றவாளி தண்டனையடைவதிற்கு முன்னால் எதை எதை உண்ண வேண்டுமோ? எவ்வகை மதுபானங்களைப் பருக வேண்டுமோ? அவ்வளவும் செய்ய அனுமதிக்கும் பழக்கம் இருந்தது.]

அதைச் சுட்டிக்காட்டி கிரிடோ—" சாக்ரடீஸ்! அவசரப்பட வேண்டாம். சூரியன் இன்னும் மலைவாயில் விழவில்லை. மற்றவர்கள் எல்லோரும் கடைசி

நாளில் நன்ருக சாப்பிட்டும் மது அருந்தியும் மகிழ்ச்சியாக அந்தக் கடைசி நேரத்தைக் கழித்துவிட்டு வெகு நேரம் பொறுத்து விஷத்தைக் குடிப்பார்கள். அதற்குள் நீங்கள் அவசரப்படுகிறீர்கள். நீங்களும் அப்படிச் செய்யலாமே? உங்களுக்கு அந்த உரிமை இல்லையா?

சாக்ர : நிச்சயமாக உண்டு. ஒருவன் வாழ்வில் எவ்வளவு துயரடைந்தாலும் இறுதியில் மரண வாயிலுக்கு முன்னே கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கட்டுமே என்பது நல்லதுதான். ஆனல், நான் என் வாழ்வில் எங்கே துயரடைந்தேன்? எனக்கேன் இந்த மகிழ்ச்சி அப்படியே நான் செய்வதாக ஒப்புக்கொண்டால், அதன் பொருள் என்ன? நானும் மற்றவர்களைப் போல் இன்னும் மனைவி மக்கள் மேல் ஆசை வைத்திருக்கின்றேன். ஆசாபாசங்களை என்னல் விட முடியவில்லை. பந்தபாசத்தை மறக்க முடியவில்லை என்ருகிவிடும் அல்லவா? மற்றவர்கள் அப்படி செய்வது சரிதான். அவர்கள் அந்த சுகங்களை மதித்து எப்போதும் உயிருடன் இருக்க விரும்புவார்கள். அதனல் தாமதமாக விஷத்தைக் குடிப்பார்கள். நான் அப்படிச் செய்யலாமா? உயிரைவிட மனம் வராமல் இன்னும் வாழ நினைக்கும் ஒரு சில நிமிடங்கள் என் வாழ் நாளை நீட்ட நினைப்பதாகாது. அதை நினைக்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது. என்னை அப்படிச் செய்ய தயவு செய்து தூண்டாதீர்கள் என்ருன். கிரிடோ கண் காட்டியதும் அருகிலிருந்த நண்பர்களெல்லாம் வெளியே சென்று விட்டனர்.

ஒரு அதிகாரி விஷக் கோப்பையுடன் உள்ளே வந்தான். ஆம்! அது எம்லாக் (Hemlock) என்ற கொடிய விஷம். நண்பனே இதைக் கொடுக்கும் முறைகளை எல்லாம் நீர் அறிந்தவனாயிற்றே நான் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லுக.

இதை நீர் குடித்துவிட வேண்டும். அதன்பின் கால் மரக்கும்போல் தோன்றுகின்ற வரையிலும் நடந்து கொண்டிருக்க வேண்டும். பிறகு நீர் படுத்துக் கொள்ளலாம். விஷம் தன் வேலையைச் செய்யும் என்று சொல்லி விஷக் கோப்பையைச் சாக்ரடீசிடம் கொடுத்துவிட்டு நின்றான். அவர் அதைக் கையசைக்காமல் முகம் மாறாமல் தம் கையில் வாங்கிக்கொண்டு அதிகாரியை உற்றுப் பார்த்து அப்பா! இந்த விஷம் இவ்வளவுதானா அல்லது நம்முடைய தேவைக்கேற்றபடி செய்துக் கொள்ளலாமா?

அதிகாரி: ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?

சாக்ர: இதில் ஒரு துளி எடுத்து என் தாயகத்தின்மேல் தெளிக்கலாமா என்று தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன்.

அதிகாரி: பெரியவரே! மன்னிக்க வேண்டும். எந்த அளவு கலக்கினால் உங்கள் உயிர் போகுமோ அந்த அளவுதான் கலக்கி இருக்கின்றார்கள். ஒரு துளி எடுத்து விடுவதன் மூலம் உங்கள் உயிர் பிரியாமல் போகலாம். அப்படி நடந்து விடுமானால் அதிகாரிகள் கண்டுபிடித்து என்னைத் தண்டிப்பார்கள்.

ஆகவே, அதிலிருந்து ஒரு துளியும் எடுக்க மாட்டீர்கள், எடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாக்ர : அப்பா ! நீ கொஞ்சமும் கவலைப் படாதே உனக்குத் தீங்கு ஏற்படுகிற முறையில் நான் ஒன்றும் செய்ய மாட்டேன். நன்மையோ, தீமையோ அது என்னையே சாரட்டும். நான் ஒருவித காணிக்கையும் செலுத்தாமல் ஆண்டவனைத் தொழலாமல்லவா? அதற்கு அனுமதி உண்டல்லவா ?

அதிகாரி : அதை நீர் தாராளமாகச் செய்யலாம்.

சரி, நன்றி என்று சொல்லி விஷத்தை வாயில் வைத்துக் கடகடவென்று குடித்து விட்டார். அந்த விநாடி வரையிலும் எப்படியோ துக்கத்தை அடக்கி வைத்துக்கொண்டிருந்த கிரிடோ முதலான நண்பர்கள் வாய் விட்டுக் கோவென அழுதுவிட்டனர். சாக்ரடீஸ் விஷத்தைக் குடித்து முடித்து விட்டான் என்று வெளியே தெரிந்தவுடன் அவன் மன்னிப்புக்காக வாக்களித்தவர் அனைவருமே புலம்பிக் கொண்டிருந்தனர். விஷத்தைத்தான் குடித்தான் சாகவில்லை என்ற சமாதானம் எள்ளளவும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. ஏன்! அவனுக்குக் கொடுத்த விஷம் ஒருதுளி இரண்டு துளிகள் அல்ல. ஒரு கோப்பை. அதுவும் எம்லாக் என்ற கொடிய விஷம். கொலைக் குற்றம் செய்து மரண தண்டனை யடைந்தவர்கள் யாரையுமே அந்த கொடிய விஷம் விட்டு வைத்ததில்லையே. நம் அறிஞனையா விட்டு வைக்கப் போகிறது. ஒருக்காலுமில்லை என்று நண்பர்க

ளனைவருமே அழுதனர். அவருக்கு இந்த கெதி வந்ததென்று அவர்கள் அழவில்லை. அவரை விட்டுப் பிரிகின்றோமே, அவர் நம்மை விட்டுச் செல்கின்றாரே என்பதற்காக அழுதார்கள். ஆனால், சாக்ரடீஸ் அழவில்லை. அவரைத் தவிர மற்ற அனைவருமே அழுதனர். சிறை சிப்பந்திகளும் அதிகாரிகளும் அழுதார்கள்.

சாக்ர : நண்பர்களே! என்ன செய்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆண்களாகிய நீங்கள் பெண்களைப் போல் அழுவது அழகன்று. என் ஆன்மா உடலை விட்டுப் பிரியும்போது நீங்கள் மௌனமாயிருக்க வேண்டும். அன்பு கூர்ந்து என்னை அமைதியாக சாக விடுங்கள் என்று நடந்துக் கொண்டே இருந்தவர், கால் மரத்துப் போனதை யுணர்ந்து படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொண்டார். (அந்த விஷம் பாதத்திலிருந்து உடலின் ஒவ்வொரு பகுதியாக மரத்துப் போகும்படிச் செய்யுமாம்) அதனால் அந்தச் சிறையதிகாரி அடிக்கடி அவர் பாதங்களை அமுக்கிப் பார்த்துக் கொண்டே, தெரிகிறதா — தெரிகிறதா என்று கேட்டுக் கொண்டே வந்தான். ஓரிரு நிமிடங்களில், தெரியவில்லை என்றார் சாக்ரடீஸ். இப்படி உடல் வரவர மரத்துப் போய்க்கொண்டே இருந்தது. மார்பு வரையில் இப்படி மரத்துப் போனதும் அவரே அடிக்கடித் தொட்டுப் பார்த்துக்கொண்டு, "நான் போய்விடுவேன்" என்று சொல்லி விட்டு, கிரிடோ! நான் என் எதிர் வீட்டுக்கார அல்கபிஷேயஸ் என்பவனுக்கு ஒரு கோழி கடன் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்து விடுங்கள் என்றார். அப்படியே

ஆகட்டும். அது நிறைவேற்றப்பட்டுவிடும் என்று சொல்லிவிட்டு இன்னும் ஏதாவது தாங்கள் இட வேண்டிய கட்டளை உண்டா என்று கேட்டான் கிரிடோ. பதில் இல்லை. பேச்சு அடங்கி விட்டது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் உடல் ஒரு அசைவுற்றது. அதிகாரி துணியை எடுத்துப் பார்த்ததில் உயிர் போய் சாக்ரடீஸ் பிணமாகக் கிடந்தார். வாயையும், கண்ணையும் கிரிடோ மூடினார். இதுதான் முடிவு.

" உலகில் நாம் கண்ட ஞானிகளில் தலைசிறந்தவரும், நல்வினையும் நற்பண்பும் கொண்டிருந்தவருமான நமது நண்பர் உயிர் நீத்தார் " என்ற துக்கத்தோடு பிரிந்தனர்.

## சவ ஊர்வலம்

அவனைக் கல்லறைக்கு அழைத்துச் சென்ற வாத்திய கோஷங்கள் வீடு திரும்புவதற்கு முன்னால், அவன் பிரேதத்தின்மேல் போட்ட மாலைகள் வாடுவதற்கு முன்னால், அவன் பிரிவுக்காற்றாது வருந்தி அழுதவர் கண்ணீர்த் திவலைகள் உப்புக்கோடுகளாக மாறுவதற்கு முன்னால், அவனுடைய சிதையிலிட்ட தீ சாம்பலாக மாறுவதற்கு முன்னால், காலமெனும் பெருந் தீ தன் சென்னாக்குகளை ஏதென்ஸ் நகரத்தின் மேல் நீட்டத் தொடங்கி விட்டது, இந்தப் பேரறிஞனைப் பின்பற்றிய இளைஞர்கள் சிலர் தற்கொலை செய்துக் கொண்டனர். என்ன நேருமோ என்று நடுங்கிய அந்த மூவர், (மெலிடஸ், அனிடஸ், லைகோன்) தற்காப்பைப் பலப்படுத்திக் கொண்டனர்.

எங்கும் கலகம் சாக்ரடீசின் சாவுக்காக வாக்களித்தவர் யார் யார் என சந்தேகப் பட்டார்களோ அவர்களை இளைஞர்கள் வெறி கொண்டு தாக்கினர். ஊர் அமைதி கொள்வதென்பது மிகக் கடினமாய் விட்டது. நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்பதே சர்க்காருக்குப் பெருந்தொல்லையாகி விட்டது. ஒரு கூட்டம் நீதிமன்றத்தை நொறுக்கக் கிளம்பி விட்டது. மற்றொரு கூட்டம் சிறைச்சாலையைச் சிதைக்க ஓடுகிறது. எங்கும் சீற்றம் கொண்ட மக்கள் வெள்ளம். இனி அமைதி எப்போது என்ற நிலைக்கு வந்தது ஏதென்ஸ். எத்தனையோ போர்களிலே ஈடு பட்டதுதான் ஏதென்ஸ். பிணக் குவியல்களைக் கண்டு கலங்காதிருந்ததுதான் ஏதென்ஸ். கோட்டைகள் சரிந்ததை, கொத்தளங்கள் அடியற்ற மரம்போல் சாய்ந்ததைக் கண்டதுதான் ஏதென்ஸ். போர்க்களத்தில் மாண்ட வீரர்களின் உற்றார் உறவினர் மட்டுமே அழுதனர் அன்று. இன்று அனைவருமே அழுதுதீர்த்தனர். சாக்ரடீஸ் சிதைக் கிட்ட தீ மக்கள் கண்ணீரை உலர்த்திவிட்டது. சாவெனும் பெருந்தீங்கு சாகரத்தின் புயலோ என்று அஞ்சிய மக்கள் முன்னால், "சாவே வா!" எனச் சாவெனும் சாகரத்தைத் தாண்டியவன் சாக்ரடீஸ். கால எல்லையின் கடைசி கோடு எது என்று குழம்பி யிருந்த மக்கள் முன்னால் சாவின் கடைசி எல்லை இது வெனக்காட்ட விஷக்கோப்பையைக் கையிலேந்திய வன் சாக்ரடீஸ். பிறந்தனர், இறந்தனர், புழுதி மேடாயினர் பலர். வாழ்க்கை இதுவெனக் காட்டிய வன் சாக்ரடீஸ். அதன்படி வாழ்ந்து காட்டியவன்,

இறப்பென்பது இதுவென நாட்டியவன் சாக்ரடீஸ். "செல்வம் அனைவரையும் உயர்த்தி விடுவதில்லை, ஆனால் சீலம் அனைவரையும் உயர்த்தும். தேடிக் கிடைக்கும் செல்வத்தைவிட, தேடியும் கிடைக்காத சீலத்தைத் தேடுங்கள்." என்றழைத்தவன் சாக்ரடீஸ்.

## கல்லறையில்

கல்லறை முழுதும் மக்கள் கடலெனத் திரண்டனர். பிளேட்டோ, கிரிடோ, நிம்மியாஸ் முதலான பெரியோர்கள் கல்லறையின் அருகில் நிற்கிறார்கள். கிரிடோவுக்குப் பேச நாவெழவில்லை. துக்கம் நெஞ்சையடைக்கிறது. எங்கும் அமைதி. சோகக்களை.

## பிளேட்டோ பேசுகிறான்

எனது ஏதென்ஸ் நாட்டு அருமை நண்பர்களே. அறிஞனை எறித்த கைகளோடு நிற்கிறோம். ஒரு நல்லவரை வீண்பழி சுமத்திக் கொன்றுவிட்ட குறை மதி படைத்த நாடு ஏதென்ஸ் என்ற சாபக்கேட்டை நம் தாயகம் பெற்றுவிட்டது. இனி அந்தச் சாபக் கேட்டைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல வழி பிறக்கும் என்ற நம்பிக்கையே நமது அறிவுக்கெட்டியவரையில் புலப்படவில்லை. நாம் சாவோம், சாகடிக்கப்பட மாட்டோம். என்ற துணிவில் யாருமே ஏதென்சில் வாழமாட்டார்கள் என்ற அறிவிப்பைத் தந்து சென்றவனின் கல்லறை முன்னாலே நிற்கின்றோம். நேற்றிருந்தான், இன்று வெந்து நீரானான், நாளை யாரோ என்ற அச்சத்துக்கிடையிலே வாழுங்கள் என்று

சொல்லாமல் சொல்லிச் சென்றுவிட்டான் சொற் செல்வன். நாமறிந்த மட்டில் உலகில் தோன்றிய தத்துவ ஞானிகள் சிலரில் தலை சிறந்தவன் சாக்ரடீஸ். செடியில் மலர்ந்த மலர் கொய்வாரின்றி உதிர்ந்து உலர்ந்துவிடும் தன்மைப் போன்றதல்ல சாக்ரடீஸ் உயிர். அவனுடைய ஒரே ஒரு உயிர் எத்தனையோ உயிர்களை மேம்பாடடையச் செய்திருக்கிறது. அந்த மேன்மக்களை இனி காலந்தான் காப்பாற்ற வேண்டும். இறந்தவன்மேல் ஆணையாக அவன் விட்டுச் சென்ற அறிவாலயத்தைக் காப்போமாக! அவன் பொன்னடி களைப் போற்றுவோமாக.

நமக்கும் ஓர் நாள் இந்த முடிவுதான் என்று கண்ணீர் வழிகாட்ட அனைவரும் கலைந்து சென்றனர்.

முற்றிற்று.

உலகப் பதிப்பகம்

31, தையப்ப முதலி தெரு,
சென்னை - 1.
தொலைபேசி: 22913